விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 24 ஞாயிற்றுக்கிழமை (08.07.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 202

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## தமிழர்கள் பெற்ற யுத்த வடுக்களை

## காலமும், பணமும் குணப்படுத்தாது

### அரசுக்கு இது புரியவேண்டும் -அமெரிக்க ஊடகம்

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரதேசங்களில் புதிய வீதிகளை அமைத்தல், விடுதிகள், பாடசாலைகள் போன்றவற்றை நிர்மாணித்தல், சுற்றுலாத்துறையை மேம்படுத்தல் போன்றவற்றுக்காக பெருமளவு நிதியை இலங்கை அரசு வாரியிறைக்கின்றது. இது எதற்காக என பார்க்கும்போது, இனிவரும் காலத்தில் இந்தப் பிரதேசங்களில் ஏற்படும் அபிவிருத்தியால் யுத்த வடுக்களை குணப்படுத்த முடியும் என இலங்கை அரசு கூறி வருகின்றது. ஆனால் அது சாத்தியப்படக்கூடியதல்ல என அமெரிக்காவினைத் தளமாகக் கொண்ட தி வோசிங்டன் போஸ்ட் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## இன்னும் பல சவால்கள் உள்ளன -ஜனாதிபதி

கௌரவமான சமாதானத்தை நாட்டில் ஏற்படுத்தி மாற்று இலங்கையை உருவாக்க வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் இன்னும் வெற்றிபெற வேண்டிய பல சவால்கள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்கான விசேட பயிற்சி கருத்தரங்கினை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார். (19ஆம் பக்கம் பார்க்க)

## மற்றொரு படகும் கிறிஸ்மஸ் தீவில்!

இலங்கை அகதிகள் 32 பேரைக் கொண்ட மற்றுமொரு படகு அவுஸ்திரேலியா, கிறிஸ்மஸ் தீவை சென்றடைந்துள்ளதாக அவுஸ்திரேலிய செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் படகில் 31 ஆண்கள் மற்றும் ஒரு பெண்ணும் இருந்ததாகவும் சிறிய மீன்பிடி படகிலேயே இந்த 32 பேரும் பயணித்துள்ளதாகவும் (19ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு வரும்; அரசு நம்பிக்கை!

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இணைந்து கொள்வார்கள் என அரசு நம்பிக்கை வெளியிட்டுள்ளது. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கூட்டமைப்பினர் எப்போதும் கலந்து கொள்ள முடியும். அதற்கான கதவுகள் திறந்தே வைக்கப்பட்டுள்ளன என அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ந-8,11)

## தேர்தலில் அளித்த வாக்குறுதிகளை மகிந்த அரசு நிறைவேற்றவில்லை

### விக்கிலீக்ஸ் தகவல்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தல் வாக்குறுதிகளை உரிய முறையில் நிறைவேற்றத் தவறியுள்ளதாக அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டு ஓராண்டு கடந்த நிலையில் அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக்கினால் அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் காலத்தில் அளிக்கப்பட்ட பல வாக்குறுதிகள் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை என பிளேக் தனது குறிப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் தெளிவான தீர்வுத் திட்டமொன்றை ஜனாதிபதி (19ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு மரணதண்டனை

சிறுவர் துஷ்பிரயோகத்தினை குறைப்பதன் பொருட்டு சட்டத்தினை கடுமையாக்க வேண்டியது அவசியம் என்று சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

இவ்வாறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் சிலருக்கு மரண தண்டனை வழங்குவதன் மூலம் நிலைமையை சற்று கட்டுப்படுத்த முடியும் என்றும் அமைச்சர் யோசனை தெரிவித்துள்ளார்.

இதனிடையே (19ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் எந்தப் பகுதியிலும் இலங்கைப் படை இருக்கக்கூடாது

### மீண்டும் தாக்குகிறார் ஜெயா

(சென்னை)

இந்தியாவின் எந்தப் பகுதியிலும் இலங்கைப் படையினருக்கு பயிற்சி அளிக்கப்படக் கூடாது என தமிழக முதல்வர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார்.

9 இலங்கைப் விமானப்படை வீரர்களுக்கு தாம்பரம் பகுதியில் அளிக்கப்பட்ட பயிற்சி தற்போது பெங்களூருக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.


இந்நிலையில் குறித்த இலங்கை விமானப் படை உத்தியோகத்தர்களை நாடு கடத்துமாறு ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார்.

தாம்பரத்திற்கு பதிலாக பெங்களூரில் இலங்கைப் படையினருக்கு பயிற்சி அளிப்பதனை தமிழக மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைப் படையினரை நாடு கடத்துமாறும், இந்தியாவின் எந்தவொரு பகுதியிலும் பயிற்சி அளிக்கக்கூடாது எனவும் ஜெயலலிதா இந்திய மத்திய அரசாங்கத்திடம் மீளவும் கோரியுள்ளார்.

இலங்கையின் (19ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் நாளை யாழ்ப்பாணம் விஜயம்



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் ஜோன் ரன்கின் உள்ளிட்ட குழுவினர் நாளை திங்கட்கிழமை யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் மேற்கொள்ளும் பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் ரன்கின், அந்நாட்டு அரசியல் விவகாரங்களுக்கான செயலர் திருமதி எம்.அஸ்வியோ உள்ளிட்ட குழுவினர் யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவை காலை 9 மணியளவில் பலாலி படைத் தலைமையகத்தில் சந்தித்து குடாநாட்டின் நிலைவரம் குறித்து கலந்துரையாடவுள்ளனர்.

பின்னர் நெடுந்தீவு சென்று அங்கு மக்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளதோடு கடற்படை அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளனர். (19ஆம் பக்கம் பார்க்க)

### மன்னாரில் ஒலித்த உரிமைக்குரல்

## 'எங்கள் நிலத்தில் எங்களை வாழ விடு'

வடக்கில் தொடர்ந்து கொண்டிருக்கும் இராணுவத்தினரின் நில ஆக்கிரமிப்பு மற்றும் சிங்கள குடியேற்றம் ஆகியவற்றை எதிர்த்து தமிழ்க் கட்சிகள் மேற்கொண்டுவரும் தொடர் போராட்டங்களில் ஒன்று நேற்று மன்னார் நகரிலும் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டமாக இடம்பெற்றது.

கூட்டமைப்பின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் மாவட்டச் செயற்பாட்டாளர்களின் ஏற்பாட்டில் மன்னார் நகரிலுள்ள சிறுவர் பூங்கா வளாகத்தில் நேற்று காலை 10 மணிக்கு ஆரம்பமான மேற்படி கவன்யீர்ப்பு போராட்டம் பிற்பகல் 1 மணிவரையில இடம்பெற்றது. இதன்போது மன்னார் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த சுமார் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் (19ஆம் பக்கம் பார்க்க)

## நிமலரூபனின் சடலம் கொழும்பில் அடக்கம்

### பெற்றோர் எதிர்ப்பு

(புதுடில்லி)

சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்த வவுனியாவைச் சேர்ந்த அரசியல் கைதியான கணேசன் நிமலரூபனது, சடலத்தை அவரது பெற்றோரிடம் வழங்காது கொழும்பு, கடவத்தை பொது மயானத்தில் புதைக்கப்பட்டது மனித உரிமை மீறல் என் ஆசிய மனித உரிமைகள் ஆணையகம் குற்றம் சுமத்தியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர் என்ற அடிப்படையில் நீண்ட காலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிமலரூபன் அண்மையில் படுகொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பில் அவரது பெற்றோருக்கு அறியப்படுத்தியபோது, இத்தனை நாட்களாக தமது மகன் எங்கிருந்தார்? அவருக்கு என்ன நடந்தது? போன்ற விடயங்கள் குறித்து தாம் அறிந்திருக்கவில்லை என தெரிவித்த பெற்றோர், மகனை கொழும்பில் அடக்கம் செய்வதற்கு எதிர்ப்பைத் (19ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இவரா? இங்கா? இப்படியா?

(பூநகரி)

பூநகரி சோபாலபிட்டி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய கும்பாபிஷேக நிகழ்வின் போது வேறு ஆலயமொன்றில் பூசைசெய்யும் அந்தணர் ஒருவர் மதுபோதையில் சென்று கும்பாபிஷேக கிரியைகளில் ஈடுபட்டிருந்த குருக்கள் ஒரு வரை தாக்கியுள்ளார்.

மேற்படி ஆலய கும்பாபிஷேகத்தின் முதல்நாள் இரவு யாகபூசை நடைபெற்ற வேளையில் திடீரென ஆலயத்திற்குள் வந்த அந்தணர் ஒருவர் குருக்கள் ஒருவரின் பேரைச் சொல்லி அழைத்து அவரைத்தாக்கியுள்ளார்.

அங்கு நின்ற பக்தர்கள் அதனை தடுத்து நிறுத்தியபோது கடும் வாக்குவாதத்தில் பிரஸ்தாப அந்தணர் ஈடுபட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் உடனடியாக பூநகரி பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து சம்மந்தப்பட்ட அந்தணர் மறைவிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் ஏறி தப்பிச்சென்றுள்ளார். இது தொடர்பில் பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (ரு-84)

# இலங்கை படை தொடர்பில் தமிழகத்தின் எதிர்ப்பால் தவிக்கிறது இலங்கை அரசு

(சென்னை)

தமிழகத்தின் எதிர்ப்பினால் பயிற்சிகளை இடைநடுவில் நிறுத்தி இலங்கை விமானப் படையின் ஒன்பது அதிகாரிகளை திருப்பியனுப்ப இந்திய மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கையானது கவலையளிக்கின்றது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத் துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் மிக நீண்டகால நல்லுறவே நிலவுகின்றது. ஆனால் அரசியல் நோக்கங்களினால் இவ்வாறான கசப்பான சம்பவங்களும் இடம்பெற்று விடுகின்றன.

இலங்கையின் விமானப் படை அதிகாரிகள் ஒன்பது பேர் சென்னையில் உள்ள தாம்பரம் விமானப்படை தளத்தில் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழக முதல்வர் ஜெயலலிதா மத்திய அரசுக்கு கடிதம் எழுதி இலங்கை விமானப்படை அதிகாரிகளை உடனடியாக இந்தியாவை விட்டும் வெளியேற்றுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இதற்குப் பின்னரும் பல தரப்புக்கள் எதிர்ப்புப் போராட்டங்களை தமிழகத்தில் நடத்தியதுடன் சிலர் தாம்பரம் விமானப்படைத்தளத்தை முற்றுகையிடவும் முற்பட்டுள்ளனர். உண்மையில் இப் போராட்டங்களோ நடவடிக்கைகளோ நியாயமற்ற விடயமாகும்.

ஏனெனில் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் மிக நெருங்கிய நீண்டநாள் உறவுகள் உள்ளன. இதனைப் பாதுகாக்க வேண்டியது இரு தரப்பினரதும் கடமையாகும்.

இலங்கைப் படையினர் இந்தியாவில் பயிற்சிகளில் ஈடுபடுவது இது முதற்தடவையல்ல. கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இரு நாட்டு இராணுவ ஒத்துழைப்புக்கள் இடம்பெறுகின்றன குறிப்பிட்ட ஒன்பது இலங்கை விமானப்படை அதிகாரிகளை திருப்பி அனுப்பியமை கவலையளிக்கின்றது.

எவ்வாறாயினும் மேற்படி வெளியேற்றம் குறித்து இந்திய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அறிவிப்பு வந்தவுடன் அது குறித்து ஆராய்வோம் என்றார் ஹெகலிய. (ரு-8,11)

# ஒற்றுமை இல்லாததால்தான் தமிழருக்கு பேரழிவு வந்தது

## புரிந்துகொள்ளுங்கள் என்கிறார் - ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

(சென்னை)

வட அமெரிக்கதமிழ்ச்சங்க பேரவையின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு வாழும் கலை ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் பேசுகையில் தமிழர்களுக்குள் ஒற்றுமை இல்லாதது தான் பெரிய பிரச்சினை.

இலங்கை தமிழர்களின் பேரழிவுக்கு முன்னர் நான் ராஜபக்ஷவை சந்தித்தேன். சமாதான முயற்சிகள் குறித்து அவரிடம் கோரிக்கை வைத்தேன் ஆனால் அதற்கு அவர் செவிசாய்க்கவில்லை.

தொடர்ந்து இலங்கை அரசு பாதுகாப்பு உத்தரவாதம் கொடுக்காத நிலையிலும் பிரபாகரனை சந்திக்க முயற்சி செய்தேன்.

ஹெலிகொப்டர்மூலம்கிளிநொச்சிவரைசென்று இரண்டு நாட்கள் காத்திருந்தேன். ஆனால் பிரபாகரனை சந்திக்க இயல வில்லை. அவரை சந்தித்திருந்தால் சிலவேளை சமாதான முயற்சி வெற்றி பெற்றிருக்கக்கூடும். பேரழிவும் தடுக்கப்பட்டிருக்கும்.

விடுதலை என்பது மிகவும் முக்கியமானது. அதை பெறுவதற்கு யுத்தி, சக்தி, அமைதி வேண்டும். முரட்டுபிடிவாதத்தினால் போரை வெல்ல முடியாது. தந்திர யுத்திகளால் தான் வெல்ல முடியும்.

ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டது தமிழ் வரலாற்றில் பெரிய கறுப்பு தினம். மனிதத் தன்மை அற்ற விஷயம். இந்திய அரசு நினைத்திருந்தால் பேரழிவு தடுக்கப்பட்டிருக்க முடியும்.

அரசியல்வாதிகள் தங்கள் சுயநலத்திலேயே கண்ணும் கருத்து கொண்டுள்ளார்கள். மக்கள் பற்றிய சிந்தனை இல்லாதவர்களாக இருக்கிறார்கள்.

போருக்கு பிறகு அகதிகளாக இருந்த மக்களை சந்தித்து ஆறுதல் சொன்னேன். தமிழர்கள் அந்த நிலையிலும் பண்பாடாக நடந்து கொண்டது வியக்க வைத்தது.

இனிவரும் காலங்களிலாவது தமிழர்கள் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி, எல்லோரும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்றார். (ரு,8,11)

**சேவை முகவர்**

காணிகள், வீடுகள், விற்பனைக்கு

பழம் றோட், பலாலி வீதி, கச்சேரியடி 5 பரப்பு, A-9 நுணாவில் தென்னந் தோட்டம் 21 பரப்பு, ஆகிய இடங்களில், யாழ்., நல் லூர், கொக்குவில், கோண்டாவிலில் விற்க விரும் புவோர்;

தொடர்பு சுந்தரம்: 0774819801 (8779)

**கடை வாடகைக்கு**

ஸ்ரான்லி வீதியில் சகல வசதியும் உள்ள கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-

0774767213 (8780)

**மணமகள் தேவை**

வெளிநாட்டில் PR பெற்ற, இந்து, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு 34 வயதுக்குட்பட்ட அழகிய, படித்த மணமகள் தேவை.

விபரங்களுக்கு:

Email: goldentime2013@yahoo.com

T.P:- 0016475322773 (8720)

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

WP-xxxx எனும் தொடர் இலக்கத்தினையுடைய TVS கறுப்பு நிற அப்பாச்சி (Apache) 180 RPR மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

0773690938 (C-443)

**NEWZEALAND இல் உயர்கல்வி**

SEPTEMBER IN TAKE

நியுசிலாந்தில்செப்ரெம்பர் மாதத்தில் ஆரம்பமாக இருக்கும் Diploma கற்கைநெறிக்கு தற்போது மாணவர்களை அனுப்புவதற்கான ஒழுங்குகள் விரைவாக நடைபெறுகிறது.

தகைமை :- G.C.E. O/L ஆறு பாடங்களில் சித்தி. IELTS தேவையில்லை. இரண்டு வருட Visa பெற்றுக் கொடுக்கின்றோம். அதன் பின்பு அங்கு நிரந்தரமாக வசிப்பதற்குரிய நிரந்தர வதிவிட அனுமதியையும் பெற்றுக் கொடுப்பதுடன் உங்கள் குடும்ப அங்கத்தவர்கள் எல்லோரும் குறுகிய காலத்தில் நியுசிலாந்தில் குடியேற முடியும்.

Canada வில் உயர்கல்வியை / Skilled Migration தகுதி அடிப்படையில் குடியேற விரும்புபவர்கள் குறைந்தது இரண்டு வருட காலத்துக்குள் குடியேறுவதற்கான ஒழுங்குகளை நாம் எமது ஸ்தாபனத்தின் மூலமாக செய்து கொடுக்கின்றோம். இதற்கான தகுதி என்ன என்பதை எம்முடன் தொடர்பு கொண்டு பூரணமான விளக்கத்தை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான தகுதியுடையவர்கள் அவர்களது குடும்பத்துடனேயே Canada வில் குடியேறலாம்.

**சிங்கப்பூரில் உயர்கல்வி**



BACHELOR / DIPLOMA

Hospitality & Tourism Management பட்டம் பெறுபவர்கள் குறுகிய காலத்தில் Canada வில் குடியுரிமை பெற்றுக்கொள்வதற்கு நாம் ஒழுங்குகள் செய்து கொடுக்கின்றோம்.

தகைமை : G.C.E. O/L ஆறு பாடங்கள் மட்டும்

கட்டணம் : ரூபா 400,000 ஒரு வருடத்துக்கு சிங்கப்பூரில் கல்வியை கற்கும் காலத்தில் அங்கு Part - Time Work செய்வதற்குரிய ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். மாதாந்தம் 65,000 வரை வருமானம் பெற்றுக் கொள்ளலாம்.

Colombo இல் தலைமையகத்தைக் கொண்டுள்ள எமது ஸ்தாபனம் தற்போது அதன் கிளையை யாழ் மண்ணில் ஆரம்பித்து இருக்கின்றது. ஆகவே உங்களுக்கு தேவையான மேலதிக விபரங்களை எம்மை நேரில் யாழ்ப்பாணத்தில் சந்தித்து பெற்றுக் கொள்ளலாம்.



Rainbow Travels
113, Chatham st.
Colombo 01

Branch Jaffna
Rainbow Travels
30/2, Third Lane,
Power House Road, Jaffna.
T.P.: 0778980652, 0212219596 (C-440)

**வாகனம் வாடகைக்கு கொடுக்கப்படும்**

15,000 km ஓடிய
Full body அடித்த
இமோ வாகனம்
மாத வாடகைக்கு உண்டு.

Phone Number -
0773762934 (8774)

**கண்டெடுத்தவர்கள் அறியத் தரவும்**

து. அருளானந்தம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (820785185V), சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் யாழ்ப்பாணத்திற்கும் சங்கானைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு கூர்ந்து பின்வரும் T.P இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

TP:- 0771874502 (8778)

காரைநகர் வியாவில்பதி ஆதிஷேத்ரம்
திருவருள்மிகு பூரணா புஷ்கலா சமேத ஹரிஹரபுத்ரா

**ஐயப்ப சுவாமி தேவஸ்தானம்**

**திவ்விய மகோற்சவ விஞ்ஞாபனம் - 2012**

**கிரியாகால நிகழ்வுகள்**

09.07.2012 ஆனி மாதம் 25ஆம் நாள் திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு அபிஷேகம், விசேட பூஜை, 10.00 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை, 1.00 மணிக்கு கொடியேற்றம், நவசந்தி ஆவாகனம் மாலை 6.00 மணிக்கு மஹா சாஸ்தாயாகபாரம்பம்.

16.07.2012 ஆடி மாதம் 1ஆம் நாள் திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு வேட்டைத் திருவிழா இரவு 8.00 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை, சகோபுர உற்சவம்.

17.07.2012 ஆடி மாதம் 2ஆம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு அபிஷேகம், விசேட பூஜை, 8.00 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை, 10.00 மணிக்கு இரதோற்சவம் 12.00மணிக்கு பச்சை சாற்றி இரத அவரோகணம், பிராயச்சித்த அபிஷேகம்.

18.07.2012 ஆடி மாதம் 3ஆம் நாள் புதன்கிழமை ஆடி அமாவாசை விரதம். காலை 6.00 மணிக்கு அபிஷேகம், சுவாமி தீர்த்தமாட செல்லும் விசேட பூஜை. 8.00 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை, கொடியிறக்கம், சந்தி விமர்சனம், மௌன உற்சவம், ஆச்சாரிய உற்சவம் அருளுரை.

19.07.2012 ஆடி மாதம் 4ஆம் நாள் வியாழக்கிழமை மாலை 7.00 மணிக்கு ஊஞ்சல், உள்வீதி உற்சவம், திருக்கல்யாணம், வெளிவீதி உற்சவம்.

ஆலய பரிபாலன சபை
காரைநகர் (C-439)

விளம்பர அனுசரணை: கஜமுகன் ஹாட்வெயார்

## பீடி விற்ற 16 பேருக்கு 73 ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

21 வயதுக்குட்பட்டவர்களுக்கு பீடி விற்ற 16 வர்த்தக உரிமையாளர்களுக்கு யாழ்.நீதிமன்று 73 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

குறித்த 16 வர்த்தக உரிமையாளர்களுக்கு எதிராக யாழ். மதுவரித்திணைக்களத்தினால் யாழ்.நீதிமன்றில் வழக்கு தொடுத்திருந்தார்.குறித்த வழக்கு நேற்று முன்தினம் யாழ்.நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கினை விசாரணை செய்த நீதவான் குறித்த 16 பேருக்கும் 73 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். குறித்த வர்த்தகர்கள் யாழ்.நகரினையும் அதனை அண்டிய பகுதிகளையும் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-4)

## யாழ்.கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம், யா/சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய இரு பாடசாலைகளிலும் அதிபர் பதவி வெற்றிடங்கள் உள்ளதாக யாழ். வலய கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

வெற்றிடமாகவுள்ள யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம், யா/சிறுப்பிட்டி இ.த.க.பாடசாலை அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் பணிபுரியும் அதிபர் சேவை உத்தியோகத்தர்களிடமிருந்தும் அதிபர் நேர்முகத் தேர்விற்கு தோற்றிய ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அதிபர் பதவிக்கு அதிபர் சேவை உத்தியோகத்தர்களும் யா/சிறுப்பிட்டி இ.த.க. பாடசாலை அதிபர் பதவிக்கு அதிபர் சேவை உத்தியோகத்தர்களும் அதிபர் நேர்முகத் தேர்வுக்கு தோற்றிய ஆசிரியர்களும் விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன் யா/சிறுப்பிட்டி இ.த.க.பாடசாலையின் வெற்றிடத்திற்கு அதிபர் சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காதவிடத்து மாத்திரமே ஆசிரியர்கள் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். அதிபர் சேவையில் விண்ணப்பிப்பவர்கள் தற்போதைய பாடசாலையில் மூன்று வருடங்கள் பூர்த்தி செய்திருக்க வேண்டும். சேவை நீடிப்பில் உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியாது.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் வலயக் கல்வி அலுவலக நிர்வாக கிளையில் விண்ணப்பப் படிவத்தை பெற்று எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-9)

## கஞ்சா வைத்திருந்தவருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

கஞ்சாவை தன்வசம் வைத்திருந்த நபருக்கு யாழ்.நீதிமன்றம் 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது. இராசேந்திரம் வீதி குருநகரைச் சேர்ந்த குறித்த நபர் அதேயிடத்தில் 122 கிராம் கஞ்சாவை வைத்திருந்தவர் என்ற குற்றச்சாட்டில் யாழ்.பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

குறித்த நபரை விசாரணை செய்த யாழ்.நீதவான் மா.கணேசராசா குறித்த நபருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 4 மாத சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார். (அ-4)

## ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைகளில் புதிதாக நியமிக்கப்பட்ட தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரியர்கள், தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு யா/இந்து மகளிர் கல்லூரியில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் புதிதாக நியமிக்கப்பட்ட அனைத்து ஆசிரியர்களும் புதிய பாடசாலைகளில் கடமையேற்ற கடிதங்களுடன் வருகை தருமாறும் வடமாகாணத்தின் சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களையும் கலந்து கொள்ளுமாறும் வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (அ-9)

## வாரம் ஒரு தகவல்

## மாடும் மனிதனும்

"அண்ணே! பொழுது சரியாக விடியவில்லை... அதற்கு முன்னரே துயில் விட்டெழுந்து இங்கே வந்து என்ன செய்கிறீர்கள்?"

"அது வந்து... சும்மா இப்படி இந்தக் கோயில் பக்கம் வந்தேன். இந்த பசுமாடு இங்கே தனிமையில் நின்று கொண்டிருந்தது. உரிமையாளர் யாரையும் காணவில்லை... அதுதான் பால் கறந்து கொண்டு போகலாமா என்று பார்க்கிறேன்..."

"மாடுகளிடம் இனிமேல் மனிதர்கள் பால் கறக்க வேண்டிய அவசியம் இல்லை..."

"என்ன சொல்கிறீர்கள்?"

"மனித இயந்திரம்... அதுதான்... 'ரோபோ' இனிமேல் அந்தக் காரியத்தை செய்து விடும்!"

"கேட்க ஆச்சரியமாக இருக்கின்றதே?"

"டச்சு நாட்டு விஞ்ஞானி ஒருவர் கணனி மூலமாக இயங்கக்கூடிய ஒரு 'ரோபோ'வை உருவாக்கி இருக்கிறாராம்...!"

"அப்படியா?"

"ஆமாம்! நெதர்லாந்து நாட்டிலே பாற்பண்ணைகள் அதிகமாக இருக்கின்றன. அங்கே காலையிலே அந்த இயந்திரம் வரிசையாக நிற்கின்ற மாடுகளிலே பால் கறந்து சேமிக்க வேண்டிய இடத்திலே சேமித்து வைத்துவிடும். மாடுகளின் கழுத்திலே அடையாளச் சின்னங்கள் தொங்க விடப்பட்டிருக்கும். அது கணனியுடன் இணைக்கப்பட்டிருக்கும். ஒரு மாடு எந்த நேரத்திலே அதிகமாக பால் கறக்கும் என்கின்ற விபரத்தை கணனி தெரிவிக்கும்... உடனே அந்த இயந்திரம் போய் பாலைக் கறந்து கொள்ளும்!"

"அண்ணே...! தெரியாமல்தான் கேட்கிறேன்... இந்த விபரங்கள் எல்லாவற்றையும் ஏன் என்னிடம் சொல்கிறீர்கள்!"

"பால் கறப்பதற்குத்தான் இயந்திரம் வந்திருக்கின்றதே தவிர பால் கொடுப்பதற்கு இன்னும் இயந்திரம் வரவில்லை என்பதை நீ புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்"

"என்ன சொல்கிறீர்கள்?"

"இது உயிருள்ள பசுமாடு இல்லை...'சிலை!' என்றார்.

"நீங்கள்...?"

"நான்தான் இந்த சிலையை செய்து கொண்டிருக்கின்றேன்... வால் பகுதியில் சிறிது வேலை இருக்கின்றது. அதன் நிமிர்த்தம்தான் வந்தேன்!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

08.07.2012

(ஆனி 24, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு

பஞ்சமி முன்னிரவு 8.25 மணிவரை

சதயம் பிற்பகல் 3.40 மணிவரை

இராகுகாலம் 4.28-5.58 மணிவரை

சுபநேரம் 8.58-10.28 மணிவரை

**மேடம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் அதிகரித்து வளம் காணும் நாள், புதிய தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்** இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், கண்ணனை வழிபட்டு நன்மை காண வேண்டிய நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்** கூட்டுத் தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்.

**கடகம்** உதவுவதாகச் சொன்ன உறவினர்கள் உங்களை விட்டு விலகலாம், வாழ்க்கைத் துணை வழியே சில கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிங்கம்** கனவு பலிதமுண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை எளிதாக நிறைவேற்றுவீர்கள், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கலாம், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்.

**கன்னி** எதிரிகள் உதிரியாகும் நாள், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**துலாம்** புதிய தொழில் தொடங்க எடுத்த முயற்சி வெற்றியளிக்கும், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகி நிம்மதியைக் கொடுக்கும், புண்ணிய கருமங்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, பாராட்டும் புகழும் கூடும், வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

**தனுசு** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயரும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், கௌரவமான நாள்.

**மகரம்** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், புதிய தகவல்கள் வந்து சேரலாம், காணாமல் போன பொருளொன்று கைக்கு கிடைக்கலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**கும்பம்** உறவினர் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், மறக்க முடியாத இனிய சம்பவமொன்று இடம் பெறலாம்.

**மீனம்** பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், அந்நிய தேசச் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும், உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம்.

வளவன்

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 120 | 70 |
| உருளைக்கிழங்கு | 75 | 90-110 | 80 |
| பச்சைமிளகாய் | 120 | 140 | 140 |
| தக்காளி | -- | 160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 40-50 | 40 | 40 |
| கோவா | -- | 80 | 80 |
| கரட் | 100 | 140 | 150 |
| பூசணி | 60-70 | 60 | 60 |
| புடோல் | 50-60 | 40 | 60 |
| வாழைக்காய் | 50-60 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 120 | 80-100 | 100 |
| பெரிய வெங்காயம் | 85 | 90 | 80 |
| பாகற்காய் | 100 | 140 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 90 | 90 |
| கருணைக் கிழங்கு | -- | 140 | -- |
| பயற்றங்காய் | 80 | 80 | 40 |
| லீக்ஸ் | 140 | 60 | 150 |
| பீற்றூட் | -- | 60 | 100 |
| கறிமிளகாய் | -- | 90 | 160 |
| முருங்கைக்காய் | 80-90 | 100 | 100 |
| போஞ்சி | -- | 170 | 160 |
| கத்தரிதம்புள்ள | -- | 100 | -- |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 20 |
| தேசிக்காய் | 80-90 | 110 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 30 | 18-20 |

# கிளிநொச்சி மாவட்டத்தில் தென்னை மானியத்திட்டம்

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் சிப்நன/ கப்பு றுக்க புறவற திட்டங்களின் மூலம் தென்னை மானிய நடுகைத்திட்டம் ஆரம்பிக்கப்பட வுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட தென்னை அபிவிருத்தி அலுவலர் ஜே.கந்தியேந்திரன் அறிவித்துள்ளார்.

1/4 ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரையிலான இத்திட்டம் அமையவுள்ளது. இதற்கு இலவச மானியங்களின் அடிப்படையில் தென்னங் கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

சிப்நன திட்டத்தின் கீழ் தரம் 6 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தலா இரு தென் னங்கன்றுகள் வீதம் அனைத்து பாடசாலை களுக்கும் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப் படுகின்றது.

இவை தொடர்பான மேலதிக விபரங்க ளுக்கு வாரத்தில் புதன்கிழமைகளில் கிளி நொச்சி மாவட்ட செயலகத்தில் உள்ள தென்னை அபிவிருத்தி சபை அலுவலகத்தில் தொடர்பு கொள்ள முடியும் என அவர் குறிப் பிட்டார். (அ-254)

# வாய்க்காலுக்கு அருகில் மலக்குழி அமைப்பு

## நடவடிக்கை எடுக்கக்கோரிக்கை

(சிவநகர்)

கரடிப்போக்கு எரிபொருள் நிரப்பு நிலை யத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள உணவு விடுதியின் பாவனைக்காக கட்டப்பட் டுள்ள மலசலகூடத்தின் குழி நீரோடும் வாய்க் காலுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்ற னர்.

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழான வாய்க்கால் கரடிப்போக்கு சந்திக்கு அருகாமையாக உருத்திரபுரம் ஊடாக குஞ் சுப் பரந்தனை நோக்கிச் செல்கின்றது.

இவ்வாய்க்காலுக்கு அருகில் மலக்குழி அமைவதால் வாய்க்கால் நீரைப் பயன்படுத் தும் மக்களுக்கு நீர்மூலமான நோய்கள் ஏற்படும் என எதிர்வு கூறப்படுகின்றது.

வறட்சியான காலங்களில் இப்பிரதேச மக்கள் வாய்க்கால் நீரை பயன்படுத்தி வருகி ன்றமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

எனவே கரைச்சிப் பிரதேசசபையின் சுகாதார பகுதியினர் இவ்விடயத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (அ-254)

# மீள்குடியமர்ந்த முள்ளிக்குளம் மக்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை

## வினோ எம்.பி. சுட்டிக்காட்டு

(மன்னார்)

மளங்காடு பகுதியில் குடியேறியிருக்கும் முள்ளிக்குளம் மக்களுக்கான அடிப்படை வசதிகள் துரித கதியில் செய்து கொடுக்கப் படல் வேண்டும் என பாராளுமன்ற உறுப் பினர் எஸ். வினோநோதராதலிங்கம் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில்,

கடந்த 2007 ஆம் ஆண்டு முசலிப் பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக அப்பகுதியில் இரு ந்து பொதுமக்கள் வெளியேறியிருந்தனர்.

நாட்டின் வட பகுதியான வன்னிப் பிர தேசத்தின் மீது முன்னெடுக்கப்பட்ட இறுதிக் கட்ட இராணுவ நடவடிக்கையினை தொடர் ந்து பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் முடிவடைந்ததாக அரசாங்கம் அறிவித்தி ருந்தது.

இதனைத் அடுத்து மீள்குடியேற்ற நட வடிக்கைகள் அரசாங்கத்தினால் கட்டம் கட்ட மாக முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றது. ஆயினும் முசலிப் பிரதேசத்தின் முள்ளிக் குளம் கிராமத்தை தவிர்ந்த ஏனைய கிராமங் களில் தமிழ், முஸ்லிம் குடும்பங்கள் மீள் குடியேறியிருக்கின்றன.

ஆயினும் அங்கு அவர்களுக்கு தேவை யான அடிப்படை வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை. இந்நிலையில் அவர்க ளது அன்றாட வாழ்வியல் காடுகளுக்குள் ளேயே இடம்பெற்று வருகின்றது.

முள்ளிக்குளம் மக்கள் இடப்பெயர்விற்கு உள்ளாகும் போது எவ்வாறு அங்கிருந்து வெளியேறினார்களோ அதேபோன்று தான் தற்போதைய மீள் குடியேற்றத்தையும் பார்க்க வேண்டியதாக அவர் தெரிவிக்கின்றார்.

குடியேறியிருப்பவர்களில் பெண்களும் உள்ளடங்கியிருப்பதால் அவர்களில் வயோதி பர்கள், கர்ப்பிணிகள், கைக்குழந்தை, தாய் மார்கள் போன்றவர்களின் தேவைகள் கருத் தில் கொள்ளப்பட வேண்டும்.

எனவே அரசாங்கமும் அரசுசாரா அமைப்புக்களும் குடியேறியிருக்கும் இம் மக்களது நலனில் கரிசனை கொண்டு அவர்களுக்கு தேவையானவற்றை செய்து கொடுக்க முன்வர வேண்டும் என பாராளு மன்ற உறுப்பினர் எஸ். வினோநோதராத லிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-2)

# தமது வசமிருந்த 180 ஏக்கர் காணியை பொதுமக்களுக்கு இராணுவம் வழங்கியது

(கொழும்பு)

யுத்தம் இடம்பெற்றபோது வவுனியாவில் தற்காலிகமாக இராணுவ முகாம்கள் அமைக் கப்பட்டிருந்த பொதுமக்களுக்குச் சொந்த மான காணிகள் மீண்டும் அவர்களிடம் கைய ளிக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போது அங்கு வீடமைப்பு பணிகள் உள்ளிட்ட அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக் கப்படுகின்றது.

வவுனியா மாவட்டத்தில் இராணுவ முகாம் கள் அமைக்கப்பட்டிருந்த சுமார் 180 ஏக்கர் காணி தற்போது மக்களிடம் கையளிக்கப் பட்டு தாண்டிக்குளம், ஓமந்தை உள்ளிட்ட சில பகுதிகளில் தற்போது வீடுகள் அமைக்கப் பட்டு வருவதுடன் சிறுகைத்தொழில்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தமது சொந்தக் காணிகள் மீண்டும் கைய ளிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது என அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)




# வேள்வித்திருவிழாவில் இளைஞர் குழுவின் வேள்வி

## ஒருவர் மீது வாள் வீச்சு

(கரவெட்டி)

வடமராட்சி குரும்பசிட்டி வைரவர் ஆல யத்தில் இரு இளைஞர் தரப்புக்கிடையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் ஒருவர் வாள் வீச் சுக்கு இலக்காகி பருத்தித்துறை ஆதார வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புலோலி குரும்பசிட்டி வைரவர் ஆலய வேள்வித் திருவிழா நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றவேளை இரு வேறு இடங்களைச் சேர்ந்த இளைஞர் குழு ஆலயத்தின் புனிதத் தன்மையை பாதிக்கும் வகையிலும் அப்பகுதி மக்களை அச்சுறுத்தும் வகையிலும் வாள், பொல்லுகள், கூரிய ஆயுதங்கள் சகிதம் ஆலயத்தில் மோதிக்கொண்டன.

இதில் பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த இளைஞர் குழுவும் காந்தியூர் பகுதியை சோந்த இளைஞர் குழுவுமே ஒருவருக்கொ ருவர் அடிதடியை மேற்கொண்டதுடன் வாள் வீச்சையும் மேற்கெண்டனர்.

இச்சம்பவத்தில் பருத்தித்துறை பகுதியை சேர்ந்த தங்கத்துரை சதீஸ்வரன் (வயது-28) என்ற இளைஞர் வாள்வெட்டுக்கு இலக் கானார்.

இச்சம்பவத்தினால் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியதுடன் அப்பகுதி மக்கள் அச் சத்தில் இருந்தனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற பருத்தித்துறை பொலிஸார் ஆலய நிர்வாகத்தினரிடம் விசா ரணைகளை மேற்கொண்டபோது ஆலய நிர்வாகத்தினர் ஆலயத்திற்கும் குறித்த இரு தரப்பிற்கும் சம்பந்தம் இல்லை எனவும் கூறி யதையடுத்து பொலிஸார் விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளனர். (அ-3-24)

# விசேட பொதுக்கூட்டம்

(கோண்டாவில்)

கோண்டாவில் ஸ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலைய விசேட பொதுக்கூட்டம் இன்று மாலை 6.30 மணியளவில் நிலையத் தலைவர் கு.முருகையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் முக்கிய விடயங்கள் பல ஆராயப்படவுள்ளதால் இச்சனசமூக நிலை யத்தின் பதிவுக்குட்பட்ட சகல பொதுமக்க ளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கையில் தமிழர்களுக்கு சிறைகளில் கூட பாதுகாப்பில்லை

## ஐ.நாவிடம் முறையிடுவோம் நாடு கடந்த தமிழீழ அரசு அறிவிப்பு

இலங்கை அரச அதிகார மையத்தினால் திட்டமிடப்பட்ட முறையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் சிறைக்கைதியின் விவாகரத்தினை மையமாகக்கொண்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க்கைதிகள் நிலைவரம் தொடர்பில் இலங்கை அரசினை ஐ.நா. விசாரணை செய்ய வேண்டுமென நா.க.த. அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கைச் சிறையில் படுகொலை செய்யப்பட்ட நிமலரூபன் விவகாரம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள நாடு கடந்த தமிழீழ அரசின் மனித உரிமைகள் இன ஒழிப்பு போர்க்குற்றங்கள் குற்றவிசாரணைக்கும் தடுப்புக்குமான விவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

தமிழர்களுக்கு சிறைச்சாலைகளில் கூட பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்துள்ளதோடு தமிழர்களைப் பாதுகாப்பதற்கு அனைத்துலக பாதுகாப்பு பொறிமுறையொன்றினை நிறுவுவதன் ஊடாகவே இலங்கைத்தீவில் தமிழர்களின் பாதுகாப்பை நாம் உறுதிப்படுத்த முடியும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தக் தாக்குதலைப் பற்றி நம்பத் தகுந்த தகவல்கள் கிடைத்த உடனேயே நாங்கள் பல சர்வதேச அரசாங்கங்களுடனும் அனைத்துலக அமைப்புக்களுடனும் தொடர்பு கொண்டபோதும் உயிர் இழப்பைக் தடுக்க முடியவில்லை. எனவே, அனைத்துலக கண்காணிப்பாளர்கள் இலங்கையின் சிறைச்சாலைகளுக்குச் சென்று நிலைமையை பார்வையிடுவதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதிக்க வேண்டுமென ஐ.நா. அழுத்தம் கொடுக்க வேண்டும். இலங்கையின் சிறையில் வைத்து தமிழ் அரசியல் கைதி ஒருவர் கொலை செய்யப்பட்டதை தொடர்ந்து தமிழர்களின் பாதுகாப்புக்கு அனைத்துலக பாதுகாப்பு பொறிமுறை வேண்டும்.

இலங்கை அரசாங்கம் 1983 ஆம் ஆண்டிலிருந்து மாறி மாறி தமிழ் அரசியல் கைதிகளைக் கொலை செய்து வந்துள்ளது.

இந்த நிலைமை 2009 இல் யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் மிகவும் மோசமடைந்து உள்ளது.

தங்கள் உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியாமல் அவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா? இல்லையா? என்பதைக் கூட அறியமுடியாமல் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தவிக்கின்றன என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## குப்பை எரியூட்டிய போது எறிகணை வெடித்தது

### நாச்சிக்குடாவில் சம்பவம்

(யூனியன்குளம்)

நாச்சிக்குடா பொதுச் சந்தைக்கருகில் துப்புரவு பணி இடம்பெற்ற போது அங்கு புதையுண்ட நிலையில் இருந்த ஷெல் ஒன்று வெடித்துள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மேற்படி பொதுச் சந்தைக்கருகில் உள்ள பற்றைகளை துப்புரவு செய்து குப்பைகளைச் கொளுத்திய வேளையில் அவ்விடத்தில் புதையுண்ட நிலையில் காணப்பட்ட ஷெல் ஒன்று வெடித்துள்ளது. இதன்போது உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இருப்பினும் அயலில் உள்ள தொடர் கடைகள் சில சேதமடைந்துள்ளன.

(அ-2-270)

## வேலைநிறுத்தத்திற்கு மத்தியிலும் தடையின்றி மின்சாரம் வழங்குகின்றோம்

### அமைச்சர் சம்பிக்க பெருமிதம்

(கொழும்பு)

மின்சார சபை ஊழியர்கள் ஒரு தரப்பினர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள போதும் தடையின்றி தொடர்ச்சியாக மின்சாரத்தை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 25 வீத சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ள நிலையிலும் அரசியல் நோக்கங்களுக்காகவே இந்த வேலை நிறுத்தம் முன்னெடுக்கப்படுவதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

வாய்மூல விடைக்காக ரவி கருணாநாயக்க எம்.பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர் மேலும் கூறியதாவது,

மின்சார சபை ஊழியர்களுக்கு 3 வருடங்களுக்கு ஒரு தடவை சம்பள உயர்வு வழங்கப்படுகின்றது. இதன்படியே இம்முறை 25 வீதம் சம்பள உயர்வு வழங்கப்பட்டது. 45 வீத சம்பள உயர்வு கோருவது அநீதியாகும். ஏனைய அரச நிறுவன ஊழியர்களுடன் ஒப்பிடுகையில் மின்சார சபை ஊழியர்களுக்கு கூடுதல் சம்பளம் வழங்கப்படுகின்றது.

சாதாரண தொழிலாளிக்குக்கூட ஆரம்ப சம்பளமாக 24 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. பொறியியலாளர்கள் போன்ற விசேட சேவையாற்றுபவர்களுக்கு வேறு விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றது. தொழிலாளர்களுக்கு இவற்றை வழங்க முடியாது.


மின்சார சேவை அத்தியாவசிய சேவையாகும். எனவே, நாசகார வேலைகளில் ஈடுபடவோ பொறுப்புகளில் இருந்து ஒதுங்கவோ மின்சார சபை ஊழியர்களுக்கு இயலாது. அத்தகைய ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

திருத்தப் பணிகள், அனர்த்தங்கள், மின் உற்பத்தி நிலைய திடீர் கோளாறுகள் என்பவற்றின் போது மின் துண்டிக்கப்படுகின்றது.

நுரைச்சோலை அனல் மின் நிலையம் அமைக்கப்பட்டிருக்காவிட்டால் நாட்டில் 7, 8 மணி நேரம் மின் துண்டிக்க வேண்டியிருக்கும்.

அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதத்தில் நுரைச்சோலை அனல் மின் நிலைய 2 ஆம் கட்டம் பூர்த்தி செய்யப்படும். இதன்பின் மின் விநியோகம் தொர்பான சிக்கல் நிறைவடையும். (அ-2)

## வாகன விபத்தில் கூலர் வாகனம் தடம்புரண்டது



ஹயஸ் சிறிய ரக கூலர் வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இந்த விபத்துச் சம்பவம் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் இலுப்பையடிச் சந்தியில் இடம்பெற்றுள்ளது. இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நாவலர் வீதியூடாக பயணித்துக்கொண்டிருந்த ஹயஸ் வான் பலாலி வீதியூடாக பயணித்துக்கொண்டிருந்த சிறிய ரக கூலர் வானின் பின்புறமாக மோதியுள்ளது.

இதனால் குறித்த கூலர் வான் தடம் புரண்டு வீதியின் அருகே தலைகீழாக கிடந்தது. கூலர் வானை மோதிய ஹயஸ் வான் நடுவீதியில் நின்றதனால் வீதிப்போக்குவரத்து சில மணி நேரம் தடைப்பட்டிருந்தது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். குறித்த விபத்தில் கூலர் வாகனத்தின் சாரதி சிறுகாயங்களுக்குள்ளாகியுள்ளார். இருப்பினும் ஹயஸ் வானின் முன்பக்கம் சேதத்திற்குள்ளானதோடு கூலர் வாகனம் பலத்த சேதத்திற்குள்ளானது.

(அ-6)

## மதுபோதை மகனுக்கு ஆறு வாரங்கள் சிறை

(யாழ்ப்பாணம்)

வீதியில் பயணிப்போருக்கு மது போதையில் இடையூறு விளைவித்த நபருக்கு யாழ். நீதிமன்றம் ஒரு மாத சிறைத்தண்டனை விதித்துள்ளது.

வண்ணார்பண்ணையினைச் சேர்ந்த குறித்த குடிமகனார் மதுஅருந்திவிட்டு இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இவர் நேற்று முன் தினம் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

குறித்த குடிமகனை விசாரணை செய்த யாழ். நீதவான் மா. கணேசராசா குறித்த நபருக்கு ஆறு ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒரு மாத சிற்றத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார்.

குறித்த நபர் அபராதம் செலுத்தத் தவறியமையால் இருவார சிறைத்தண்டனையோடு மேலும் ஒரு மாத சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (அ-6)


மணமகள் தேவை கல்யாண மாலை மணமகன் தேவை

| | | |
|---|---|---|
| பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-திருவாதிரை 1<br>உயரம்: 5' 3"<br>கி.பா:-27.5, 12 இல் செவ்<br>தொழில்:-மின்சார இணைப்பாளர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண தொழில்/ தொழில் அற்றவர்<br>B/066 | பிறப்பு:- 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-சுவாதி 2<br>உயரம்: 5'3"<br>கி.பா:-18.75<br>தொழில்:-B.com பட்டதாரி ஆசிரியை. H.N. D.A, Dip.in. Ed<br>எதிர்பார்ப்பு: கூடுதல் விருப்பம் வெளிநாடு<br>G/058 | பிறப்பு:- 1988 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-சித்திரை 2<br>உயரம்: 5'4"<br>கி.பா:-62, 8 இல் செவ்<br>தொழில்: Higher National Dip.in Software Engineering Trainee<br>எதிர்பார்ப்பு:- DR, இன்ஜினியர், பல் DR., விரிவுரையாளர் போன்ற தகுதியினர்<br>G/057 |
| பிறப்பு:- 1984 சைவ வேளாளர்<br>நட்சத்திரம்:-புனர்பூசம் 2<br>உயரம்: 5' 4"<br>கி.பா:-6.5, 5 இல் செவ்,<br>தொழில்:-(Bsc Cima Part . மாலைதீவு<br>எதிர்பார்ப்பு:- குறைந்தபட்சம் A/L அழகுடைய படித்தபெண்<br>B/068 | பிறப்பு:- 1974 இந்து<br>நட்சத்திரம்:-உத்தரட்டாதி 1<br>உயரம்: 5' 4"<br>கி.பா:-19.5, 3 இல் செவ்,<br>தொழில்:-A/L வீட்டுப்பணியுடன் தோட்ட வேலையும்<br>எதிர்பார்ப்பு:-சாதாரண தொழில், சொந்த சுயதொழில்<br>G/065 | பிறப்பு:- 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-சித்திரை 4<br>உயரம்: 5'1"<br>கி.பா:-37 , 5 இல் செவ்<br>தொழில்:-(B.A)பட்டதாரி, வீட்டுப்பணி<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டு மணமகன் உள்நாடும் கவனிக்கப்படும்<br>G/051 |
| பிறப்பு:- 1978 இந்து சைவக் குருக்கள்<br>நட்சத்திரம்:-திருவாதிரை 2<br>கி.பா:-22.75<br>தொழில்:-Cima 3rd Part கணக்காளர் சிங்கப்பூர்<br>எதிர்பார்ப்பு:- பட்டதாரிப் பெண்<br>B/069 | சகல தொடர்புகளுக்கும்:-<br>கல்யாண மாலை<br>(சர்வதேச திருமண சேவை)<br>இல.144, பிறவுண் வீதி,<br>யாழ்ப்பாணம்<br>தொடர்பு:- 021 720 1005<br>E.mail:-kalyanamalai.jaffna@gmail.com | பிறப்பு:- 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-கார்த்திகை 1<br>உயரம்: 5' 4"<br>கி.பா:-53, 7 இல் செவ்<br>தொழில்:-Bsc Quantity Surveyor<br>எதிர்பார்ப்பு:- இன்ஜினியர், விரிவுரையாளர், தகுதியானவர், வெளிநாடு<br>G/067 |

ஊடக அனுசரணை வலம்புரி

# சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுகிறவர்கள் தெரு நாய்களுக்கு ஒப்பானவர்கள்

## அமைச்சர் சுசில் ஆவேசம்

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்கள் தெருநாய்களை போன்றவர்கள் என ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளரான அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த விமர்சித்துள்ளார்.

ஐ.ம.சு.கூட்டமைப்பு அரசியல்வாதிகள் எவரும் கிரிமினல் குற்றங்கள், ஊழல் அல்லது மோசடிகளில் குற்றவாளிகளாக காணப்பட்டால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் கூறினார்.

14 வயது சிறுமி ஒருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள தங்காலை ஐ.ம.சு.கூட்டமைப்பு பிரதேச சபை உறுப்பினர் மற்றும் நால்வர் கைது செய்யப்பட்டமை தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இச்சம்பவங்கள் குறித்து தான் மிகுந்த கவலையடைகிறேன்.

இந்நபர்களுக்கு என்ன கோளாறு என்று எனக்கு புரியவில்லை. என்னை போன்று ஸ்ரீலங்கா சு.க.அரசியல்வாதிகள் பலர் பல தசாப்தங்களாக இத்தகைய குற்றச்சாட்டுக்களின்றி அரசியலில் ஈடுபடுகின்றோம். ஆனால் இப்போது ஐ.ம.சு.கூட்டமைப்பு அரசியல்வாதிகள் பலர் குற்றச்செயல்களில் ஈடுபடுவதை நாம் காண்கிறோம். இவை கட்சியின் மதிப்பை களங்கப்படுத்துகின்றன.

இது நிறுத்தப்படுவது அவசியம். நீதிமன்றத் தில் குற்றவாளிகளாக காணப்படுபவர்களுக்கு எதிராக மாத்திர மல்லாமல் வழக்குகள் நிலுவையில் உள்ளவர்கள் தொடர்பாகவும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நீதிமன்றத்தில் குற்றவாளியாக காணப்படுபவர்கள் கட்சியிலும் அரசாங்கத்திலும் வகிக்கும் அனைத்து பதவிகளிலிருந்தும் நீக்கப்படுவார்கள். அத்தகைய நபர்களுக்கு தேர்தலில் போட்டியிட நியமனப்பத்திரம் வழங்கப்படமாட்டாது எனவும் அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

# டெசோ மாநாடு குறித்து ஐ.நா.அதிகாரிக்கு விளக்கமளித்தார் தலைவர் வீரமணி

சென்னையில் நடைபெறவுள்ள டெசோ மாநாடு குறித்து ஐ.நா.அதிகாரியிடம் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி விளக்கம் அளித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தில் தெற்காசியாவுக்கான ஐ.நா.அதிகாரி ஹிடோகிடென்னை கடந்த ஜுன் மாதம் 27 ஆம் திகதி வீரமணி சந்தித்துப் பேசியுள்ளார்.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்று வரும் கொடுமைகளையும் அதற்கு தனி ஈழம் மட்டுமே தீர்வாக அமையும் என்பதையும் வீரமணி இதன்போது எடுத்துக்கூறியுள்ளார்.

ஈழத்தமிழர்களின் பிரச்சினையை உலக அரங்கில் கொண்டு சென்று தீர்வு காணவே டெசோ மாநாடு நடத்தப்படுவதாக அவர் விளக்கம் அளித்ததாக திராவிடர் கழகம் சார்பில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ-2)


## அன்பான வடமாகாண Nokia வாடிக்கையாளர்களே உங்களுக்கு ஓர் அன்பான அறிவித்தல்

NOKIA Connecting People

Nokia நிறுவனம் வடமாகாணத்தில் காலடி வைத்ததை நினைத்து பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். நீங்கள் கடைகளில் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு Nokia கையடக்கத் தொலைபேசியானது அசலானதா (Original) அல்லது நகல் ஆனதா(Dupplicate) என்பதை நிரூபிப்பதற்கு அதின் உட்பகுதியில் பொறிக்கப்பட்டுள்ள இமி இலக்கங்களை (IMEI Numbers) ஐ வடமாகாணத்தின் Nokia கையடக்க தொலைபேசியின் வடபிராந்திய விநியோகஸ்தரான SVM TECHNOLOGY (PVT)LTD இல.158 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொண்டு அறியமுடியும்.

மேலதிக தகவல்களிற்கு எங்கள் யாழ்ப்பாண தொலைபேசி இலக்கங்களான:-0212220293, 0214925828, 0773659359, 0777716242 என்ற இலக்கங்களுடனும் வவுனியா பிரதேசமாயின் (வன்னி மாவட்டம்) 0773659360, 0772441681 என்ற இலக்கங்களுடனும் தொடர்பு கொண்டு அறியமுடியும்.

எமது ஸ்ரீலங்கா (Srilanka) ஏக விநியோகஸ்தரான Softlogic Communication (Pvt)Ltd இன் உயர் அதிகாரிகள் வடமாகாணத்தில் மேற்கொண்ட சந்தை ஆராட்சி மூலம் பின்வரும் போலி விற்பனையாளர்களை கண்டறிந்துள்ளனர். ஒரு சில வியாபாரிகள் Nokia கையடக்க தொலைபேசியின் அசல் (Original) உதிப்பாகங்களை மாற்றி (Battery, Charger, Headset,Memory card) போலியான உதிரிப்பாகங்களை அதனுள் பொருத்தி வாடிக்கையாளர்களிற்கு விற்பதனால் அந்த உதிப்பாகங்கள் 3 மாதங்களில் முற்றாக செயல் இழந்து விடுகிறது. ஆனால் அசல் Nokia (Original Nokia) உதிப்பாகங்கள் நீண்ட காலங்களிற்கு உழைக்கக் கூடியவை. இதனை உறுதி செய்ய மேலே குறிப்பிட்ட ஸ்தாபனத்துடன் தொடர்புகொள்ளவும். அவர்கள் அதனை இலங்கை தொலைத் தொடர்பு ஆணைக்குழுவிற்கு அறிவிப்பார்கள்.

எமது Nokia வாடிக்கையாளர்களே நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு கையடக்க தொலைபேசிக்கும் இலங்கையின் ஏக பிரதிநிதிகளான Softlogic Communication (Pvt)Ltd இனால் வழங்கப்படும் உத்தரவாத அட்டையை கேட்டு வாங்கி (Warrenty Card) மிகவும் கவனமாக வைத்து இருந்தால் உங்களுக்கு என்ன பிரச்சினை வந்தாலும் உத்தரவாத அட்டை உங்கள் கையில் இருக்கும் வரை (Warrenty Card) உங்களுக்கு நாங்கள் அதற்குரிய அட்டையுடன் வந்தால் அதற்கான நடவடிக்கைகளை எடுப்போம் என்பதை அறிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

(சி/605)

NOKIA Connecting People ஏக பிரதிநிதி Softlogic Communication (Pvt)Ltd No 4, Defonseka Road, Colombo-05 T.P:-0777264717

வட பிராந்திய விநியோகஸ்தரான SVM TECHNOLOGY (PVT)LTD 158 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.இல:-0212220293, 0214925828.


# வெற்றியாளர்களின் சுடர் ஊர்வலம் பருத்தித்துறையில் ஆரம்பம்

(கொழும்பு)

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திற்கு உயர முறய்சிக்கும் இலங்கையின் வீர, வீராங்கனைகளை வெளிக் கொண்டு வரும் பொருட்டு எம்.ரீ.வி/ எம்.பி.சி ஊடக வலையமைப்பு ஏற்பாடு செய்துள்ள வெற்றியாளர்களின் சுடர் வாகனத் தொடரணி நேற்று யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் ஆரம்பமாகியது.

வீரர்களின் சுடர் யாழ். குடா நாட்டின் பருத்தித்துறையில் இருந்து தேவேந்திரமுனை வரை சுமார் ஆயிரம் வீர, வீராங்கனைகளுடன் 300 நகரங்களை உள்ளடக்கும் வகையில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படவுள்ளது.

வெற்றியாளர்களின் சுடர் ஏந்திய பயணத்தில் இணைந்து கொள்ள முடியும் என்பதோடு வளர்ந்து வரும் நம் நாட்டு வீர, வீராங்கனைகளுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் வாழ்த்துத் தெரிவிக்கவும் வாய்ப்புள்ளது.

(அ-9)

# 250 கிலோ கோழி இறைச்சிகள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் பாவனைக்கு உதவாத சுமார் 250 கிலோகிராம் கோழி இறைச்சிகள் அழிக்கப்பட்டுள்ளன. இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. ஹற்றன்-டிக்கோயா நகர சபை எல்லைப் பிரதேசத்திற்குட்பட்ட விற்பனை நிலையங்களில் பொது சுகாதார பரிசோதகர்கள் பரிசோதனை நடவடிக்கை களில் ஈடுபட்டனர்.

இதன்போது மக்கள் பாவனைக்கு உதவாதது என கண்டு பிடிக்கப்பட்ட சுமார் 250 கிலோகிராம் கோழி இறைச்சியை அழிக்கு மாறு ஹற்றன் நீதிமன்ற நிதவான் உத்தரவு பிறப்பித்தார். இதற்கமைய அந்த இறைச்சிகள் பொது சுகாதார பரிசோதகர்களால் அழிக்கப்பட்டன. (அ-2)

# மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான மஹா கும்பாபி ஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.57 மணிக்கு நடைபெறவுள்ளதாக ஆலய பொறுப்புரிமை பரிபாலனசபை அறிவித்துள்ளது. (அ-9)


சிவமயம்

## விவாக சுபமுகூர்த்த அழைப்பு

ஸ்வஸ்த்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான நந்தன வருஷம் ஆனித் திங்கள் 24 ஆம் நாள் இன்று(08.07.2012) ஞாயிற்றுக்கிழமை பஞ்சமித் திதியும் சதய நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய முற்பகல்9.30 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள சிம்ம லக்ன சுபமுகூர்த்த வேளையில்

மாவை ஆதீனம், ப்ரஹமஸ்ரீ துரைச்சாமிக்குருக்கள் தம்பதியரின் பௌத்திரனும், கீரிமலை, நகுலேஸ்வர ஆதீனம் ராஜராஜா ஸ்ரீ நகுலேஸ்வர குருக்கள் தம்பதியரின் தௌஹித்திரனும், ப்ரஹமஸ்ரீ குமாரசாமிக்குருக்கள் தம்பதியரின் புத்திரனுமாகிய
**சிரஞ்சீவி உமாசங்கர்**
(மாவை- உமா) குருக்கள்

யாழ்ப்பாணம் ப.நாகேந்திர ஐயர் தம்பதியரின் பௌத்திரியும், கண்டி ஸ்ரீ வெங்கடேஸ்வரக் குருக்கள் தம்பதியரின் தௌஹித்திரியும், சோமஸ்கந்தக் குருக்கள் தம்பதியரின் புத்திரியுமாகிய சௌபாக்கியவதி
**புவனேஸ்வரியை**
(பவித்திரா)

கன்னிகாதானம் , திருமாங்கல்யதாரண பாணிக்ரகணம் செய்ய மாவைக் கந்தன் நகுலாம்பிகா சமேத நகுலேஸ்ரப் பெருமான் ,கல்லடி உப்போடை ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரப் பெருமான் அனுக்கிரகத்துடனும், பெரியோர்களுடைய நல்லாசியுடனும் நிச்சயிக்கப்பட்டு மேற்படி சுபமுகூர்த்தம்.

"கீரிமலை , நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமான் ஆலயத்தில்"

நடைபெறுவதால் தாங்கள் தங்கள் இஷ்டமித்ர பந்துக்கள் சகிதம் வகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம்: மணமகன் இல்லத்தில் காலை 6 மணிக்கு நடைபெறும்.

வரவேற்புபசாரம்:- மணமகன் இல்லம் 4.00 மணி சேந்தான்குளம் வீதி, இளவாலை.

*தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்*

ராஜராஜ ஸ்ரீ திரு.திருமதி நகுலேஸ்வர குருக்கள் குடும்பத்தினர்
திருமதி.கு.கெங்காதேவி,
திரு.திருமதி சு.கணபதீஸ்வரக்குருக்கள், விஜயலட்சுமி குடும்பத்தினர்,
திரு.திருமதி வ.பிரபாகர சர்மா கிரிஜா குடும்பத்தினர்,
திரு திருமதி.கு.சிவசங்கர் குருக்கள் விசாலாட்சி குடும்பத்தினர்
திரு.கு. ஸ்ரீசங்கர் சர்மா,
நகுலேஸ்வரம் கீரிமலை
தொ.பே:-021 790 0470, 077 110 4754

திரு.திருமதி என்.சோமஸ்கந்தக்குருக்கள் வசந்தலஷ்மி குடும்பத்தினர்,
திரு.திருமதி க.நாகேந்திர ஐயர் அமிர்தாம்பிகை குடும்பத்தினர்,
திரு.திருமதி.எஸ் வெங்கடேஸ்வரக் குருக்கள்,,
திரு.திருமதி.என்.பாலசுப்பிரமணியக் குருக்கள் கௌரீஸ்வரி குடும்பத்தினர்,
திரு.திருமதி.யி ராதாகிருஸ்ண சர்மா மீனாம்பாள் குடும்பத்தினர்,,
திரு.திருமதி.பி பிரபாகரசர்மா கீதாஞ்சலி குடும்பத்தினர்
திரு.எஸ்.அருணசோபன சர்மா,
திரு.எஸ்.கிருஸ்ணாநந்தன் சர்மா,
திரு.திருமதி.பாலேந்திரக்குருக்கள்,
திரு.திருமதி.பாலேந்திரக்குருக்கள், மலரஞ்சனி குடும்பத்தினர்
இல.18C பழையகல்முனை வீதி,கல்லடி, மட்டக்களப்பு
தொ.பே:-0652226418,0754146907

(சி/436) இரு வீட்டார் அழைப்பு

## மீண்டும் வருகிறது சோதனைச்சாவடி
## அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

பொலிஸ் நிலையங்கள் மற்றும் சோதனைச் சாவடிகள் அமைப்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

நாடு முழுவதிலும் புதிய பொலிஸ் நிலையங்கள் மற்றும் சோதனைச் சாவடிகள் எங்கு அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றி ஆராயுமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்படும் குழுவினால் ஆராயப்படவுள்ளது. அக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய எதிர்காலத்தில் பொலிஸ் நிலையங்கள் மற்றும் சோதனைச் சாவடிகள் அமைக்கப்படவுள்ளது. மக்கள் தொகை, குற்றச் செயல்களின் எண்ணிக்கை உள்ளிட்ட சில காரணிகளின் அடிப்படையில் அறிக்கை தயாரிக்கப்படவுள்ளது.

புதிய பொலிஸ் நிலையங்கள் மற்றும் சோதனைச் சாவடிகளை அமைக்குமாறு ஜனாதிபதிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்படவுள்ளது. (அ-2)

## ஸ்ரீலங்கா மிரர் முடக்கப்பட்டமை அரசாங்க அடக்குமுறையாகும்
## எதிர்க்கட்சி தலைவர் திட்டவட்டம்

(கொழும்பு)

அரசாங்கம் மெய்யாகவே கருத்து சுதந்திரத்தை மதிக்கின்றதா என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

ஸ்ரீலங்கா மிரர் மற்றும் எக்ஸ் நியூஸ் ஆகிய இணையத்தளங்கள் முடக்கப்பட்ட சம்பவமானது அரச அடக்குமுறையா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இது ஓர் நியாயமான சந்தேகமேயாகும்.

இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் யாரின் தேவைக்காக மேற்கொள்ளப்படுகின்றன.

குற்றவியல் சட்டத்தின் 118 ஆம் சரத்தின் அடிப்படையில் இணைய ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சரத்தானது 2002 ஆம் ஆண்டு இரத்து செய்யப்பட்டது.

சட்டத்திற்கு புறம்பான வகையில் ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்த நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது.

இதேவேளை, நீதிமன்ற உத்தரவிற்கு அமையவே இணையத்தளம் சோதனையிடப்பட்டதாகவும் ஊடக சுதந்திரம் என்ற போர்வையில் அரச விரோத செயற்பாடுகளில் ஈடுபட இடமளிக்க முடியாது எனவும் அமைச்சர் சிறிபால டி சில்வா தெரிவித்திருந்தமை தெரிந்ததே. (அ-2)

## போராட்டக்களமாக இலங்கைத்தீவு மாறியுள்ளது
## திஸ்ஸ அத்தநாயக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் முழு நாட்டையுமே போராட்ட வலயமாக மாற்றியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட எடுத்த தீர்மானத்திற்கு அரசாங்கமே பொறுப்பு. மின்சார சபையின் நூற்றுக்கு மேற்பட்ட ஊழியர்கள் பணி நீக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கம் ஊழியர்களை அடக்குமுறைக்கு உட்படுத்தி வருகின்றது. தொழிற்சங்கப் போராட்டங்களினால் நாட்டின் பல துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. மஹிந்த சிந்தனை கொள்கையின் அடிப்படையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அடக்குமுறைக்கு உட்படுத்தக் கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## சட்டமா அதிபர் நியமனம் குறித்து தீர்மானிக்கப்படவில்லை-லலித்

(கொழும்பு)

புதிய சட்டமா அதிபரை நியமிப்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபராக பதவி வகித்து வந்த ஈவா வனசுந்தர உச்ச நீதிமன்ற நீதியரசராக ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதையடுத்து சட்டமா அதிபர் பதவியில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

இந்த வெற்றிடத்திற்கு யாரை நியமிப்பது என்பது பற்றிய இறுதித் தீர்மானம் எதுவும் இதுவரையில் எடுக்கப்படவில்லை. பதிலாக சட்டமா அதிபராக சிரேஷ்ட சொலிசிட்டர் ஜெனரல் பாலித பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். (அ-9)

## 2012.07 08 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1099-முதலாம் சிலுவைப் போர்: 15 ஆயிரம் கிறிஸ்தவ போர் வீரர்க்ள் பட்டினியுடன் ஜெருசலேம் அருகில் சமய ஊர்வலம் சென்றனர்.

★ 1497- வாஸ்கொடகாமாவின் இந்தியாவுக்கான முதல் நேரடிப் பயணம் ஆரம்பித்தது.

★ 1815- பதினெட்டாம் லூயி பாரிஸ் திரும்பி பிரான்சின் மன்னனானான். இரு வாரங்களே பதவியில் இருந்த 4 வயது 2ஆம் நெப்போலியன் பதவி இழந்தான்.

★ 1859- சுவீடன் - நோர்வே மன்னனாக சுவீடனின் பதினைந்தாம் சார்ள்ஸ் முடிசூடினான்.

★ 1889-வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் முதலாவது இதழ் வெளியானது.

★ 1982- ஈராக் ஜனாதிபதி சதாம் உசேய்ன் படுகொலை முயற்சியில் இருந்து தப்பினார்.

★ 1985- இலங்கை அரசுக்கும் ஈழ விடுதலை அமைப்புகளுக்கும் இடையில் திம்புவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.

★ 1990-ஜேர்மனி ஆர்ஜெண்டினாவை வென்று 1990 கால்பந்து உலகக் கிண்ணத்தை வென்றது.

★ 2003-சூடான் விமானம் விபத்துக்குள்ளாகியதில் 117 பேர் உயிரிழந்தனர். 2 வயது குழந்தை ஒன்று மட்டும் உயிர் தப்பியது.

### பிறப்புக்கள்

★ 1895- ஈகர் தம், ரஷ்யா இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர். (இ.1971)

★ 1949- ராஜசேகர ரெட்டி, ஆந்திர முதலமைச்சர் (இ.2009)

★ 1972- சௌரவ் கங்குலி, இந்திய கிரிக்கெட் வீரர்

### இறப்புக்கள்

★ 1989- வி.வி.வைரமுத்து, ஈழத்து நாடகத் துறையின் முன்னோடி ,நடிகமணி (பி.1924)

★ 1994- கிம் இல்- சுங், வட கொரியத் தலைவர் (பி.1912)


★ 2007- சந்திரசேகர், 11ஆவது இந்தியப் பிரதமர் (பி.1927)



சௌரவ் கங்குலி இந்திய அணியின் முன்னாள் தலைவர். கொல்கத்தாவை சேர்ந்த இடதுகைத் துடுப்பாட்ட வீரரான கங்குலி, 1991- 1992 இல் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக பிரிஸ்பேன் நகரில் நடந்த ஒருநாள் ஆட்டத்திலும், 1996இல் இந்திய டெஸ்ட் அணியிலும் அறிமுகமானார். தன் முதலிரு டெஸ்ட் போட்டிகளிலும் இங்கிலாந்துக்கு எதிராக சதங்களைப் பெற்றார்.

2000 முதல் 2005 வரை இந்திய அணியின் தலைவராக இருந்தார். ஒருநாள் போட்டிகளில் பத்தாயிரத்துக்கும் அதிகமான ஓட்டங்களையும் டெஸ்ட் போட்டிகளில் ஐயாயிரத்துக்கு அதிகமான ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.

இவர் 2008ஆம் ஆண்டில் சர்வதேச போட்டிகளிலிருந்து தனது ஓய்வை அறிவித்தார். ஐ.பி.எல். தொடரில் 2008ஆம் ஆண்டு கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிக்காக விளையாடிய இவர், 2011 ஆம் ஆண்டு புனே வாரியர்ஸ் அணியில் இடம்பிடித்தார்.



ராஜசேகர ரெட்டி இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இவர், ஆந்திரப் பிரதேசத்தின் முதலமைச்சராகவும் இருந்தார்.

இந்திய மக்களவைக்கு 4 முறையும் ஆந்திரப் பிரதேச சட்டமன்றத்துக்கு 4 முறையும் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், 2009 செப்டெம்பர் 2இல் உலங்கு வானூர்தி விபத்தில் உயிரிழந்தார்.

மருத்துவரான இவர் கடப்பா மாவட்டத்தில் தன்னுடைய மருத்துவப் பணியை ஆரம்பித்தார்.

1978 இல் இந்திய தேசிய காங்கிரசில் சேர்ந்து தீவிர அரசியல் பணியில் ஈடுபடத் தொடங்கினார்.

1999 முதல் 2004 வரை மாநில சட்ட மன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தார். அந்தக் காலகட்டத்தில் இவர் மேற்கொண்ட 1400 கிலோமீற்றர் நடைபயணம் இவருடைய அரசியல் செல்வாக்கினைப் பெருமளவுக்கு உயர்த்தியது. மாநிலத்தில் பின் தங்கிய பகுதிகள் அனைத்துக்கும் சென்று அடித்தட்டு மக்களின் நம்பிக்கையைப் பெற்றார். 2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பெருவாரியான தொகுதிகளில் காங்கிரசை வெற்றி பெறச் செய்து முதல்வராகப் பொறுப்பேற்றார். 2009ஆம் ஆண்டு சட்ட மன்றத் தேர்தலிலும் இவருடைய தலைமையில் காங் கிரஸ் கட்சி தனிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற 2ஆம் முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தார்.

ராஜசேகர ரெட்டி உயிரிழந்ததை அடுத்து அரசியலுக்குள் வந்த இவருடைய மகன் ஜகன் மோகன் ரெட்டி தற்போது ஆந்திராவில் புதிய சக்தியாக உருவெடுத்து வருகிறார்.

**சிலுவைப் போர்கள்** என்பன வெளி எதிரிகளுக்கும் உள் எதிரிகளுக்கும் எதிராகப் பெரும்பகுதி கிறிஸ்தவ ஐரோப்பா நடத்திய பல தொடர்ச்சியான போர்கள் ஆகும். மதம் சார்ந்த இப்போர்கள் பெரும்பாலும் முஸ்லிம்களுக்கு எதிராகவே நடத்தப்பட்டது.

சிலுவைப் போர்கள் தொடக்கத்தில் ஜெருசலத்தையும் புனித நிலத்தையும் முஸ்லிம்களிடமிருந்து மீளக் கைப்பற்றுவதை இலக்காகக் கொண்டிருந்ததுடன் அனத்தோலியாவுக்குள் முஸ்லிம் செல்யூக் துருக்கியர் நுழைவதைத் தடுப்பதற்கான கிழக்கிந்திய பழைமைக் கோட்பாட்டு பைசண்டியப் பேரரசின் வேண்டுகோளை ஏற்றுப் போர் தொடுக்கப்பட்டது.

சிலுவைப் போர் என்னும் பெயர் இதற்குப் பின்னர் லேவன்ட்டுக்கு வெளியே பல்வேறு காரணங்களுக்காக நடத்தப்பட்ட போர்களையும் குறிக்கப் பயன்பட்டது. சிலுவைப் போர்கள் நீண்ட கால அரசியல், பொருளியல் சமூகத் தாக்கங்களைக் கொண்டிருந்தன. இவற்றுள் சில அண்மைக் காலம் வரை நீடித்தன. கிறிஸ்தவ இராச்சியங்கள் அரசியல் சக்திகள் மத்தியில் இருந்த உள் முரண்பாடுகளினால் சில சிலுவைப் போர்களின் தொடக்க இலக்கு திசை திரும்பியது.

4ஆவது சிலுவைப் போர் இதற்கு எடுத்துக்காட்டு ஆகும். இது கிறிஸ்தவ கொன்ஸ்டண்டிநோபிள் அழிவதற்கும் பைசண்டியப் பேரரசு பிரிக்கப்படுவதற்கும் காரணமாகியது. 6ஆவது சிலுவைப் போரே பாப்பாண்டவரின் அதிகாரபூர்வ ஆசியில்லாமல் நடைபெற்ற முதல் போராகும். 7ஆம், 8ஆம், 9ஆம் சிலுவைப் போர்களில் மாம்லுக், ஹாப்சிட் வெற்றிகள் கிடைத்தன. 9ஆம் சிலுவைப் போரே இறுதிச் சிலுவைப் போர் ஆகும். இது மத்திய கிழக்கில் முடிபடைந்தது.

# பல்கலைக்கழக ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை அவசியமானதா?

கடந்த மாதம் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் போராட்டம் காரணமாக இலங்கையின் அனைத்துப் பல்கலைக்கழகங்களும் செயலிழந்திருந்தன. இம் மாதம் பல்கலைக்கழக ஆசிரியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். இதனால் மாணவர்களது கல்வி பாதிப்படையும் என சமூக நலன் விரும்பிகள் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர். அதேசமயத்தில் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு தேவையான அளவு சம்பளவுயர்வு வழங்கப்பட்டு விட்டது. அவர்கள் தொடர்ந்தும் சம்பளவுயர்வு கேட்பது நியாயமற்றது என்கிறது உயர்கல்வி அமைச்சு. இந்த சமயத்தில் பல்கலைக்கழக ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை அவசியமானதா? என்ற கேள்வி பலரிடமும் எழுகின்றது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் (FUTA) பின்வரும் இரு பிரதான கோரிக்கைகளை முன்வைத்து தொடர்ச்சியான முழு அளவிலான வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளது.

1. அரச கல்வி துறையை காப்பது மற்றும் உயர்த்துவது தொடர்பான உறுதிமொழி

அரசுடனும் உயர்கல்வி அமைச்சுடனும் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையை பின்வருவன தொடர்பாக ஊக்குவித்தல்:

- அடுத்துவரும் இரு வருடங்களுக்கு இடையில் கல்வித்துறைக்கான ஒதுக்கீடு மொத்த தேசிய உற்பத்தியில் (GDP) இல் 6% ஆகும் வண்ணம் செயற்றிட்டம் ஒன்றை விதந்துரைத்தல்.
- அரச கல்வித்துறை தொடர்பான அரசாங்கத்தின் கொள்கையினை தெளிவாக கூறுதல்.
- அனைத்து பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்களையும் உள்ளடக்கியதான கலந்தாலோசிக்கப்பட்ட ஒழுங்கான நடைமுறை திட்டம் வரும் வரையில் அனைத்து கல்வி சீர்திருத்தங்களையும் தங்காலிகமாக இடைநிறுத்தல்.
- அரச பல்கலைக்கழகங்களின் நுண்முகாமைத்துவத்தில் அரசியல் தலையீடுகளை தவிர்ப்பதன் மூலம் இந் நிறுவனங்கள் சுயாதீனமாக இயங்குவதற்கு வழிவகுத்தல்.


2. மிகச்சிறந்த தகுதி வாய்ந்த கல்வியியலாளர்களை இணைத்துக் கொள்ளல் மற்றும் தக்கவைத்துக் கொள்ளல் தொடர்பான FUTA வினது நிறைவேற்றப்படாத கோரிக்கைகளை நிறைவேற்றல்.

- இலங்கையின் மனித வளத்தை மேம்படுத்தலில் கல்வியியலாளர்களின் சிறப்புத் தேர்ச்சி பெற்ற வேலை மற்றும் கல்வியியலாளர்களை இணைத்துக்கொள்ளல், பதவி உயர்வு என்பவற்றில் கடைப்பிடிக்கப்படும் கொள்கை என்பவற்றைக் கருத்தில் கொண்டு இலங்கை பல்கலைக்கழக கல்வியியலாளர் சேவை (Sri Lanka University Academic Service (SLUAS)) ஒன்றினை ஸ்தாபித்தல்.
- 07-07-2011 இல் மேற்கொள்ளப்பட்ட இடைக்கால உடன்படிக்கையின் 2 ஆம் கட்டத்திற்கு அமைவான சம்பள அளவுத்திட்டத்தை உடனடியாக அமுல்படுத்தல்.

✷ அடிப்படை சம்பளத்தில் 20% அதிகரிப்பானது 01-01-2012 தொடக்கம் வழங்கப்படல் வேண்டும். ஏற்கனவே நடைமுறையில் உள்ள படிகள் யாவும் எந்தவித நிபந்தனைகளும் இன்றி வழங்கப்படல் வேண்டும்.

✷ மேற்கூறப்பட்ட அடிப்படைச் சம்பளத்தில் 16.67% அதிகரிப்பு வழங்கல். மேற்படி அதிகரிப்பானது 2013 வரவு செலவு திட்டத்தில் உள்ளடக்கப்படுவதுடன் 01-01-2013 தொடக்கம் வழங்கப்படல் வேண்டும். நடைமுறைகளில் உள்ள படிகள் யாவும் நிபந்தனைகள் ஏதும் இன்றி வழங்கப்படல் வேண்டும்.

உலகளாவிய ரீதியில் சில நாடுகளது தனிநபர் வருமானத்திற்கும் (PPP) கல்வித்துறைக்கான அந்நாடுகளின் நிதி ஒதுக்கீட்டிற்கும் இடையே உள்ள தொடர்பினை கீழ்வரும் வரைபு காட்டுகின்றது.





Sources: Central Bank of Sri Lanka Annual Report 2010, Education Statistics and World Development Indicators (World Bank).


இவ்வரைபில் கிடையச்சு தனிநபர் வருமான அளவினையும் நிலைக்குத்து அச்சு கல்விக்கான அரச ஒதுக்கீட்டினையும் (GDP இலான வீதமாக) காட்டுகின்றன.

கிடையச்சு வழியே நோக்கும் போது இலங்கையின் PPP ஏனைய தெற்காசிய நாடுகளை காட்டிலும் அதிகமாய் உள்ளதை அவதானிக்க முடியும். ஆனாலும் நிலைக்குத்து அச்சு வழி நோக்கும் போது கல்விக்கான அரச ஒதுக்கீட்டில் நாம் மிகவும் பின்தங்கி நிற்பதை காண முடியும்.

UNESCO வினது முன்மொழியிற்கமைவாக GDP இல் 6 வீதத்தினை கல்வித்துறைக்கு ஒதுக்குமாறு FUTA கோருகின்றது. இலங்கையை தெற்காசியாவின் ஒரு அறிவியல் மையமாக மாற்றவுள்ளதாக அரசு கூறுகின்றது. அவ்வாறாயின் ஏற்கனவே இங்குள்ள அறிவியல் மையங்களாகவுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வித்துறைக்கான அரச நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்படல் வேண்டும்.

ஆனாலும் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வித்துறைக்கான நிதி ஒதுக்கீடு குறிப்பிடும்படியாக குறைவடைந்து செல்வதை கீழே தரப்பட்ட தரவு சுட்டிக்காட்டுகின்றது. (மாணவர் உள்வாங்கல் 20% ஆல் அதிகரிக்கப்பட்ட போதிலும்)




மிகச் சிறந்த தகுதி வாய்ந்த கல்வியியளாலர்களை இணைத்துக் கொள்ளல் மற்றும் தக்கவைத்துக் கொள்ளல் தொடர்பான FUTA வினது நிறைவேற்றப்படாத கோரிக்கைகளை நிறைவேற்றல் என்பது FUTA வின் இரண்டாவது கோரிக்கையாக காணப்படுகின்றது.

2008 ஆம் ஆண்டு ஜனாதிபதியால் உறுதியளிக்கப்பட்டபடி தமது சம்பளம் மீள்நிர்ணயம் செய்யப்படும் என எண்ணி 2011 ஆம் ஆண்டு வரை காத்திருந்த பல்கலைக்கழக ஆசிரியர்கள் 2011 ஆம் ஆண்டு தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஆனாலும் பின்னர் அரசாங்கம் அளித்த உறுதிமொழிக்கிணங்க FUTA மேற்படி தொழிற்சங்க நடவடிக்கையினை தங்காலிகமாக இடை நிறுத்தியிருந்தது. FUTA வின் கோரிக்கைகளை இரு கட்டங்களாக அமுல்படுத்துவதற்கு அரசு இணங்கியது. முதலாம்கட்டம் உடனடியாக அமுல்படுத்தப்படுவதாகவும் இரண்டாம் கட்டம் பின்னர் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்படுவதாகவும் இணங்கப்பட்டது. ஆனாலும் இரண்டாம்கட்ட உடன்படிக்கை அமுல்படுத்தப்படவில்லை என FUTA கூறுகின்றது. FUTA வினது இரண்டாவது கோரிக்கையானது அமுல்படுத்தப்படாத உடன்படிக்கையின் கட்டங்களை அமுல்படுத்தப்படுத்துமாறு கோருவதே.

பல்கலைக்கழக ஆசிரியராக ஒருவர் உள்வாங்கப்பட வேண்டுமாயின் அவர் தனது சிறப்புப் பட்டப்படிப்பில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இன்று இவ்வாறான திறமை வாய்ந்த பட்டதாரிகளுக்கு பல்கலைக்கழகங்களிற்கு வெளியே கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படுவதால் அவர்கள் கல்விசார் தொழிலில் நுழைவதற்கு தயங்குகிறார்கள். மேலும் அவ்வாறு பட்டப்படிப்புடன் தகுதி காண் விரிவுரையாளராக உள்வாங்கப்படும் ஒருவர் எட்டு வருடங்களுக்குள் இரண்டு வருடங்களுக்கு குறையாத ஆராய்ச்சியுடனான பட்டப்பின் படிப்பினை பூர்த்தி செய்ய வேண்டும்.

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் விஞ்ஞான துறை சார்ந்த பீடங்களைச் சேர்ந்த பல்கலைக்கழக ஆசிரியர்களில் 90% ஆனவர்கள் மேலைத்தேய மற்றும் வளர்ச்சியடைந்த நாடுகளில் தமது கலாநிதிப் பட்டங்களைப் பெற்றவர்களாகியுள்ளனர். இலங்கைப் பல்கலைக்கழகங்களில் வழங்கப்படும் வேதனம் போதாது எனக் கருதின் இவர்களால் இலகுவாக வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் வேலை வாய்ப்பைப்பெற முடியும். எமது நாட்டில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த நிலையிலும் கற்றோரின் வெளியேற்றம் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கலாநிதிப் பட்டப்படிப்பை முடித்த 550 இற்கு மேற்பட்ட பல்கலைக்கழக ஆசிரியர்கள் அண்மைக்காலத்தில் நாடு திரும்ப மறுத்து விட்டனர் என்கிறார் உயர் கல்வி அமைச்சுச் செயலர். இந்நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் போதிப்பதற்கு தகுதியான ஆசிரியர்களே இல்லாமல் போகலாம்.

இலங்கைப் பல்கலைக்கழகங்கள் பலவற்றிலும் பல துறைகளிற்கு பேராசிரியர் மற்றும் விரிவுரையாளர் பதவிகள் நிரப்பப்படுவதற்குத் தகுதியான விண்ணப்பதாரிகள் இல்லாமல் காலம் காலமாக வெற்றிடமாகவே உள்ளன. அமைச்சுச் செயலாளர்களை இடமாற்றம் செய்வதுபோல் பல்கலைக்கழக பேராசிரியர்களையும் விரிவுரையாளர்களையும் இடமாற்றம் செய்ய முடியாது. உதாரணமாக, ஒரு கணிதப் பேராசிரியரின் இடத்திற்கு ஒரு இரசாயனவியல் பேராசிரியரை இடம் மாற்றிவிட முடியாது. எனவே, பல்கலைக்கழக ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க விடாது பாதுகாப்பது அரசின் கடமையாகும்.

.பல்கலைக்கழகங்களின் தரம் அப்பல்கலைக்கழக ஆசிரியர்களின் தரத்தில் தங்கியுள்ளது. FUTA வின் தொழிற்சங்க நடவடிக்கையானது இலங்கை பல்கலைக்கழகங்களில் தகுதியான ஆசிரியர்களை தக்க வைத்துக் கொள்ளவும் தகுதியான ஆசிரியர்களைக் கவர்வதற்குமாகவே நடத்தப்படுகின்றது. இதன் மூலமே அரசாங்கம் அண்மைக் காலமாக கூறிவருவதுபோல் இலங்கையை ஒரு அறிவியல் மையமாக உருவாக்க முடியும்.

FUTA வின் இத்தொழிற்சங்க நடவடிக்கை தோல்வியடையும் பட்சத்தில் காலப்போக்கில் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் கல்வியைப் போதிப்பதற்கு தகுதியான ஆசிரியர்கள் இல்லாத நிலை ஏற்படலாம்.

கலாநிதி செ.அறிவழகன்

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 181

...நியூரென்பர்க் விசாரணை பெரும் அரசியல் முக்கியத்தும் உடையதாக இருந்தது. இது ஆக்கிரமிப்பை மிகக்கொடுமையான சர்வதேசக் குற்றமாக அறிவித்தது, ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கான தயாரிப்பில் ஈடுபட்டு, யுத்தங்களைக் கட்டவிழ்த்துவிட்டு நடத்தியோரைத் தண்டித்தது, லட்சோபலட்சம் பாமர மக்களைக் கொன்று குவித்து, முழு மக்களினங்களையே அடிமைப் படுத்தும் தீய திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றியவர்களை நியாயமாகத் தண்டித்தது. இது பாசிசத்தின் மீதும் ஆக்கிரமிப்பின் மீதும் வரலாறு நடத்திய விசாரணையாயிருந்தது. இது சமாதான நலன்களுக்கு சேவை புரிகிறது, சமாதானத்திற்கும் விழிப் புணர்ச்சிக்கும் அறைகூவல் விடுக்கிறது.


ஜப்பானின் தாக்குதல் திட்டத்தை அவதானிக்கும் படைவீரர்கள்

நியூரென்பர்க் ட்ரிப்யூனலின் தீர்ப்பில் காணப்படும் சர்வதேச உரிமை பற்றிய கோட்பாடுகளை ஐ.நா.பொதுச் சபை ஊர்ஜிதப்படுத்தியது. இதன் மூலம், ஆக்கிரமிப்பு யுத்தமும் மனித குலத்திற்கு எதிரான போர் குற்றங்களும் மிகக் கொடுமையான சர்வதேசக் குற்றங்களாகும் என்று ஐ.நா.சபை அறிவித்தது.

### 1945 கோடையில் இருந்த இராணுவ- அரசியல் நிலவரம்

பல ஆண்டுகளாக ஜப்பானிய இராணுவ வெறியாளர்கள் ஆசிய நாடுகளில் ஆக்கிரப்புக் கொள்கையை நிறைவேற்றி வந்தனர், சோவியத் யூனியனுக்கு எதிராக ஆக்கிரமிப்புத் திட்டங்களைத் தீட்டி வந்தனர். பாசிச ஜேர்மனியிலிருந்த ஜப்பானியத் தூதுவராகிய இயோசிமா 1943 ஆம் ஆண்டு ஏப்ரல் 18 ஆம்திகதி ரிபெண்ட்ரோபிடம் பின்வருமாறு தெரிவித்தான்: "ஏற்கெனவே 20 ஆண்டுகளாக ஜப்பானிய பிரதான படைத் தலைமையகம் தீட்டி வரும் திட்டங்கள் எல்லாம் ருஷ்யாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்காகவே என்பதுமட்டும் விவாதத்திற்கு அப்பாற்பட்டது..."

பிரதான ஜப்பானிய போர் குற்றவாளிகள் மீது நடந்த சர்வதேச ட்ரிப்யூனலின் ஆவணங்களும் இதை மெய்ப்பிக்கின்றன.


சோவியத் யூனியனுக்கு எதிரான போராட்டத்தில் பாசிச ஜேர்மனியோடு சேர்ந்து ஜப்பானுக்கு முக்கிய தாக்குதல் சக்தியினை பங்களித்த அமெரிக்கா, பிரிட்டிஷ், பிரெஞ்சு ஆளும் வட்டங்கள், கிழக்கில் ஏகாதிபத்ய ஜப்பானின் ஆக்கிரமிப்புகளுக்கு ஊக்கமளித்தன. ஜப்பானின் ஆக்கிரமிப்புக் கொள்கையில் இவை தலையிடாததற்கு இதுதான் காரணம்.

குறிப்பாக பாசிச ஜேர்மனி சோவியத் யூனியனைத் தாக்கியபின் ஜப்பானிய ஆளும் வட்டங்கள் சோவியத் யூனியனுள் நுழைவதற்கான ஏற்பாடுகளை தீவிரமாக ஆரம்பித்தன. 1941 ஆம் ஆண்டு கோடையின் முடிவில் ஜப்பானிய பிரதான படைத் தலைமையகம் தனது அரசாங்கத்தின் கட்டளைக்கேற்ப கோந்தோகூயென் எனும் பெயரில் சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்த தாயாரிப்புத் திட்டத்தைத் தீட்டியது. செயல்முறைத் திட்டங்களின்படி ஒரே நேரத்தில் பிரிமோர்யேவிலும் டிரான்ஸ் பைகாலிலும் ஜப்பானியத் துருப்புகள் நுழைவதென்று திட்டமிடப்பட்டது. இதே திட்டத்தால் குவாண்டுங் இராணுவத்தின் எண்ணிக்கையை இரண்டு மாதங்களில் 3 இலட்சத்திலிருந்து 6 இலட்சமாக உயர்த்தத் திட்டமிடப்பட்டது.

சோவியத் யூனியனின் மீது தாக்குதல் தொடுப்பதற்காக அனுகூல மான தருணத்தை மட்டுமே ஜப்பான் எதிர் நோக்கியது. மாஸ்கோ அருகே பாசிச


# இராணுவ ஜப்பானின் தோல்வி

ஜேர்மனியத் துருப்புகளின் வெற்றி இத்தகைய தருணமாக இருந்திருக்க வேண்டும். ஆனால், இது நடைபெறவில்லை. மாறாக சோவியத் தலைநகரருகேதான் பாசிசத் துருப்புகள் தங்களுடைய முதல் பெரும் தோல்வியைச் சந்தித்தன. ஜப்பானும், சோவியத் யூனியனுக்கு எதிரான போரில் இறங்கவில்லை.


ஜப்பானின் கடற்படைக் கப்பல்கள்

1942 ஆம் ஆண்டு ஜப்பானிய பிரதான படைத் தலைமையகம் சோவியத் யூனியனுக்கு எதிரான புதிய யுத்தத் திட்டத்தை தீட்டியது. இதன்படி விளாடிவஸ்தோக் மீது தரைப் படைகளோடு சேர்ந்து கடற்படை மற்றும் வான்படையின் திடீர் தாக்குதலைத் தொடுப்பதென முடிவு செய்யப்பட்டது. அதேநேரத்தில் குவாண்டுங் இராணுவம் பிளாகவேஷென்ஸ்க் மீது தாக்குதலைத் தொடுக்க வேண்டும்.

ஸ்டாலின்கிராட் கூர்ஸ்க் சமர்களில் சோவியத் துருப்புகள் அடைந்த வெற்றி சோவியத் யூனியனுக்கு எதிரான இராணுவ ஜப்பானின் ஆக்கிரமிப்புத் திட்டங்களை குலைத்தன. ஆனால், ஜப்பானியத் தரப்பு நடுநிலையைப் பற்றி, 1941 எப்ரல் 13 இல் செய்துகொள்ளப்பட்ட உடன்பாட்டைத் தொடர்ந்து மீறிவந்தது. 1941 கோடை முதல் 1944 இறுதிவரை ஜப்பானிய கடற்படை 128 சோவியத் கப்பல்களைப் பிடித்தது. 1941 ஆம் ஆண்டில் மட்டும் குவாண்டுங் இராணுவம் 144 தடவைகள் சோவியத் எல்லையை மீறியது, சோவியத் பரப்பை நோக்கி 39 தடவைகள் சுட்டது. ஜப்பான் தன்னுடைய இராஜதந்திர, இராணுவ அமைப்புகளின் மூலம் சோவியத் நாட்டின் பொருளாதார, அரசியல், இராணுவ நிலவரம் பற்றிய இரகசியத் தகவல்களை நாஜிகளுக்கு அளித்தது.


ஜப்பானியரின் விசேட தாக்குதல் பிரிவின் பயிற்சி மையம்

சாராம்சத்தில் தொலை கிழக்கில் இயக்கம் இல்லாவிட்டாலும் போர் முனை நிலவியது. இப்பிரதேசத்தில் இருந்த உண்மையான நிலவரத்தை கணக்கில் கொண்ட சோவியத் யூனியன் 40 டிவிசன்களைப் பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்டத்திலிருந்து பிரித்து மஞ்சூரிய எல்லையில் நிறுத்தியிருந்தது. ஸ்தாபன ரீதியாக இவை ஜெனரல் புர்காயெவ் தலைமையிலிருந்த, தொலைகிழக்கு சேனையிலும் ஜெனரல் கவலேவ் தலைமையிலிருந்த ட்ரான்ஸ் பைகால் சேனையிலும் அடங்கியிருந்தன.

ஐரோப்பாவில் பாசிச ஜேர்மனியும் இதன் துணை நாடுகளும் முறியடிக்கப்பட்டபின் ஏகாதிபத்திய ஜப்பான், நேச நாட்டினருக்கு எதிரான இராணுவ நடவடிக்கை களைத் தொடர்ந்தது, நிபந்தனையற்ற சரணாகதியைப் பற்றி 1945 ஆம் ஆண்டு ஜூலை 26 ஆம் திகதி அமெரிக்கா, கிரேட் பிரிட்டன், சீனா விடுத்த கூட்டு பிரகடனத்தை இது நிராகரித்தது.

இதனால் ஜப்பானுக்கு எதிரான யுத்தத்தில் இறங்குமாறு அமெரிக்க, பிரிட்டிஷ் அரசாங்கங்கள் சோவியத் அரசாங்கத்திற்கு முன்மொழிந்தன. தனது நேசநாட்டு கடமைக்கு விசுவாசமான சோவியத் யூனியன் யால்டா மகாநாட்டு தீர்மானத்தின் அடிப்படையில் இந்த முன்மொழிவை ஏற்றது.

(தொடரும்)

# கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்ட விவகாரம்; விசாரிக்க மூன்று நீதியரசர்கள்

(மட்டக்களப்பு)

**கிழக்கு மாகாண சபையின் 5 வருட பதவிக்காலம் முடிவதற்குள் அதனை கலைத்து தேர்தல் நடத்த எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் செல்லுபடியற்றது என அறிவிக்குமாறு கோரி மேன் முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை விசாரிப்பதற்காக மூன்று நீதியரசர் களைக் கொண்டு அமர்வு பெயரிடப்பட்டுள்ளது.**

சிசிர ஆப்ரூ, ஏ. டபிள்யூ.ஏ. சலாம், அனுரகுணரட்ன ஆகிய நீதியரசர்கள் இந் தக்குழுவில் இடம்பெற்றுள்ளனர். சாதாரண மாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக் கல் செய்யப்படும் ரீட் மனுக்களை விசாரிக்க இரண்டு நீதியரசர்களே நியமிக்கப்பட்டு வார்கள்.

எனினும் மனுவில் முக்கிய பிரச்சி னைகள் சில எழுப்பப்பட்டுள்ளதால் அதற்கு தீர்வுகாண மூன்று பேர் கொண்ட நீதியர சர்கள் குழு முன் ஆராய்வது மிகவும் பொரு த்தமானது என மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர் தெரிவித்துள்ளார்.

இந்த நீதியரசர்கள் மனுவை ஆராய்ந்த பின்னர் சகல தரப்பினரின் விருப்பத்திற்கு அமைய மனு மீதான விசாரணைகளை எதிர்வரும் 20 ஆம் திகதி நடத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபையின் 5 வருட பதவிக் காலம் முடிவதற்குள் அதாவது அடுத்த வருடம் மே மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் மாகாண சபையை கலைக்க மாகாண ஆளு நருக்கு அதிகாரமில்லை என மனுவில் கூறப் பட்டுள்ளது.

மாகாண அமைச்சரவையின் விருப்ப த்தை பெற்றுக்கொண்ட பின்னர் மாகாண சபையைக் கலைப்பதற்கான ஆலோசனை யை முதலமைச்சர் ஆளுநருக்கு வழங்க வேண்டும் எனவும் அவ்வாறின்றி மாகாண சபையை கலைப்பது சட்டத்திற்கு முரணா னது என மனுதாரர் மனுவில் கூறியுள்ளார்.

அதேவேளை இந்த மனு மீதான நீதி மன்ற விசாரணைகள் நடந்து முடியும் வரை கிழக்கு மாகாணத்தை கலைத்து ஆளுநர் எடுத்துள்ள தீர்மானத்தை இடைநிறுத்து மாறும் தேர்தலை நடத்த எந்த நடவடிக்கை யும் எடுக்க வேண்டாம் என தேர்தல் ஆணை யாளருக்கு உத்தரவிடுமாறும் மனுவில் கோரப் பட்டுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி கனகஈஸ்வரன், சட்டத்தரணி பீ.ஏ. சுமந்திரன் ஆகியோர் மனு தார் சார்பில் ஆஜராகவுள்ளனர். (அ-2)

# இலங்கை வாழ் தமிழர்களுக்கு சமவுரிமை வழங்கப்படவேண்டும்

## ஜி.கே. வாசன் வலியுறுத்து

(கொழும்பு)

இந்திய தாம்பரம் பயிற்சிப்படைத் தளத் தில் பயிற்சி அளிக்கப்படவுள்ளதாக இல ங்கை விமானப் படையின் 9 வீரர்களும் உடனடியாக அவர்களது நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் வாசன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த் தியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை விமானப்படையின் 9 வீரர்க ளுக்கு தாம்பரம் பயிற்சிப் படை தளத்தில் பயிற்சி அளிக்கப்படவுள்ளதாக வந்துள்ள செய்தி வருத்தமளிப்பதாக உள்ளது.

இலங்கை வீரர்கள் உடனடியாக அவர் களது நாட்டிற்கு திருப்பி அனுப்பப்பட வேண்டும்.

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்துவோம் என்று அமைச்சர் கூறினார். (அ-2)



இலங்கையின் விசேட கல்வி நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு யா/முத்துத்தம்பி மகா வித்தியாலய விசேட கல்வி அலகினால் விசேட கல்வி விழிப்புணர்வு ஊர்வலமும் களப்பயணமும் அண்மையில் நடைபெற்றது. இவ்விசேட கல்வி விழிப்புணர்வு ஊர்வலத்தில் கலந்து கொண்ட மாணவர்கள், ஆசிரியர்களை படங்களில் காணலாம்.

# சன் சீ யின் ஏழாவது சந்தேகநபரை நாடு கடத்துவதற்கு கனடா திட்டம்

(கொழும்பு)

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 492 இலங்கைத் தமிழ அகதிகளுடன் கனடா வுக்குச் சென்ற சன் சீ கப்பலின் சந்தேக நபர்களில் ஒருவர் கனேடிய அரசினால் இலங்கைக்கு நாடு கடத்தப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த அகதிகள் கப்பலினை கனடா வுக்கு கரை சேர்த்தவர்களாக 7 நபர்கள் மீது கனேடிய அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்நிலையில் ஏழாவது சந்தேக நபராக இனங்காணப்பட்ட இந்நபரை நாடு கடத்து வதற்கு கனேடிய அரசாங்கம் ஏற்பாடு செய்து வருவதாக தெரிய வருகின்றது.

இந்நிலையில் குறித்த நபர் மீது ஆட் கடத்தல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள தோடு கனேடிய மண்ணுக்கு ஆபத்தானவர் என கனேடிய அரசு தெரிவித்துள்ளது. (அ-2)

## ஞானச்சுடர் வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆனி மாத ஞானச்சுடர்.நூல் வெளிவந்துள்ளது.

இந்நூலானது சைவ சமய வினா விடை, சிறுவர் கதைகள், படங்கள்தரும் பதிவுகள், ஆன்மீகத் தகவல்கள், சமயப்பெரி யாரின் வரலாற, கந்தரனுபூதி தொடர் போன் றவற்றை தாங்கி வெளிவந்துள்ளது. (அ-9)


- தபால் மூலம் -

**ஆறு மாத கால டிப்ளோமா**

**Course Length - Six Month**

**July 2012 to December 2012**

22

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

(சி-432)

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.07.2012


# கிழக்கு மாகாண சபையின் ஆட்சியை கூட்டமைப்பு கைப்பற்றும்

## அரியம் எம்.பி. தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண சபையின் ஆட்சியை இம்முறை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு கைப்பற்றும். அதற்கான முயற்சிகளில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் களத்தில் இறங்கி அர்ப்பணிப்போடு பாடுபடும் என தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்தி ரன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபைத்தேர்தல் தொடர்பாக கருத்துக் கேட்டபோது,

அவர் கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் கூறியவை வருமாறு,

நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தலை சர்வதேச சமூகம் குறிப்பாக இந்தியா, அமெரிக்கா உட்பட பல நாடுகள் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டி ருக்கின்றன. தமிழ்மக்களைப் பொறுத்தவரை இது மிக முக்கியமான தேர்தலாகும்.

ஆகையால் தமிழ் மக்களுக்கும் தமிழ்த்தேசியக் கூட்ட மைப்புக்கும் மிக முக்கியமான தேர்தலாக கிழக்கு மாகாண சபைத்தேர்தல் அமையவுள்ளது.

கிழக்குத் தேர்தலில் தமிழ் மக்கள் அனைவரும் ஓர ணியில் திரண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்கின்ற போது கிழக்கின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் என்பது திண்ணம்.

கிழக்கில் அனைத்து மக்களும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு பின்னால் அணிதிரண்டுள்ளனர். இதனைக் கடந்த கால தேர்தல்களிலும் மக்கள் வெளிக் காட்டியுள்ளனர்.

இம்முறை கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் போட்டியிடுவதற்கென மட்டக்களப்பு, அம்பாறை, திரு கோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களில் இருந்தும் நூற்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்களது விண்ணப்பப் படிவங்கள் எமக்கு கிடைத்துள்ளன.

இதன்படி யாரைத் தேர்தல் களத்திலும் நிறுத்துவது என்பது குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலுள்ள ஏனைய கட்சிகளுடன் தற்போது கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

இதேவேளை கிழக்கு மாகாண சபை கலைப்பு தொடர் பான இரு நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் இருக்கின் றன. இவ்வழக்குகள் தொடர்பான தீர்ப்புகள் வெளிவரும் வரை கூட்டமைப்பு காத்திருக்கின்றது.

இருந்தாலும் வேட்பாளர்கள் தெரிவு உட்பட தேர்தலு க்கான முன் ஆயத்தங்களில் கட்சி ஈடுபட்டுள்ளது. எதிர்வரும் 19 ஆம் திகதி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நிச்சயம் வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும். (அ-2)

# மரணித்த சிறைக்கைதியின் உடலை பொறுப்பேற்க யாருமே இல்லையாம்

## நீலிக் கண்ணீர் வடிக்கிறார் அமைச்சர் கஜதீர

(கொழும்பு)

மரணமடைந்துள்ள வவுனியா கைதியின் சடலத்தை பொறுப்பேற்க யாரும் இல்லை. கைதியின் பிரேத பரிசோதனைகள் இன்னும் பூர்த்தியடையவில்லை. அதனால் மரணம் தொடர்பில் சரியான காரணத்தை தற்போது வெளியிட முடியாது என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

வவுனியா சிறைச்சாலையில் மரணமடைந்த தமிழ்க் கைதி தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பியான சம்பந்தன் விடுத்த விசேட கூற்றுக்கே அமைச்சின் சார்பில் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில், கைதியொருவர் இறந்துள்ளார் என்பது உண்மைதான். பிரேத பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றன. அது இன்னமும் முழுமையடையவில்லை. முழுமையடைந்ததும் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அதற்கு பின்னரே கைதியின் மரணத்துக்கான காரணத்தை அறிவிக்க முடியும்.

எனினும் அந்தக் கைதி ஒரு நோயாளி, இருதய நோய்க்காக சிகிச்சை பெற்று வருபவர் என்பதை நான் ஏற்கனவே கூறியிருந்தேன்.

மரணமடைந்தவரின் சடலத்தை குடும்பத்திடம் வழங்க வேண்டும் என்ற விடயத்துக்கு நான் பொறுப்பல்ல. அது தொடர்பில் பதிலளிக்கவும் முடியாது. எனக்குத் தெரிந்த வகையில் சடலத்தை பொறுப்பேற்க யாருமே இல்லை. சடலத்தை கையளிக்க வேண்டுமாயின் பொறுப்பேற்பதற்கு யாராவது இருக்க வேண்டும்.

வவுனியா சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் அரசாங்கமும் எமது அமைச்சும் விசாரணைகளை தனித்தனியே நடத்தி வருகின்றது. விசேட ஆணையாளர் ஒருவரும் விசாரணைக்காக நியமிக்கப்பட்டு அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்திற்கு பின்னர் எந்தக் கைதிக்கும் துன்புறுத்தல்கள் இடம்பெறாது என உறுதியாகக் கூறுகின்றேன். அத்துடன் சம்பவத்தை வைத்துக் கொண்டு புனர்வாழ்வு நடவடிக்கைகள் எக்காரணத்தைக் கொண்டும் திசை திருப்பப்படமாட்டாது.

புனர்வாழ்வை விரும்பும் சகலருக்கும் நாம் புனர்வாழ்வளிக்க தயாராக இருக்கின்றோம். ஏனையவர்களின் வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இம்மாதம் தொடக்கம் துரிதப்படுத்தப்படும் என்றார்.

இதேவேளை, இறந்து போன கைதியின் சடலத்தை வவுனியா நெளுக்குளத்திலுள்ள தமது வீட்டுக்கு தருமாறு அவரது பெற்றோர் மன்றாட்டத்துடன் கோரி வருகின்றனர் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (அ-2)

## மறைத்து வைக்கப்பட்டிருந்த பலகைகள், தீராந்திகள் மீட்பு

(யூனியன் குளம்)

முழங்காவில் பகுதியில் மறைத்து வைக்கப்பட்ட பெருந்தொகையான பலகைகள், தீராந்திகளை அரிந்து வைத்திருந்த நபரை மன்னார் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக தெரியவருவதாவது,

முழங்காவில் பகுதியில் காட்டு மரங்களை வெட்டி அவற்றில் தயாரிக்கப்பட்ட பலகைகள், தீராந்திகள் ஆகியவற்றை பொலிஸார் குறித்த நபரின் வீட்டில் கைப்பற்றியதுடன் அரிந்து வைத்திருந்த நபரையும் கைது செய்துள்ளனர்.

மன்னார் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே மேற்படி சம்பவம் இடம் பெற்றதாக தெரியவருகின்றது. (அ-2-270)

## பிரிட்டனில் இலங்கையர் படுகொலை விவகாரம்

### வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(லண்டன்)

பிரிட்டனில் இலங்கையர் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

சமீர சந்திரசேன (வயது 28) என்ற இலங்கையரை கொலை செய்ததாக இரண்டு இலங்கையர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவரது சடலம் கடந்த பெப்ரவரி மாதம் ஒக்ஸ்போட் பகுதியில் எரியூட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.

இதனையடுத்து குற்றம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இரு இலங்கையர்கள் பிரித்தானிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் கடந்த வியாழக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இதன்போது நீதிபதி வழக்கு விசாரணைகளை ஓகஸ்ட் 24 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (அ-2)



ரணவிரு றியஸ் ஸ்டார் எனும் திறமைகளைத் தேடும் இசை நிகழ்ச்சியின் இறுதி நிகழ்வு நேற்று முன்தினம் மாலை சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முதற் பெண்மணி ஷிராந்தி ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் படைத்தளபதிகள் என பலர் கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம்.

## நாட்டின் நற்பெயரை அனைவரும் இணைந்து பாதுகாக்க வேண்டும்

### ஜனாதிபதி அறிவுரை

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சு, நிதியமைச்சு மற்றும் துறைமுக நெடுஞ்சாலைகள் அமைச்சுகளுக்கான பாராளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி நேற்று முன்தினம் பாராளுமன்றம் சென்றுள்ளார்.

இதனையடுத்து இலங்கை சட்டக் கல்லூரியில் ஸ்ரீலங்கா சுதந்திர மாணவர்கள் சங்கத்தின் அதிகாரிகள் குழுவொன்றும் ஜனாதிபதியை சந்தித்துள்ளது. பல்வேறு தரப்பினரும் தாய் நாட்டுக்கு எதிராக தேசிய, சர்வதேச ரீதியில் மேற்கொள்ளும் பிரசுரங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

சட்டக்கல்லூரி மாணவர்கள் என்ற வகையில் இத்தகைய தவறான கருத்துக்களை சரி செய்வது சகலரதும் பொறுப்பு என தெரிவித்த ஜனாதிபதி தாய் நாட்டின் நற்பெயரை பாதுகாப்பதற்கு சகலரும் இணைந்து செயற்பட வேண்டிய யுகமொன்று உருவாகியுள்ளதாகவும் இதன்போது தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாட்டில் அவ்வப்போது ஏற்படும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் தீர்வு பெற்றுக் கொள்வதற்கு நாட்டை நேசிப்பவர்கள் என்ற ரீதியில் சகலரும் பொறுப்புடன் செயற்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (அ-2)

## சிறைக்கைதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காவிட்டால் அவர்களை விடுவியுங்கள்

### சம்பந்தன் நாடாளுமன்றில் உரை

தமிழ்க் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வழக்குத் தொடராமல் நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுதலை செய்யுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பாராளுமன்றில் கோரியுள்ளார். தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் தொடர்பான விசாரணைகள் நடத்தப்படும் என அரசாங்கம் வாக்குறுதி அளித்த போதிலும் இதுவரையில் விசாரணைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பாராளுமன்றில் ஆற்றிய விசேட உரையின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாவிட்டால் ஏன் அவர்களை விடுதலை செய்ய முடியாது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகள் துன்புறுத்தப்படுவதாகவும் இது மனித உரிமை மீறல் பிரச்சினையாகக் கருதப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, சிறைச்சாலை உத்தியோகத்தர்களை கைதிகள் பணயமாக வைத்திருந்தால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அதனை தவிர்க்க முடியாது எனவும் சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

அண்மையில் வவுனியாவில் கைதிகளிடமிருந்து சிறைச்சாலை அதிகாரிகளை மீட்கும் நடவடிக்கையின் போது ஒரு துப்பாக்கித் தோட்டாவைக் கூட விசேட அதிரடிப்படையினர் பயன்படுத்தவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



சிறைக் கைதிகள் தடிகள், இரும்புக் கம்பிகள் உள்ளிட்ட பல்வேறு ஆயுதங்களை பயன்படுத்தியதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். (எ-11)

# நவநீதம்பிள்ளையின் கையில் சிக்கியிருக்கும் அரசின் குடுமி

## பேரின தேசியவாத சக்திகளை திசை திருப்பும் உத்தி....?



ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அதிகாரிகள் குழுவை அரசாங்கம் இலங்கைக்குள் அனுமதிக்க இணங்கும் முடிவுக்கு வந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அலுவலகத்தில் இருந்து வரும் அதிகாரிகளை இலங்கை அரசாங்கம் எதிர்க்காது- அவர்களை வரவேற்கும் என்று, ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் கடந்தவாரம் கூறியிருந்தனர். அந்தச் செய்தி வெளியாகி பல நாட்களாகியும் அரசாங்கத்திடம் இருந்து அதற்கு எதிர்ப்போ நிராகரிப்போ வரவில்லை. எனவே, இந்தச் செய்தி பொய்யானது அல்ல என்பதை உறுதி செய்ய முடிகிறது. ஏனென்றால், உண்மையாக இல்லாதிருப்பின் இது அரசாங்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதொரு செய்தி.


இவ்வளவு காலமும் எந்தவொரு ஐ.நா. குழுவையோ, அதிகாரிகளையோ விசாரணை நடத்தும் நோக்கில் இலங்கையில் காலடி எடுத்து வைக்க அனுமதிக்க முடியாது என்றே அரசாங்கம் கூறிவந்தது. அரசாங்கம் இந்த நிலைப்பாட்டில் எந்தளவுக்கு உறுதியாக நின்றதோ அதைவிட இன்னும் அதிகமான எதிர்ப்பை சிங்கள பௌத்த பேரினவாதிகள் காட்டிவந்தனர். தமது பிணங்களுக்கு மேலாகத்தான் ஐ.நா. அதிகாரிகள் உள்ளேவர முடியும் என்றெல்லாம் ஜாதிக ஹெல உறுமயவின் பிக்குகளும் அரசியல்வாதிகளும் எச்சரித்தனர். இப்படிப்பட்ட மிகவும் உணர்வுபூர்வமான விவகாரமாக மாற்றப்பட்டுள்ள இந்த விடயத்தில் தமது நிலைப்பாடு தவறாக வழிநடத்தப்பட அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது. இது போன்ற சர்ச்சைக்குரிய விவகாரங்களில் முடிவுகளை எடுக்கும்போது எப்போதுமே அதன் தாக்கம் என்னவாக இருக்கும் என்று மேலோட்டமாக ஆழம் பார்க்கும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதுண்டு.

இப்படி நடந்தால் என்ன நடக்கும்?


மக்கள் கிளர்ந்தெழுவார்களா?

அரச எதிர்ப்புப் போராட்டம் வெடிக்குமா அல்லது அமைதியாகவே கழிந்துபோகுமா என்று நிலைமையை ஆழம் பார்ப்பது பொதுவாக கையாளப்படும் ஒரு தந்திரம்தான். ஆங்கில ஊடகமொன்றில் வெளியான இந்த செய்திகூட அப்படி ஆழம்பார்க்க அரசுக்கு உதவியாக அமைந்திருக்கலாம். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளைக்கு இது தொடர்பான அதிகாரபூர்வ பதிலை அரசாங்கம் அனுப்பியதாக தகவலில்லை. அதிகாரபூர்வ தகவலை அனுப்பினாலும்கூட, அதை அரசாங்கம் இப்போதைக்கு வெளியிடாது. ஊடகங்களில் செய்திகளைக் கசியவிட்டு மக்களின் மனோநிலையை நாடி பிடித்துப் பார்த்தபின்னரே அந்தச் செய்தி வெளியே விடப்படும். அதற்கு முன்னர், அரசல் புரசலான செய்திகள் தான் கசியவிடப்படும்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் கடிதத்திற்கு சாதகமான பதிலை அரசாங்கம் அனுப்



பப்போவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கடந்த சில வாரங்களாகவே பேச்சடிபட்டது. இந்த விடயத்தில் ச்ர்வதேச சமூகத்துடன் முரண்டு பிடிப்பது. அரசாங்கத்திற்கே ஆபத்தாக அமைந்துவிடும்நிலை காணப்பட்டது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணைய அதிகாரிகளை உள்ளேவிடாமல் தடுத்தால், அந்த விவகாரத்தை நவநீதம்பிள்ளை மேலும் சிக்கலான கட்டத்திற்குள் கொண்டு



சென்றுவிடக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, இணங்கிப் போவதைவிட வேறுவழியேதும் அரசுக்கு இருக்கவில்லை.

ஐ.நா.பொதுச் செயலாளர் பான்கீமூன் நிபுணர் குழுவை நியமித்தபோது அது சட்டரீதியானது அல்ல என்றும் அவர்களை உள்ளே விடமுடியாது என்றும் அடம்பிடித்த அரசாங்கம் இப்பொழுது அதே இறுக்கத்தை நவநீதம் பிள்ளையிடம் காண்பிக்க முடியாத நிலையில் உள்ளது. ஐ.நா பொதுச் செயலாளருக்குக் கீழேதான் நவநீதம்பிள்ளை பணியாற்றுகிறார். ஆனால், பான்கீமூனை எதிர்த்த அளவுக்கு நவநீதம்பிள்ளையுடன் அரசாங்கம் இப்போது முரண்டு பிடிக்கவில்லை. காரணம் பான்கிமூன் ஐ.நா.நிபுணர் குழுவை நியமித்தபோது அதற்கு பாதுகாப்புச் சபையோ, பொதுச் சபையோ அங்கீகாரம் கொடுக்கவில்லை. ஆனால், நவநீதம்பிள்ளைக்கு ஐ.நா.மனித உரிமைகள் பேரவை ஒரு பொறுப்பைக் கொடுத்துள்ளது. அதை அவர் நிறை வேற்றுவதற்கு இலங்கை முட்டுக்கட்டையாக இருந்தால், மீண்டும் இலங்கையின் கழுத்தை ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவை பிடித்து நெரிக்கும் நிலை உருவாகி விடும். ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் பொறுப்பும் கட்டுப்பாடும் சர்வதேச அங்கீகாரம் பெற்றது என்பதால், அரசாங்கம் மசிந்து கொடுத் தேயாக வேண்டிய நிலையில் இருக்கிறது. அதைவிட நவநீதம்பிள்ளையின் கையில்தான் இலங்கை அரசாங்கத்தின் குடுமி வேறு சிக்கியிருக்கிறது.

ஜெனிவாத் தீர்மானத்திற்கு அமைவாக அவர் அடுத்த மார்ச் மாதம் இலங்கை தொடர்பான அறிக்கையை பேரவையில் சமர்ப்பிக்க வேண்டும். இவற்றையெல் லாம் கருத்திற்கொண்டு தான் அரசாங் கம் இணக்கத்திற்குவர முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. அண்மையில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் உரையாற்றியபோது கூட ஐ.நா. பொதுச் செயலர் பான்கீமூன் நவ நீதம்பிள்ளையின் அலுவலகத்துடன் இலங்கை அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டிருந்தார். அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளும் இதையே வலியுறுத்தின. இதற்கு மேலும் முரண்டு பிடிப்பதோ பிடிவாதம் காட்டுவதோ சர்வதேச நெருக்கடிகளைத்தான் அதிகரிக்கச் செய்யுமேதவிர குறைக்காது. இதனால்தான் வேறு வழியின்றி இறங்கிப்போக முனைகிறது. இதை அரசாங்கம் அதிகாரபூர்வமாக அறிவிக்கவும் இல்லை; அறிவிக்கவும் முடியாது.

காரணம், சிங்கள தேசியவாதிகள் இதனை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அவர்களை அரசாங்கமே ஊக்குவித்து ஐ.நா.வை எதிர்த்து நிற்கவைத்திருந்தது. இதனால், அவர்கள் அரசாங்கத்திற்கு எதிராக திரும்பும் நிலை ஏற்படும். எனவே, அவர்களின் கவனத்தை வேறுபக்கம் திசைதிருப்பிவிட்டே இந்த விவகாரத்தை வெளியே கசியவிடமுடியும். சிலவேளைகளில் ஐ.நா. அதிகாரிகள் குழுவின் வருகையை அரசாங்கம் இரகசியமாக வைக்கவும் முயற்சிக்கலாம். ஆனால், அப்படியான இரகசியப் பயணம் என்பது நடைமுறைச் சாத்தியமாக இருக்க வாய்ப்பில்லை. ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அதிகாரிகள் குழுவின் முக்கியமானதொரு விசாரணை இலக்கு, சரணடைந்த பின்னர் காணாமற்போன போராளிகள் தொடர்பாக நல்லிணக்க ஆணைக் குழுவின்முன் சாட்சியமளித்தோரை சந்திப்பதாகும். இதனை அரசாங்கத்தினால் அவ்வளவுக்கு ஜீரணிக்க முடியாமல் போனாலு வேறு வழியில்லாத நிலை உள்ளது. இவ்வாறு பகிரங்க விசாரணைகளை ஐ.நா. அதிகாரிகள் நடத்த முற்படும்போது அது இரகசியமானதாக இருக்க முடியாது. இந்த நிலையில் சிங்கள தேசியவாதிகளை திசை திருப்பி அவர்களின் கவனத்தைக் குலைக்கவே மூன்று மாகாண சபைகளை கலைத்துள்ளதாகக் கருதப்படுகிறது.

முன்னதாக மாகாண சபைகளை ரம்ழான் நோன்புக்காலத்தில்- வரட்சியான சூழல் நிலவும்போது கலைக்க வேண்டாம் என்று கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. அப்போது அதை ஏற்றுக் கொள்வதாகவே அரசாங்கம் காட்டிக்கொண்டது. திடீரென இப்போது மாகாணசபைகளைக் கலைத்துவிட்டுத் தேர்தலுக்குத் தயாராகியுள்ளது அரசாங்கம். இது சர்வதேச அழுத்தங்களின் விளைவு மாகாணசபைத் தேர்தல் பரபரப்புக்குள் ஐ.நா. அதிகாரிகளை இலங்கைக்குள் அனுமதிக்கிகப் பார்க்கிறது அரசாங்கம். இந்த உத்தி அரசாங்கத்துக்கு கைகொடுக்குமா அல்லது காலை வாரிவிடுமா என்பது தெரியவில்லை. எவ்வாறாயினும் சாதாரண சூழலில் ஐ.நா. அதிகாரிகளின் வருகைக்கு எதிர்ப்பை மட்டுமே தெரிவிக்க முடியும். இப்படியானதொரு சூழலில் ஐ.நா. அதிகாரிகளின் வருகைக்கு அனுமதித்த அரசாங்கத்துக்கு, சிங்களத்தேசியவாதிகள் வாக்குகளின் மூலமும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தவும் முடியும்.

நன்றி: இணையம்

# பட்டதாரி பயிலுநர் நியமனம் தொடர்பில் கீழ் உழைப்பு பட்டதாரிகள் முறையீடு

## அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 2005 ஆம் ஆண்டு பட்டதாரிகள் நியமனம் வழங்கப்பட்ட போது கீழ் உழைப்பு பட்டதாரிகளாக இருந்தவர்களுக்கு பயிலுநர் நியமனம் வழங்கப்படாமல் சேவைக் காலத்தினை உள்ளடக்கியதாக நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.

ஆனால், தற்போது அவ்வாறான நடைமுறை பின்பற்றப்படாமையினால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என கீழ் உழைப்பு பட்டதாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்துடன் கலந்துரையாடியதோடு மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.அந்த மகஜரில் யாழ்.மாவட்டத்திலிருந்து இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரி பயிலுநர்களின் ஆட்சேர்ப்பு விண்ணப்பப்படிவத்தின் 4.1, 4.2 ஆம் பிரிவுகளில் கோரப்பட்ட தொழிலின் தன்மை, சேவை நிலையமும் சேவை நிலைய முகவரியும் என்பன கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

அத்துடன் நேர்முகத்தேர்வில் எம்மால் கடமையாற்றுவதை உறுதிப்படுத்தி சமர்ப்பிக்கப்பட்ட தொழில் தகைமை சான்றிதழ் பொருட்படுத்தப்படவில்லை.

கீழ் உழைப்பு பட்டதாரிகளாகிய நாம் விதவை, அநாதை ஓய்வூதிய இலக்கம் பெற்றுக் கொண்டுள்ள நிலையில் ஓய்வூதிய உதவு தொகையையும் ஓய்வூதிய திணைக்களத்திற்கு செலுத்தி வருகின்றோம். இந்நிலையில் மேற்படி கடிதத்தின் மூலம் எமது சேவைக்காலம் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

தங்களால் வழங்கப்பட்ட கடிதத்தில் அபிவிருத்தி திட்டங்களின் பொருட்டு தகவல் சேகரிப்பதற்காக 6 மாத காலத்திற்கு மாவட்ட செயலகம், பிரதேசசெயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ளதாக மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் பின்னர் நிரந்தர நியமனம் வழங்கப்படுவது பற்றி குறிப்பிடப்படாமையால் கீழ் உழைப்பு பட்டதாரிகளாக உள்ள நாம் ஏற்கனவே வகிக்கும் பதவிகளையும் கைவிட்டு புதிய நியமனமும் நிச்சயமற்ற நிலைக்கே தள்ளப்பட்டுள்ளோம்.

கடந்த 2005 ஆம் ஆண்டு பட்டதாரிகள் நியமனம் வழங்கப்பட்டபோது கீழ் உழைப்பு பட்டதாரிகளாக இருந்தவர்களுக்கு பயிலுநர் நியமனம் வழங்கப்படாமல் சேவைக்காலத்தினை உள்ளடக்கியதாக நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. அவ்வாறான நடைமுறை தற்போது பின்பற்றப்படவில்லை.

எனவே, கீழ் உழைப்பு பட்டதாரிகளான எமது மேற்படி கோரிக்கைகளை கருத்திற்கொண்டு எமக்கும் தற்போதைய சேவைக் காலத்தினை உள்ளடக்கியதாக நிரந்தர நியமனத்தினை வழங்க ஏற்ற நடவடிக்கையினை மேற்கொண்டு உதவுமாறு பணிவாக கேட்டுக் கொள்கிறோம் என அந்த மக்ஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த மகஜருடன் பாதிக்கப்பட்ட கீழ் உழைப்பு பட்டதாரிகள் சுமார் 65 பேர் கையொப்பமிடப்பட்ட பட்டியலும் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-6)

# சுன்னாகம் லயன்ஸ் கழகத்துக்கு புதிய நிர்வாகசபைத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் லயன்ஸ் கழகத்துக்கு 2012/2013 ஆம் நடப்பு வருடத்துக்கான புதிய நிர்வாக சபை பதவியேற்பு அண்மையில் நடைபெற்றது.

கழகத்தின் புதிய தலைவராக ஓய்வு நிலை திட்டமிடல் பணிப்பாளர் லயன் த.தேவராஜன், செயலாளராக வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரன், பொருளாளராக போரூட் நிறுவன உத்தியோகத்தர் லயன் ஆர்.சிவநாயகம், உபதலைவர்களாக ஊடகவியலாளர் லயன் செல்லப்பா நடராஜா, காரைநகர் பிரதேச செயலக அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர் லயன் சி.கஜன், லயன் யோ.பஞ்சாட்சரராணி ஆகியோரும் மற்றும் 8 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் லயன்ஸ் கழகத்தின் செயற்றிட்டமாக வாழ்வகம் விழிப்புலன் வலுவிழந்தோர் நிலையத்துக்கு அண்ணா நிறுவனத்தயாரிப்பிலான சத்துணவுப் பொதிகள் அந்நிறுவனப் பிரதிநிதியும் ஓய்வுநிலை அதிபருமான பொ.கமலநாதனிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ-9)

# விசாரணைகள் இப்படியும் நடக்கின்றன?

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் பயணித்த பெரும்பான்மை இனத்தை சேர்ந்த இரு இளைஞர்கள் துவிச்சக்கரவண்டியில் பயணித்த பெண்ணொருவரை மோதி காயப்படுத்தியுள்ளனர்.

ஆயினும் காயமடைந்த பெண் சார்பில் வாதிட்ட இளைஞர்கள் இருவரை பொலிஸார் தமது நிலையத்திற்கு அழைத்து சென்றுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் நேற்றுக்காலை 9.30 மணியளவில் ஐந்து சந்தியில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

மானிப்பாய் பகுதியில் இருந்து யாழ்.நகர் நோக்கி மிக வேகமாக பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள், நாவலர் வீதியில் இருந்த ஐந்துசந்தியை துவிச்சக்கரவண்டியில் கடக்க முயன்ற பெண்ணொருவரை மோதியதில் குறித்த பெண் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இவ் விபத்து சம்பவத்தின் சரி பிழைக்கு அப்பால் இவ்விபத்துடன் தொடர்புடையவர்கள் தென்பகுதியை சேர்ந்தவர்கள் என்பதால் யாழ்.நகர பொலிஸார் சரியான முறையில் விசாரணைகளை மேற்கொள்ளவில்லை என சம்பவ இடத்தில் நின்றவர்கள் தெரிவித்தனர்.

இதனை விட காயப்பட்ட பெண்ணை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற அவரது சகோதரன் விபத்து நடைபெற்ற மோட்டார் சைக்கிளை பூட்டிவிட்டு திறப்பையும் கொண்டு சென்றுள்ளார்.

இவ்விடயத்தை அறிந்த இரு இளைஞர்கள் திறப்பை பெற்று பொலிஸாரிடம் கொடுக்க முயன்றுள்ளனர்.இதனால் மோட்டார் சைக்கிளை பூட்டியது சட்டவிரோதமானது என கூறி இருவரையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றனர்.

இதனால் பொலிஸாருக்கும் இளைஞர்களுக்கும்.இவ்விபத்தில் முறுகல் நிலை யேற்றபடவே சம்பவ இடத்திற்கு விரைந்த இராணுவத்தினர் கூடியிருந்த இளைஞர்களை விரட்டிவிட்டு விபத்தை ஏற்படுத்திய இரு தென்பகுதி இளைஞர்களிடமும் சுமுகமாக கதைத்து விட்டு சென்றுள்ளனர்.

இவ்விபத்து தொடர்பாக தாம் முறைப்பாடு பதிவு செய்துள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

(அ-4)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

இதயம் கனிந்த நல் வாழ்த்துக்கள்



"இரத்தின தீபம்"

திரு.வ.க.ஜெயபாலன்-J.P

சிறந்த சமூக சேவையாளரும், மனித உரிமை ஆர்வலரும்,மக்கள் பணியாளர் அமைப்புக்களில், ஆலய, பாடசாலை அமைப்புக்களில் செயலாளர்,தலைவராகப் பணியாற்றியவரும், முந்நாள் கூட்டுறவு நிறுவனங்களின் பொது முகாமையாளரும் அகில இலங்கை சமாதான நீதவான் ஆகிய வ.க ஜெயபாலன் அவர்கள் 09.06.2012இல் கண்டி-மலையக கலை, கலாசாரசங்கத்தால் நடத்தப்பட்ட மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரியில் நிகழ்ந்த 17 ஆம் வருட **இரத்தின தீபம்** விருது வழங்கல் விழாவில் ,வட மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு நபராக சிறந்த சமூகசேவையாளர், கல்வியாளருக்கான விருதினைப்பெற்று கௌரவிக்கப்பட்டதையிட்டு எமது உளமார்ந்த பாராட்டுக்களையும் நல் வாழ்த்துக்களையும் நல்கின்றோம். மேலும் பல பட்டங்கள் பெற்று மக்கள் தொண்டாற்றி நீடூழி வாழ இறைவன் அருள் வேண்டிப்பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:- மனைவி, பிள்ளைகள்
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்,
நலன்விரும்பிகள்

இல. 80/5 ,பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

காரியாலயம்: 15, கச்சேரி
நல்லூர்,கச்சேரியடி யாழ்ப்பாணம்.
தொ.பே:-0771304900, 0215684261

(8775)


# ஊடகத்துறையை கௌரவமாக கையாள வேண்டும்-அமைச்சர் நிமால்

(கொழும்பு)

ஊடக சுதந்திரம் என்ற போர்வையில் இரகசியமாக செயற்படுவது தனிப்பட்ட சுதந்திரத்திற்கும் அரச பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாகும். நீதிமன்ற அனுமதியுடன் சட்டவரையறைக்குட்பட்டே சி.ஐ.டியினர் செயற்பட்டதாக சபை முதல்வர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா எக்ஸ் நியூஸ் காரியாலயம் பொலிஸாரினால் சோதனையிடப்பட்டது தொடர்பாக எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க சபையில் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டார்.

இது தொடர்பாக பதிலளித்த அமைச்சர் மேலும் கூறியதாவது, ஊடகத்துறையை கௌரவமாகவும் கவனமாகவும் கையாள வேண்டும். ஊடக சுதந்திரத்தின் பேரில் அதனை அழிக்க முயல்வது கவலைக்குரியதாகும். ஊடகங்கள் மக்களுக்காகவே செயற்பட வேண்டும். மோசமான மனநிலையில் உள்ள சிலர் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தனிப்பட்ட ரீதியில் நபர்களை அவமதிக்க ஊடகத்தை பயன்படுத்துகின்றனர்.

இது ஊடக சுதந்திரமல்ல. ஊடகங்கள் வெளிப்படையாகவே செயற்பட வேண்டும். ஊடக சுதந்திரத்தின் போர்வையில் இரகசியமாக செயற்படுவது தனிப்பட்ட சுதந்திரத்திற்கும் அரச பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாகும். இதனால் சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவதற்காக பொலிஸார் நீதிமன்ற அனுமதியுடன் குறித்த இணையத்தளத்தை சோதனையிட்டனர்.

அரசாங்கம் குறித்து மக்கள் மத்தியில் அகௌரவத்தை ஏற்படுத்தும் நோக்குடன் அரச விரோத செயல் இடம்பெறுவதாக கிடைத்த தகவல்படியே புலனாய்வுத் துறையினர் இந்த இணையத்தள அலுவலகத்தை சோதனை செய்தனர்.

இல்லாத ஒரு சட்டத்தின் கீழ் இங்கிருந்தவர்கள் கைது செய்ததாக எதிர்க்கட்சி தலைவர் கூறுவது தவறாகும். புலனாய்வு துறையினர் தகவலின் அடிப்படையிலே சி.ஐ.டி இந்த விசாரணையை முன்னெடுத்தது.

நாட்டில் காணப்படும் சட்டத்திற்கு அமைவாகவே இது தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டதோடு கைது நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

(அ-2)



# சிறுவர் அரங்கம்

153

## நன்றி மறப்பது நன்றல்ல

### பஞ்ச தந்திரக் கதைகள்

பெரிய ஆற்றங்கரையில் நிறைய அளவில் நாவல் மரங்கள் செழிப்புடன் காணப்பட்டன.

பழங்கள் நன்றாக பழுத்து உதிரும் காலமாததால் அவைகளில் இருந்து விழுந்த நாவல் பழங்களை அந்த மரங்களில் ஓடி ஆடி குதித்து வந்த குரங்குகள் உண்டு மகிழ்ந்தன.

அந்தக் குரங்குகளில் கொஞ்சம் வயதான குரங்கு ஒன்று ஒரு நாவல் மர நிழலில் ஓய்வு எடுத்துக் கொண்டு இருந்தது.

இவ்விதமாக குரங்கு ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த வேளையில் முதலை ஒன்று நீந்தி குரங்கு ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த இடத்தை அடைந்தது.

முதலையை கண்ட குரங்கிற்கு கொஞ்சம் அச்சமாகத்தான் இருந்தது. பின்னர் அது ஓய்வெடுக்கத்தான் வருகிறது என்பதை தெரிந்து கொண்டு அதனுடைய நட்பையும் பெற வேண்டும் என்ற எண்ணமுடன் கொஞ்சம் நாவல் பழத்தைப் பறித்து அதற்குக் கொடுத்தது.

அந்தப் பழங்களை நன்கு சுவைத்து மகிழ்ந்த முதலை நாள்தோறும் அதே வேளையில் வரத் தொடங்கியது.

அந்தக் குரங்கும் முதலை வரும் போதெல்லாம் நாவல் பழங்களை பறித்துக் கொடுத்து அதைத் தன்னுடைய நண்பனாக ஆக்கிக் கொண்டது.

ஒரு நாள் குரங்கு நிறைய அளவில் பழங்களை பறித்துக் கொடுக்கவும் முதல்லை உண்டது போக எஞ்சிய பழங்களை தன் அன்பு மனைவிக்கு எடுத்துச் சென்றது.

நல்ல சுவை தரும் பழங்களை உண்டு மகிழ்ந்த முதலையின் மனைவி தன் கணவனிடம் இவ்வளவு சுவையுள்ள இந்த நாவல் பழங்க்ள் எங்கிருந்து கிடைத்தன என்று கேட்டபோது அந்த முதலை தன்னுடைய நண்பனான குரங்கு பற்றிக் கூறி அது தான் தனக்கு தினமும் பறித்துத் தருகிறது என்று கூறியது.

இவ்விதம் ஆண் முதலை கூறவும் அந்தப் பெண் முதலை எதையோ தீவிரமாக எண்ண ஆரம்பித்தது.

எதையோ தன் மனைவி மிகவும் தீவிரமாக எண்ணுகிறாளே. என்னவாக இருக்கும் என்று அறியும் எண்ணத்துடன் அதனிடம் என்ன காரணம் என்று கேட்கவும் இந்தப் பழங்களை ஒரு நாளைக்கு சுவைக்கவே எவ்வளவு இனிமையாக உள்ளது.

இவைகளை இத்தனை நாட்களாக உண்டு வந்த உங்கள் நண்பனுடைய இதயத்தை உண்டால் எவ்வளவு சுவையாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

ஆகவே நீங்கள் எப்படியும் அந்தக் குரங்கின் இதயத்தை எனக்கு கொண்டு வர வேண்டும் என்று கூறியதும் ஆண் முதலைக்கு பெரிதும் திகைப்பு ஏற்பட்டது. அளவு கடந்த கோபமும் வந்தது.

இவள் என்ன பைத்தியம் போல பேசுகிறாளே. நாவல்பழத்தை நாமே தின்று தீர்க்காமல் இவளுக்கு கொண்டு வந்து கொடுத்ததே தப்பாக போய் விட்டதே.

இவள் இப்போது குரங்கைக் கொன்று தன் இதயத்தை அல்லவா கொண்டு வரச் சொல்கிறாள். என்ன செய்வது என்று வேதனைப்பட்ட ஆண் முதலை, நீ என்ன பேச்சுப் பேசுகிறாய்.

அவன் என்ன சாதாரண நண்பனா? அவன் என் உயிரினும் இனிய நண்



பனாயிற்றே. அவனையா கொன்று இதயத்தைக் கொண்டு வரச் சொல்கிறாய் என்று கூறி பெரும் வேதனையுற்றது ஆத்திரமும் கொண்டது.

எனக்கு அதெல்லாம் தெரியாது அவனுடைய இதயம் வேண்டும் .அந்த இதயம் நிச்சயமாக சுவையுடையதாகத் தான் இருக்கும். எப்படியும் கொண்டு வந்து தான் தீர வேண்டும் என்று கூறி விட்டது.

என்ன செய்யும் பாவம். அது உயிரினும் இனிய மனைவியாயிற்றே. குரங்கைப் பார்க்கப் போய்விட்டது. மிகவும் சோகமாக வந்த முதலையப் பார்த்து என்ன நண்பா ? இன்று என்ன இவ்வளவு சோகமாக இருக்கிறாய்.

இதைப்போல ஒருநாளும் இருந்ததில்லையே என்று கூறிட முதலை மேலும் சோகமாக தன்னுடைய முகத்தை வைத்துக் கொண்டு நண்பனே இன்று என் மனைவி மிகவும் கோபித்துக் கொண்டால் உங்கள் நண்பர் எத்தனை தினங்கள் நல்ல சுவையுள்ள பழங்களை தந்திருக்கிறார்.

நீங்கள் ஒரு நாளாவது அவரை உங்களுடன் நம் வீட்டிற்கு விருந்திற்காக அழைத்து வந்திருக்கிறீர்களா? என்று கேட்டு கோபித்துக் கொண்டாள்.

நானும் ஒரு ஆனை மடையன். உன்னை ஒருநாள் கூட அழைத்துச் செல்லவில்லையே என்று எண்ணித்தான் வருந்துகிறேன் என்று கூறிய முதலை சரி சரி நீ என்னுடன் இன்று வர வேண் டும். எங்கள் வீட்டில் விருந்து உண்ண வேண்டும் என்று கூறி முடித்தது அந்த முதலை.

குரங்கு சிரித்தது. எப்படி நண்பா நான் உன்னுடன் வர முடியும். நீ தண்ணீரில் வசிப்பவன் நான் தரையில் வசிப்பவன். எவ்விதம் நான் அங்கு வர முடியும் என்று கேட்டது குரங்கு .

உண்மை தான். நான் ஆற்றினுள் தான் இருக்கிறேன். இந்த ஆற்றின் நடுவே ஒரு மண்டபம் தெரிகிறது அல்லவா. அதில் நீ இருந்து கொள்ளலாம் .

நான் அந்த இடத்திற்கு என் மனைவி சமைத்த உணவுடன் வருகிறேன். நீயும் நானும் சேர்ந்து உண்டு மகிழலாம் என்றது.

குரங்கும், நம்முடைய நல்ல நண்பனாயிற்றே முதலை. இவன் விரும்பி அழைப்பதால் சென்று வரலாம் என்று எண்ணி முதலையின் முதுகில் ஏறிச் சென்றது.

ஆற்றின் ஆழமான பகுதியை அடைந்ததும் இனி மேல் இந்தக் குரங்கு தப்பிக்க நினைத்தாலும் தப்பிக்க முடியாது என்பதை தெரிந்து கொண்ட முதலை மெல்லக் குரங்கிடம் பேச ஆரம்பித்தது.

அன்பு நண்பனே உன்னை நான் ஏமாற்றி விட்டேன் என்றது. குரங்கு எந்த வித பதற்றமும் அடையவில்லை.

நீ என்ன சொல்கிறாய் நீ என்னை ஏமாற்றி விட்டாயா? இல்லையே என்னை ஆற்றின் நடுவில் உள்ள மண்டபத்திற்குத் தானே அழைத்துச் செல்கிறாய் என்று நிதானமாக கேட்டது. எந்த வித பதற்றமும் அது அடையவில்லை.

இந்தக் குரங்கு நாம் ஏமாத்தி விட்டோம் என்று சொன்ன பின்பும் மிகவும் அமைதியாக இருக்கிறதே என்று எண்ணிய முதலை நண்பனே நான் உன்னை கொல்லப் போகிறேன் என்றது. அப்போதும் குரங்கு நிதானத்தை இழக்கவில்லை.

என்னை நண்பனே நீயா கொல்லப் போகிறாய். உனக்கு அப்படி ஒரு ஆசை இருந்தால் கொன்று விடேன். ஆனால் நீ என்னை கொல்லும் அளவுக்கு நான் உனக்கு எந்தவித துன்பத்தையும் செய்யவில்லையே என்று நிதானமாக கூறியது.

நண்பனே உன்னிடம் எப்படிச் சொல்வதென்றே தெரியவில்லை. நீ தந்த நாவல் பழங்களை என் மனைவியிடம் கொண்டு கொடுத்ததுதான் பெரிய தவறாக போய் விட்டது.

நீ தந்த நாவல் பழங்கள் அதிக சுவையாக இருப்பதை எண்ணிப் பார்த்த என் மனைவி உன் இதயம் எவ்வளவோ சுவையாக இருக்கும் என்றும் அதனால் அதைத் தின்ன வேண்டும் என்றும் கூறுகிறாள்.

நல்ல சுவையுள்ள நாவல் பழங்களை தின்றுதின்று உன் இதயம் அவ்வளவு சுவையாக இருக்கும் என்று அவள் எண்ணுகிறாள்.

அதனால்தான் உன்னை அழைத்துச் செல்கிறேன். எவ்வளவோ அவளிடம் சொல்லிப் பார்த்தேன் அவள் கேட்பதாக இல்லை என்றது முதலை .

இவ்விதம் முதலை கூறியதை கேட்ட குரங்கு எந்த வித அச்ச உணர்வையோ பதற்ற உணர்வையோ அப்போதும் அடைவில்லை. நிதானமாகத் தான் பேசியது.

நண்பனே உன் மனைவி கேட்பது நியாயம் தானே. எவ்வளவு நாவல் பழங்களை நான் தின்றுள்ளேன். நிச்சயமாக என் இதயம் சுவையுடையதாகத் தான் இருக்கும்.

நீ, நாம் புறப்படுவதற்கு முன்னாள் இந்த விடயத்தை சொல்லி இருக்கலாமே விருந்திற்குத் தானே போகப் போகிறோம்.

இதயத்திற்கு என்ன வேலை என்று எண்ணி அதை கழற்றி அல்லவா வைத்திருக்கிறேன். ஒரு காரியம் செய் கொஞ்சம் விரைவாக என்னை கரையில் கொண்டு போய்விடு. பொந்தில் வைத்து வந்த என் இதயத்தை பொல்லாத பூனையோ காக்கையோ எடுத்து சென்று விடக் கூடாது என்று மிகவும் அக்கறையுள்ளது போல் கூறவும் இந்த அந்த முதலையும் நம்பி விட்டது.

வேக வேகமாக கரையை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது. கரையை அடைவதற்கு சிறிது முன்னரே ஒரு பாய்ச்சலாக பாய்ந்து சென்று விட்டது.

குரங்கு மரத்தில் ஏறி அமர்ந்து கொண்டு ஏய் முட்டாள் முதலையே யாராவது இதயத்தை கழற்றி வைத்து விட்டு வர முடியுமா? நீ நம்பி விட்டாயே என்று கூறி அப்போதும் ஆத்திரப்படாமல் சிரித்த வண்ணம் தான் கூறியது குரங்கு.

இனி என்ன செய்யலாம். நாம் இந்தக் குரங்கிடம் ஏமாந்து விட்டதை காட்டிக் கொள்ளக் கூடாது என்று எண்ணிய முதலை புத்திசாலித்தனமாக பேசுவது போன்று பேச ஆரம்பித்தது.

நண்பனே எனக்குத் தெரியும் இதயத்தைப் பிரித்து வைக்க முடியாது என்று இவ்விதம் சொன்னதும் நீ எப்படி நடந்து கொள்வாய் என்று பார்க்கத் தான் இவ்விதம் கூறினேன்.

நீ கொஞ்சமும் கோபப்படவும் இல்லை. பதற்றப்படவும் இல்லையே. வா என்னுடன் விருந்தாளியாக நீ வருவாய் என்று எதிர்பார்த்திருப்பாள் என் மனைவி என்றது முதலை .

ஆமாம் ஆமாம். என்னுடைய உணவையும் சேர்த்து நீ சாப்பிடு அது இருக்கட்டும் உனக்கு ஒரு கதை தெரியுமா என்று கேட்டது குரங்கு.

என்ன கதை என்று முதலை கேட்டதற்கு அது தான் இரண்டு முறை ஏமாந்த கழுதையின் கதை என்று கூறி கதையை கூற ஆரம்பித்தது.

### அசாமில் ஏற்பட்ட வெள்ளத்தால்

# காஜிரங்கா வனவிலங்கு சரணாலயம் நீரில் மூழ்கியது; 543 விலங்குகள் பலி



(கோலாகட்)

அசாம் மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் புகழ்பெற்ற காஜிரங்கா தேசிய வனவிலங்கு சரணாலயத்தினுள் வெள்ளநீர் புகுந்ததில் அங்கிருந்த சுமார் 543 வன விலங்குகள் பலியாகின.

சரணாலயத்திற்குள்புகுந்தவெள்ள நீரால் 80 சதவீத பூங்கா பகுதி சேதமடைந்ததுடன் அங்கிருந்த நீர் யானை, சாண்டாமிருகம், மான், காட்டு எருமை, பன்றிகள் உட்பட பல்வறு விலங்குகள் என மொத்தம் 543 விலங்குகள் பலியாகியுள்ளன.

மேலும் மேடான பகுதிகளில் இருந்த விலங்குகள் [illegible]ரியல் பூங்காவில் இருந்து தப்பி அருகில் உள்ள காட்டுக்குள் தப்பிச் சென்றன. அவற்றை பிடிக்கும் பணியில உயிரியல் பூங்கா ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள். இதுபற்றி காஜிரங்கா உயிரியல் பூங்கா நிர்வாகி அபிஜித் பவால் கூறும் போது, உயிரியல் பூங்கா முழுவதும் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது. இங்கிருந்து தப்பிச் சென்ற விலங்குகளை பிடிக்கும் பணியைதீவிரப்படுத்தியுள்ளோம். மழை தொடர்ந்து பெய்வதால் காட்டுக்குள் செல்ல கடினமாக உள்ளது. ஆனால், ஊழியர்களின் தீவிர முயற்சியால் 2 காண்டாமிருகம் உட்பட 75 விலங்குகள் மீட்கப்பட்டுள்ளன. அவைகளுக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளித்து நிறைய உணவுகளும் வழங்கப்படுகிறது. அத்துடன் இறந்த மிருகங்களின் உடல்களை அப்புறப்படுத்தும் வேலை நடைபெற்று வருவதாகவும் வெள்ள நீர் முழுவதும் வடிந்த பின்னர் முழு விபரம் தெரிய வருமெனவும் அவர் கூறியுள்ளார். அத்துடன் 27 மாவட்டங்கள் முழுவதும் வெள்ளக் காடாக காட்சி அளிக்கிறது. இதுவரை அங்கு மழைக்கு 115 பேர் பலியாகியுள்ளனர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு இராணுவம் வரவழைக்கப்பட்டது. வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் இராணுவ வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (அ-2)

# இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பும் அகதிகள் எண்ணிக்கையில் சரிவு

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பும் அகதிகளின் எண்ணிக்கை இவ்வாண்டில் பெருமளவில் குறைந்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் ஹைகமிஷனர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு, இந்தியாவில் இருந்து இவ்வாண்டில் இதுவரை 662 பேர் இலங்கை திரும்பியுள்ளனர். ஐ.நா. உதவியுடன் அவர்கள் நாடு திரும்பியுள்ளனர். இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் இருந்ததை விடக் குறைவாகும். அப்போது இந்த எண்ணிக்கை 932 ஆக இருந்தது. ஒட்டுமொத்தமாக இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கடந்த ஆண்டில் ஆயிரத்து 728 பேர் திரும்பினர்.

இது குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் ஹைகமிஷனர் அலுவலகப் பிரதிநிதி மைக்கேல் ஸ்வாக் கூறுகையில், இலங்கை திரும்பும் அகதிகளின் எண்ணிக்கை குறைந்தது ஏன்? என்பதை அறுதியிட்டுக் கூறுவது கடினம். இது தனி நபர்கள் எடுக்கும் தனிப்பட்ட முடிவாகும் என்றார். தமிழகத்தில் உள்ள அகதிகள் முகாம்களில் இருந்தே பெரும்பாலோர் இலங்கை திரும்புகின்றனர். மலேசியா, ஜோர்ஜியா, ஹொங்கொங் ஆகிய நாடுகளில் இருந்தும் சிலர் வருகின்றனர். அகதிகள் பெரும்பாலும் திருகோணமலை, ம்ன்னார், வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, கொழும்பு, முல்லைத்தீவு, புத்தளம், கண்டி ஆகிய பகுதிகளுக்குத் திரும்புகின்றனர். (அ-2)

# இலங்கை எம்.பிக்களுக்கு அழைப்பு விடுக்கப்படும்

## கருணாநிதி தெரிவிப்பு



சென்னையில் நடைபெறவுள்ள டெசோ மாநாட்டில் பங்கேற்க வெளி மாநிலத்தவர்களுக்கும் இலங்கைத் தமிழ் எம்.பிக்களுக்கும் அழைப்பு விடுக்கப்படும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில், டெசோ மாநாட்டில் பங்கேற்க வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கும் இலங்கைத் தமிழ் எம்.பிக்களுக்கும் அழைப்பு விடுக்கப்படும்.


முல்லைப் பெரியாறு குறித்து ஆராய அமைக்கப்பட்ட நீதிபதி ஆனந்த் தலைமையிலான குழு அளித்த அறிக்கை ஒருதலைப்பட்சமானது. எனவே, அதனை ஏற்கமாட்டோம் என்றும் புதிய அணை கட்டப்பட்டே ஆக வேண்டும் என்றும் கேரள முதல்வர் உம்மன் சாண்டி கூறியுள்ளார்.

முல்லைப்பெரியாறில்புதிய அணை கட்டக்கூடாது என்பதில் தமிழகமும் உறுதியாக இருக்க வேண்டும். தமிழகத்தில் பயிற்சிபெற்ற இலங்கை விமானப் படையினரை மத்திய அரசு திருப்பி அனுப்பியுள்ளது. அவர்களுக்கு வேறு மாநிலங்களில் பயிற்சி அளிக்கப்பட்டால் பார்ப்போம் என்றார் கருணாநிதி. (அ-2)

பாரதச் செய்தி

# ஹசாரே குழுவினரின் உண்ணாவிரதப் போராட்டம் திட்டமிட்டபடி ஜீன் 25 ஆம் திகதி நடைபெறும்

## சிசோடியா தெரிவிப்பு



(புலந்தர்ஷர்)

டில்லி ஜந்தர் மந்தரிலே திட்டமிட்டபடி எதிர்வரும் 25 ஆம் திகதி காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படும். கைதுசெய்யப்பட்டால் சிறையில் போராட்டம் தொடரும் என ஹசாரே குழுவைச் சேர்ந்த சிசோடியா தெரிவித்துள்ளார்.

பலமான லோக்பால் மசோதாவை நிறைவேற்ற மத்திய அரசு தவறியது உட்பட பல்வேறு காரணங்களுக்காக மேற்படி போராட்டம் டில்லிஜந்தர்மந்தரில்முன்னெடுக்கப்படவுள்ளது. காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டம் நடத்த அனுமதி கோரி ஹசாரே குழுவினர் டில்லி நகர பொலிஸில் விண்ணப்பித்திருந்தனர். இதற்கு டில்லி பொலிஸார்அனுமதிமறுத்துவிட்டனர்.


பொலிஸார் அனுமதி மறுத்த நிலையில் உத்தர பிரதேச மாநிலத்தில் போராட்டம் குறித்த பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வந்திருந்த ஹசாரே குழு உறுப்பினரும் சமூக ஆர்வலருமான மணீஷ் சிசோடியா கூறுகையில், நாங்கள் டில்லி ஜந்தர் மந்தரில் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்த டில்லி பொலிஸாரிடம் அனுமதி கோரி விண்ணப்பித்தோம். அதற்கு அவர்கள் அனுமதி மறுத்துள்ளனர். எங்களது போராட்டத்திற்கு டில்லி பொலிஸார் அனுமதி மறுக்க மத்திய உள்துறைஅமைச்சர் பி.சிதம்பரம் தான் காரணம். நாங்கள் திட்டமிட்டபடி எமது போராட்டத்தை ஜந்தர் மந்தர் பகுதியிலேயே ஆரம்பிப்போம் கைது செய்யப்பட்டால் சிறைகளில் போராட்டத்தை நடத்துவோம் என்றார்.

அசாமில் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சேத மதிப்பீடு குறித்து ஆய்வுசெய்ய சமூக ஆர்வலரும் ஹசாரே குழு உறுப்பினருமான அகில் கோ[illegible]ய் சென்ற போது, அவரை சிலர் தடிகளாலும் கூர்மையான ஆயுதங்களாலும் தாக்கினர். தலையில் பலத்த காயமடைந்த அவர் இதுகுறித்து பொலிஸில் புகார் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ 2)



இந்தியா வந்திருந்த மலேசிய வெளியுறவு விவகாரங்களுக்கான அமைச்சர் அர்வின்பூலெல் (இடது) பிரதமரின் பொருளாதார ஆலோசகர் சி.ரங்கராஜனை டில்லியில் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# தென்னாபிரிக்காவிடமிருந்து மகாத்மா காந்தியின் ஆவணங்களை விலைக்கு வாங்க இந்தியா முடிவு



தென் ஆபிரிக்காவில் மகாத்மா காந்தி வாழ்ந்த போது எழுதிய அரிய கடிதங்கள், அவருடைய ஆவணங்கள் புகைப்படங்களை விலைக்கு வாங்க ஏல நிறுவனத்துடன் இந்திய அரசு ஒப்பந்தம் செய்துள்ளது.

இதனால் அடுத்த வாரம் நடக்க இருந்த ஏலம் இரத்துச் செய்யப்பட்டது. தென் ஆபிரிக்காவில் கடந்த 1904 ஆம் ஆண்டில் காந்தி பணி செய்த போது அவருடைய நெருங்கிய நண்பராக ஹெர்மான் கலன் பேக் இருந்தார். அப்போது காந்தி நிறைய கடிதங்கள் எழுதியுள்ளார். ஆயிரத்துக்கும் அதிகமான இந்த அரிய கடிதங்கள், ஆவணங்கள், புகைப்படங்களை சர்வதேச ஏல நிறுவனமான சோத்பி எதிர்வரும் 10 ஆம் திகதி ஏலம் விடுவதாக அறிவித்திருந்தது.

இதையடுத்து ஏல நிறுவனத்துடன் இந்திய கலாசாரத்துறை அமைச்சக அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். காந்தியின் அரிய கடிதங்கள், படங்களைவிலைக்குவாங்குவதற்கான ஒப்பந்தத்தில் இந்திய அதிகாரிகள் கையெழுத்திட்டனர்.

இதனால் நாளை மறுதினம் நடக்க இருந்த ஏல நிகழ்ச்சி இரத்துச் செய்யப்பட்டதாக சோத்பி நிறுவனம் நேற்று முன்தினம் அறிவித்தது. காந்தியின் அரிய கடிதங்கள் 5 இலட்சம் பவுண்ட் முதல் 7 இலட்சம் பவுண்ட் வரை விலை போகும் என்று ஏல நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த அரிய கடிதங்களில் காந்தியின் நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள் பற்றி விபரங்கள் அடங்கி உள்ளன. காந்தியின் முதல் மகன் ஹரிலால் ஹெர்மனுக்கும் காந்தியின் 2 ஆவது மகன் மணிலாலுக்கும் இருந்த நெருங்கிய நட்புறவு, 3 ஆவது மகன் ராம்தாஸ் ஏனைய குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் பற்றிய விபரங்கள் இந்த கடிதங்களில் இடம் பெற்றுள்ளன.

இந்தக் கடிதங்கள் ஆராய்ச்சியாளர்களுக்கும் வரலாற்று ஆசிரியர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். காந்தியின் அரிய கடிதங்கள் விலைமதிப்பற்றவை என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது. (2)

# தேர்தலில் செல்வாக்கை அதிகரிக்க வியூகத்தை மாற்றினார் ஒபாமா



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் ஜனாதிபதி ஒபாமாவும் எதிர்க்கட்சியான குடியரசு கட்சி சார்பில் மிட்ரோம்னியும் போட்டியிடுகின்றனர். எனவே இவர்கள் இருவரும் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தேர்தல் நிதி திரட்டுவதில் தீவிரமாக உள்ளனர். இந்த நிலையில் வேலைவாய்ப்பு பிரச்சினையால் ஒபாமாவின் செல்வாக்கு சரிந்த நிலையில் இருந்தது. எனவே ஒபாமா தனது பிரசார வியூகத்தை மாற்றியுள்ளார்.

மிட்ரோம்னி மகாசும் மாகாணத்தில் ஆளுநராக இருந்த போது அவுட் சோர்சிங் வேலைகளை இந்தியா, சீனா, போன்ற நாடுகளுக்கு வழங்கினார். இதனால் அமெரிக்கர்களின் வேலை வாய்ப்பை பறித்தார். வேலையில்லா திண்டாட்டத்தை உருவாக்கியவர் மிட்ரோம்னி என்ற குற்றச்சாட்டை தெரிவித்தார்.

மேலும் ஒபாமா கொண்டு வந்துள்ள அனைவருக்கும் சுகாதாரத் திட்டம் செல்லும் என சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

எனவே ஜனாதிபதி ஒபாமாவின் செல்வாக்கு 45 சதவீதத்தில் இருந்து 48 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது சமீபத்தில் சி.என்.என். மற்றும் ஓ.ஆர்.சி இன்டர்நஷனல் நிறுவனம் இணைந்து நடத்திய கருத்து கணிப்பில் தெரிய வந்துள்ளது. (அ-2)

# ஆசாத்துக்கு நெருக்கமானவர் சிரியாவை விட்டு வெளியேறினார்

சிரியாவின் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு மிகவும் நெருக்கமான இராணுவத் தளபதியாக இருந்த மனாஃப் தலாஸ் என்பவர் சிரியாவிலிருந்து வெளியேறி விட்டதாக பிரான்ஸ் அறிவித்துள்ளது.

இவர் சிரியாவிலிருந்து புறப்பட்டு பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் வந்ததாக பிரெஞ்சு வெளிவிவகாரத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சிரியாவின் அரசாங்கத்தில் உள்ளவர்கள் அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதன் மூலம் ஜனாதிபதி ஆசாத் அரசாங்கத்தின் மீதான தமது அதிருப்தியை வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளதாக அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார்.

சிரியாவில் அரசுக்கு எதிராக போராட்டங்களை வன்முறையின் மூலம் அடக்கியது தொடர்பில் தலைமைத்துவத்துடன் பிளவுபட்டு ஜெனரல் தலாஸ் விலகிப் போனதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# ஜனாதிபதி-பிரதமரை பாதுகாக்க பாக். பாராளுமன்றில் புதிய சட்டம்

ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி மீது ஊழல் வழக்குத் தொடர்ந்து விசாரணை நடத்த உயர் நீதிமன்றம் உத்தரவிட்டதையடுத்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் இருந்து ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு வதிவிலக்கு அளித்து பாதுகாக்கப் பாராளுமன்றத்தில் புதிய சட்டம் கொண்டு வரப்படுகின்றது.

இவர்களை தவிர மாநில முதல் மந்திரிகள், ஆளுநர்கள், மத்திய, மாநில அரசுகளின் மந்திரிகளுக்கும் விதிவிலக்கு அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்தகவலை பாகிஸ்தான் தகவல்துறை மந்திரி குவாஷ் ஷமான் கைரா தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டம் உயர் நீதிமன்றத்தின் அதிகாரத்தை குறைக்கும் நோக்கத்தில் கொண்டு வரவில்லை. நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தண்டனை பெற்றவர் அதை எதிர்த்து அப்பீல் செய்யும் உரிமை வழங்கும் வகையில் தான் இந்த சட்டம் கொண்டு வரப்படுகின்றது. இதை அரசியல் சட்டம் 248(1) பிரிவில் தெரிவிக்கின்றது என்று அவர் தெரிவித்தார்.

இந்த சட்டத்தை தாக்கல் செய்ய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால் இதை பிரதான எதிர்க்கட்சியான பி.எம். எல். (என்)



கடுமையாக எதிர்த்துள்ளது. எனவே பாராளுமன்றத்தில் இச்சட்டம் நிறைவேற்றுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் சட்டம் நிறைவேற்ற மூன்றில் 2 பங்கான 228 எம்.பி. க்களின் ஆதரவு தேவை. அதற்கு எதிர்க்கட்சியான பி.எம்.எல்.(என்) ஆதரவு அளிக்க வேண்டும். (அ-2)



ஆப்கானிஸ்தானில் நேட்டோ படையினருக்கு பாகிஸ்தான் வழியாக பாதை திறந்து விடப்பட்டதற்கு பாகிஸ்தான் இராணுவ குழு அமைப்பைச் சேர்ந்தவர்கள் கராச்சியில் அமெரிக்காவை கண்டித்து கண்டன பேரணி நடத்தியதைப் படத்தில் காணலாம்.

# பார்வையாளர் படை உயரதிகாரியாக இந்தியர் நியமனம்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் டிஸ்என் கேஜ்மென்ட் பார்வையாளர் படையின் உயரதிகாரியாக இந்தியாவைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் இக்பால் சிங் சின்ஹாவை ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச்செயலாளர் பான் கீ மூன் நியமித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் சிரியா நாட்டிற்கிடையேயான அமைதி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான பணிகளை சின்ஹா் தலைமையிலான படை மேற்கொள்ளவுள்ளது. (அ-2)

# ஒலிம்பிக் போட்டியை சீர்குலைக்க சதித்திட்டம் தீட்டிய ஏழு பேர் கைது

(லண்டன்)

இங்கிலாந்தின் தலைநகரான லண்டனில் எதிர்வரும் 27ஆம் திகதி ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகின்றன. அடுத்தமாதம் 12ஆம் திகதி முடிவடைகின்றன. இந்த ஒலிம்பிப் போட்டிகளை சீர்குலைக்க தீவிரவாதிகள் நாசவேலைகளில் ஈடுபடக்கூடும் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

எனவே தீவிரவாதிகள் என்ற சந்தேகத்துக்கு இடமானவர்களை கைது செய்வதில் லண்டன் பொலிஸார் தீவிரம்காட்டி வருகின்றனர். ஏற்கனவே பங்களாதேசத்தைச் சேர்ந்த முன்னாள் பொலிஸ் அதிகாரி ஜகாங்கிர் ஆலம், அவரது சகோதரர்கள் மாய்புர் ஆலம் உள்ளிட்டவர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தநிலையில் ஒலிம்பிக் மைதானம் அருகே ஒரு காரில் ஆயுதங்களை மறைத்து எடுத்துச் சென்ற 7 பேரை தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்கள் ஒலிம்பிக் போட்டியை சீர்குலைக்கும் வகையில் சதித்திட்டம் தீட்டினார்களா என்பது குறித்து தீவிரவிசாரணை நடந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## உலக தரிசனம்

# ரஷ்ய மொழிக்கு அந்தஸ்து வழங்கும் திட்டத்திற்கு பொதுமக்கள் எதிர்ப்பு




ரஷ்ய மொழிக்கு பிராந்திய மொழி அந்தஸ்து வழங்கும் புதிய சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து உக்ரைனில் பொது மக்கள் போராட்டம் நடத்தியுள்ளனர். உக்ரைனின் கிழக்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் பெரும்பாலான மக்களின் தாய்மொழியாக ரஷ்ய மொழி விளங்குகின்றது. இந்நிலையில் புதிய சட்டங்களின் படி ரஷ்ய மொழிக்கு பிராந்திய மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் ரஷ்ய மொழி பேசப்படும் மாகாணங்களில் நீதிமன்றங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் முதலானவற்றில் ரஷ்ய மொழியை பயன்படுத்த முடியும்.

அதேவேளை உக்ரைனிய மொழி தொடர்ந்தும் அரசாங்க மொழியாக இருக்கும். இந்நிலையில் இச்சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து சுமார் ஆயிரம் பேர் வரை போராட்டம் நடத்தினர்.

போராட்டத்தை கலைக்க பொலிஸார் நடத்திய தாக்குதலில் உலகப் புகழ் பெற்ற பிரபல குத்துச் சண்டை வீரர் விட்டாலி கிளிட்ஸ்கோ உட்பட பலர் காயமடைந்துள்ளனர். மேலும் ஜனாதிபதி ரஷ்யாவுக்கு நெருக்கமாக செயற்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன. (அ-2)

# நேபாளத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்தியா, சீனாவின் முதலீடுகள் துணைபுரியும்

## நேபாள துணைப்பிரதமர் தெரிவிப்பு

(காத்மண்டு)

உலகில் வேகமாக வளர்ந்து வரும் நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் சீனாவும் உள்ளன. இந்த இரு நாடுகளுக்கு இடையில் நேபாளம் அமைந்துள்ளது. அதனால் நேபாளத்தின் வேகமான பொருளாதார வளர்ச்சிக்கு இந்த இரு நாடுகளின் முதலீடுகள் வெகுவாகத் துணைபுரியும் என்று அந்நாட்டின் துணைப் பிரதமரும் வெளியுறவுத் துறை அமைச்சருமான நார்ாயண் கஜி ஸ்ரீஸ்தா தெரிவித்துள்ளார்.

காத்மண்டுவில் நடைபெற்ற இந்தியா, சீனா நாடுகளின் வளர்ச்சி வாய்ப்புக்களும் போட்டிகளும் எனும் கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேபாளத்தில் விவசாயம், தொலைத்தொடர்பு மற்றும் நீர்மின்னாற்றல் ஆகிய துறைகளின் முன்னேற்றத்துக்கு இந்தியா, சீனா நாடுகளின் முதலீடுகள் துணை புரியும்.

இரு நாடுகளின் முதலீடுகள் மற்றும் தொழில்நுட்பங்களை நேபாளத்துக்கு கொண்டு வருவதன் மூலம் பிராந்தியப்பொருளாதார வளர்ச்சிக்கு அது உதவும்.

நேபாளத்தில் உள்ள வளங்களைப் பயன்படுத்தி முன்னேற்றம் காணவும் அதிகமான வேலை வாய்ப்புக்களை உருவாக்கவும் நாங்கள் உறுதியோடு இருக்கின்றோம்.

கட்டமைப்பு, பொருளாதாரம், வளர்ச்சிக்கான யோசனைகளை பரஸ்பரம் பகிர்ந்து கொள்வதன் மூலம் நாடுகளிடையேயான உறவுகள் மேம்படும். அதற்கான வழிகளை நாம் கண்டறிய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கில் உரையாற்றிய நேபாளத்துக்கான சீனத் தூதுவர் யாங் ஹொலன்,

நேபாளம் மற்றும் இந்தியாவுடன் பல்வேறு துறைகளில் பரஸ்பரம் ஒப்பந்தம் செய்து கொள்ள சீனா விரும்புகின்றது என்றார்.

நேபாளத்தின் வளர்ச்சிக்காக இந்தியாவுடன் ஒருங்கிணைந்து செயற்பட சீனா ஆர்வமாகவுள்ளது.

தெற்காசிய நாடுகளிடமிருந்து உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்வதை அதிகரிக்க சீனா நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதன்மூலம் இரு பக்கமும் சமநிலையற்ற வர்த்தகத்தை சரி செய்யவும் பல்வேறு துறைகளில் பரஸ்பர முதலீடு செய்யவும் முடியும் என்று தெரிவித்தார்.

நேபாள முன்னாள் நிதியமைச்சரும் நேபாள காங்கிரஸ் தலைவருமான ராம் சரண் மகத்தும் கருத்துரைக்கையில்,

நேபாளத்துக்கு உறுதியான நிர்வாகம் ஒழுக்க நெறிகளுடன் கூடிய தொழிலாளர்கள் தேவை. இந்தியா, சீனா நாடுகளின் உதவியைப் பெற்று சிறந்த உட்கட்டமைப்பு வசதி மற்றும் போட்டியான சூழ்நிலைகளை நேபாளம் உருவாக்க வேண்டும் என்றார். (அ-2)

இனி தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் ~எஸ்.ஏ.வி.செல்வநாயகம்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஆட்டோவில் நடக்கும் சீரழிவுகளைத் தடுக்க வாரீர்!

அன்பர் ஒருவர் நேற்றைய தினம் மிக வேகமாக வலம்புரி அலுவலகத்துக்கு வந்தார். அவரிடம் இனம் புரியாத ஏக்கமும் பரிதவிப்பும் இருந்தது. வந்தவரை ஆசுவாசப்படுத்தி ஐயா! வந்ததன் காரணம் யாதோ? என்றோம்.

எங்கள் கலாசாரம் சீரழிந்து போயிற்று. காப்பாற்றுவார் யாருமில்லை என்று கூறியவாறு தன் தலையில் அடித்துக் கொண்டார்.

வன்புணர்வு,பலாத்காரம், சிறுவர் துஷ்பிரயோகம் என்ற பட்டியலைத்தான் பெரியவர் சொல்கிறார் என்று நாம் நினைத்துக் கொண்டாலும் அவரின் குற்றச்சாட்டுக்கள் ஆட்டோக்கள் மீதாக இருந்தது.

நேற்று முன்தினம் ஆறாம் திகதி பலாலி வீதி தபால் பெட்டிச் சந்தியில் நடந்த சம்பவம்.

பட்டப்பகல் மூன்று முப்பது மணியிருக்கும். தபால் பெட்டிச் சந்தியின் ஓரத்தில் இரண்டு ஆட்டோக்கள் சமாந்தரமாக நிறுத்தப்பட்டிருந்தன. ஒரு ஆட்டோவில் நடப்பதை மற்றையவர்கள் பார்த்துக் கொள்ளாதவாறு மற்றைய ஆட்டோ மறைப்புச் செய்தது.

இரண்டு இளைஞர்கள் ஒரு யுவதியுடன் ஆட்டோவில் இருந்து கொண்டு சல்லாபத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

பலாலி வீதியால் செல்கின்றவர்கள் அந்த அசிங்கமான காட்சியைக் கண்டு யாழ்ப்பாணத்தின் சமகால சீரழிவை நினைத்து நொந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் இரண்டு ஆட்டோக்கள் அணைக்கப்பட்டு 'அணைப்புகள்' நடப்பதாக பலரும் குற்றம்சாட்டி வருகின்ற இவ் வேளையில், ஆட்டோச் சாரதிகளும், உரிமையாளர்களும் மிக விழிப்பாக இருப்பதுடன் தங்கள் தொழில் கௌரவத்தையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டிபாரிய பொறுப்புக்கு உட்பட்டுள்ளனர்.

பட்டப்பகலில், பலாலி வீதி தபால் பெட்டிச் சந்திப் பகுதியில், இரண்டு ஆட்டோக்கள் சமாந்தரமாக விடப்பட்டு ஆட்டோவில் வைத்து விரசமான செயல்களை செய்கின்றபோது அதனால் ஏற்படக் கூடிய சமூகப் பாதிப்புகள் குறித்து சிந்திப்பது அவசியமானதாகும்.

இத்தகைய கீழ்த்தரமான நடவடிக்கைகள் எங்கள் மாணவர்களையும், இளம் சமூகத்தையும் மிக மோசமாகப் பாதிக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை.

கலாசார சீரழிவுகளை கட்டுப்படுத்த வேண்டும் என்ற குரல்கள் வலுவாக ஒலிக்கின்ற இவ் வேளையில், ஒரு குறிப்பிட்ட ஆட்டோ உரிமையாளர்களும், சாரதிகளும் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வது சமூகச் சீரழிவுகளை மேன்மேலும் துரிதப்படுத்தும்.

எனவே, இது தொடர்பில் ஆட்டோ உரிமையாளர்கள் சங்கங்கள் கடுமையான கட்டுப்பாடுகளை விதிப்பதுடன் எங்கள் இனத்தை அழிக்கக் கூடிய கலாசாரச் சீரழிவுகளில் ஈடுபடுகின்ற ஆட்டோ உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதனை சங்கங்கள் செய்யத் தவறும் பட்சத்தில், நேர்மையாகத் தொழில் செய்து வாழ வேண்டும் என்ற உயரிய எண்ணம் கொண்ட ஆட்டோ உரிமையாளர்கள்,சாரதிகளின் நற்பெயருக்கும் களங்கம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# இணையத்தள வடிவமைப்புப் போட்டி

யாழ். பல்கலைக்கழக கணனிச் சங்கமும் வடமாகாண கல்வித் திணைக்களமும் இணைந்து யாழ்.பாடசாலை மாணவர்களுக்கிடையில் இணையத்தளம் 2012 என்ற தலைப்பில் இணையத்தள வடிவமைப்பு போட்டி ஒன்றினை நடத்தவுள்ளதாக யாழ். பல்கலைக் கழக கணனிச் சங்கத் தலைவர் சோ.மயூரன் அறிவித்துள்ளார்.

அதன் முதற்கட்டமாக பாடசாலை மாணவர்களுக்கு இணையத்தளங்கள் பற்றிய அறிமுகம் மற்றும் வடிவமைத்தல் சம்பந்தமாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டும் வலய ரீதியாக ஒவ்வொரு வலயத்திலும் அறிமுக கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

இதற்கமைய யாழ்ப்பாணம்,வலிகாமம், வடமராட்சி மற்றும் தீவகம் ஆகிய வலயங்களில் கருத்தரங்குகளை நடத்தி முடித்துள்ளனர். எதிர்வரும் வாரங்களில் தென்மராட்சி வலயத்தில் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

இப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தங்களுடைய பாடசாலை பொறுப்பாசிரியர்கள் ஊடாகவோ அல்லது பாடசாலை அதிபர் ஊடாகவோ விண்ணப்பப் படிவங்களைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து எதிர் வரும் 2ஆம் திகதிக்கு முன்னர் இணையத்தளம் 2012 வடிவமைப்புப் போட்டி, தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப அலகு, மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம், மருதனார்மடம், சுன்னாகம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என கேட்டுள்ளார்.

அனுப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களுக்கேற்ப பிறிதொரு தினத்தில் செய்முறை பயிற்சிப் பட்டறைகள் நடைபெறும். அதன் பின்னர் மாணவர்கள் தங்களுடைய இணையத்தளங்களை தயாரித்து இறுவட்டில் பதிவேற்றம் செய்து அனுப்ப வேண்டும்.

முதலாம் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறும் இணையத்தளங்களை உருவாக்கும் வெற்றியாளர்களும் ஒவ்வொரு வலயத்திலும் இருந்து மிகச்சிறந்த இணையத்தளத்தை உருவாக்கும் வெற்றியாளர்களும் தெரிவு செய்யப்பட்டு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும்.

அத்தோடு போட்டியில் பங்குபற்றும் அனைவருக்கும் பங்குபற்றியமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (அ-9)

## வெளிநாட்டு நாணயத்தாள்களுடன் இந்தியப் பிரஜைகள் எண்மர் கைது

(கொழும்பு)

48 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளி நாட்டு நாணயத்தாள்களுடன் எட்டு இந்தியப் பிரஜைகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர்.

சென்னை நோக்கி பயணிக்க முற்பட்ட போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக விமான நிலைய சுங்கப் பிரிவு குறிப்பிட்டது.

குறித்த சந்தேக நபர்கள் இந்தப் பணத்தை தமது உடலினுள் மறைத்து கொண்டு செல்ல முற்பட்டதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயங்களில் சவூதி அரேபிய ரியால், அமெரிக்க டொலர் கள் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் அரசுடமையாக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.(ந-9)

## மஹா கும்பாபிஷேகம்


(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிழக்கு திருஅருள்மிகு ஜெகதாம்பிகை சமேத வேத ஆதீஸ்வரர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் என ஆலய பாரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ந-6)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### வேண்டில் வேண்டாமை வேண்டிட வேண்டுமே

நரியை நற்பரி யாக்கிட வேண்டுமே
நானும் நீயுமொன் றாகிட வேண்டுமே
திரிபு ரத்தை யெரித்திட வேண்டுமே
தேவ தேவனைக் கண்டிட வேண்டுமே
பெரியா தம்பணி பேணிட வேண்டுமே
பிறவி யின்பயன் பெற்றிட வேண்டுமே
வறிய னேனையும் வாழ்வித்த அண்ணலே
வாழ்கு ருபர புங்கவ சிங்கமே
வெளியி லேயொளி கண்டிட வேண்டுமே
வீணர் தங்களை விட்டிட வேண்டுமே
சுழியிலே யிருந் தாறிட வேண்டுமே
துரிய வீட்டி லிருந்திட வேண்டுமே
களி கொள் யானையைக் கட்டிட வேண்டுமே
கார ணத்தை யறிந்திட வேண்டுமே
தெளிய வேயருள் காட்டிய தெய்வமே
தேவர் போற்றுங் குருபர சிங்கமே



## நீங்கள் வெறுக்கப்படும்போது மகிழுங்கள்; உங்களுக்கு வானகத்தில் கைம்மாறு காத்திருக்கிறது

இயேசு தனது சொந்த ஊருக்கு வந்தபோது அவருக்குக் கிடைத்த அனுபவத்தை இன்றைய நற்செய்தி வாசகம் விளக்குகிறது. அவருடைய போதனையைக் கேட்ட சொந்த ஊர் மக்கள் அவரை நம்ப மறுத்து ஏற்றுக்கொள்ளத் தயங்கினார்கள். இந்த அனுபவம் அவருக்கு மிகப்பெரிய ஏமாற்றத்தையும் வேதனையையும் அளித்திருக்க வேண்டும்.

### பரமபிதா காட்டிய பாதை

1960ஆம் ஆண்டு சூடான் நாட்டில் மதக்கலவரம் பயங்கரமாக பரவிய போது பாரிடே டபான் என்னும் கத்தோலிக்க இளைஞன் அங்கிருந்து அடுத்திருந்த உகண்டா நாட்டுக்குத் தப்பிச் சென்று விட்டார். உகண்டாவில் குருவானவராக திருநிலைப்படுத்தப் பட்டார். சூடான் நாட்டில் நிலைமை சரியானதும் டபான் தம் நாட்டிற்குத் திரும்பினார். தம் நாட்டில் அவருக்கு ஒரு பங்குத்தளம் பணி செய்வதற்கு அளிக்கப்பட்டது. ஆனால் அங்கிருந்த மக்கள் அவரைக் குருவானவர் என நம்ப மறுத்தார்கள்.

மக்கள் பாரிடே டபானை உற்று நோக்கிவிட்டு அவர் ஒரு கறுப்பு நிறத்தவர். அவர் ஒரு குருவானவர் என எப்படி அழைக்கமுடியும் எனக் கேட்டனர். ஏனெனில், அதுவரை அங்கு வெள்ளையர்களே குருவானவர்க ளாக இருந்து வந்தனர். வெள்ளை நிறத்து குருவானவர்கள் மக்களுக்கு உணவும் ஆடையும் கொடுத்து வந்தனர். டபானோ அந்நாட்டு மக்களினத்தைச் சேர்ந்தவர். அவரிடம் மக்களுக்குக் கொடுப்பதற்கு ஏதுமில்லை. மேலும் அக்காலகட்டத்தில் டபான் இரண்டாம் வத்திக்கான சங்கம் கொண்டு வந்த மாற்றங்களை அமுலாக்க வேண்டியிருந்தது. அந்த மாற்றங்கள் மக்களுக்கு மிகச்சிரமமாக இருந்தன. இந்தக் கறுப்பு நிறக்குரு பீடத்தைத் திருப்பிவிட்டு மக்களை நோக்கி பலிபூசை நிகழ்த்துகிறார். நமது மொழியிலேயே பலிபூசையை நிகழ்த்துகிறார். இவர் உண்மையான குருவானவராக இருக்க முடியாது என அவரை ஏற்றுக்கொள்ள அவர்கள் தயங்கினார்கள். பல்வேறு சிரமங்களுக்குப் பின்னர்தான் அம்மக்கள் டபானை குருவாக ஏற்றுக் கொண்டனர்.

இயேசு தம் சொந்த ஊராகிய நாசரேத்துக்குச் சென்றபோது வெறுத்து ஒதுக்கப்பட்டதன் நவீன கதைதான் குருவானவர் டபான் பட்ட சிரமங்கள் என்று கூறிவிடலாம். இயேசுவும் டபான் என்ற குருவும் மக்களால் ஏளனமான வெறுத்து ஒதுக்கப்பட்ட இரு எடுத்துக் காட்டுக்கள்.

மக்கள் ஒருவர் மற்றவரிடம் இவர் தச்சர் அல்லவா.மரியாவின் மகன் தானே என இழிவாகப் பேசிக்கொண்டனர். அவர்கள் என்ன நினைத்தார்கள். இவரும் நம்மைப்போல் சாதாரண பணியாளர்கள்தானே. நம்மைவிட கடவுளைப் பற்றி இவருக்கு எப்படி இன்னும் அதிகமாகத் தெரியமுடியும் என்று நினைத்தனர். தச்சன் மகனாகிய இயேசுவுக்கு கடவுள் பற்றிய மெய்யறிவு எப்படி வந்தது என்று நாசரேத்தூர் மக்கள் மட்டும் ஆச்சரியப்படவில்லை நாமும் தான் ஆச்சரியப்படுகின்றோம்.



இன்று நம்மோடு பணி செய்பவர்களே நமக்கு எதிரிகளாகச் செயற்படுவதைக் காண்கிறோம். லூனி டியூன்ஸ் என்ற கார்ட்டூன் படத்தில் வரும் ஒரு நாடக பாத்திரம் பேப்பே எல்லோரையும் கவர்ந்த ஒரு கதாபாத் திரம் அவர். ஏனையவர்கள் அவரை வெறுத்தாலும் அன்பு காட்டத் தயங்கமாட்டார்.

**ம.பிரான்சீஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

இயேசுவும் அப்படித்தான். யாரையும் அவர் தள்ளி விடுவதில்லை. இயேசுவை ஏனையவர்கள் மறுதலித்தாலும் வெறுத்தாலும் அவர் விடாது அன்பு காட்டுபவர்.

நாமும் அவ்வாறே பிறர் தம்மை வெறுத்தாலும் தவறாது அன்பு காட்டுவோம். நீங்கள் வெறுக்கப்படும்போது மகிழுங்கள்.

உங்களுக்கு வானகத்தில் மிகப் பெரிய கைம்மாறு காத்திருக்கிறது என்னும் இயேசுவின் வார்த்தைகளை எமது சொத்தாக்குவோம்.

# மீண்டும் டோனி– ஷேவாக் மோதல்



அணித் தலைமையினால் ணத்தை வெல்ல முடியாது அதிரடி வீரர் வீரேந்திர ளார்.

நொய்டாவில் கரிம் கிரிக்கெட் விழாவில் நிருபர் க்கு பதிலளித்த யில்,

நல்ல அணி கிடை திரேலியா ஒரு நேரத் தியது போல்

மட்டுமே உலகக் கிண் என்று இந்திய அணியின் ஷேவாக் தெரிவித்துள்

நேற்று முன்தினம் சபா மைய தொடக்க களின் கேள்வி களு ஷேவாக் கூறுகை

க்கும் போது அவுஸ் தில் ஆதிக்கம் செலுத் செலுத்த முடியும்.

பலமான அணியின் மூலமாகவே உலகக் கி



39 வயதான அவருக்கு டுவது என்பதை இருக்கிறது. ரான அவர்

கூறிய எல். கிரிக் அனைத்துப் டிகளிலும் விளையாடினேன். எனவே உடற் தகுதி பிரச்சினை தற் போது அறவேயி ல்லை. இலங்கையில் நடைபெறும் ஒருநாள் தொடரில் விளையாடுவதி னால் அதன் பின்பு நடைபெறும் ரி 20 கிரிக்கெட் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் எனக்கு உதவும் என்றார்.

எந்த தொடரில் விளையா தீர்மானிக்கும் உரிமை நியூசிலாந்துக்கெதி டெஸ்ட் தொடரில் நிச்சயம் இருப்பார் என்றார்.

தன்னுடைய உடல் நிலை பற்றி சேவாக் ஐ.பி. கெட்டில் போட்

ண்ணத்தை வென்றோம்.

அந்த பின்னணியில் டோனியின் அணித்தலைமை பலமும் சேர்ந்திருந்தது என்றார். இலங்கையில் நடைபெறும் ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கு சச்சின் இல்லாதது பற்றி பேசிய ஷேவாக் நான் மட்டுமல்ல நாடு முழுவதும் டெண்டுல்கரின் ஆட்டத்தைப் பார்க்க முடியாது.

## விளையாட்டுச் செய்திகள்....

# இறுதிப் போட்டியில் ஸ்வான் இல்லை

இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் கிரேம் ஸ்வான் அவுஸ்திரேலியாவுக்கெதிரான இறுதி இரண்டு ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் பங்குபற்றமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவரது வலது முழங்கையில் ஏற்பட்ட உபாதை காரணமாகவே அவருக்கு ஓய்வு வழங்கப் பட்டுள்ளது.

தொடர்ந்து சில காலமாக முழங்கைப் பிரச்சினைகளால் அவதியுற்று வந்த கிரேம் ஸ்வான் அவை மோசமானதாகக் காணப்படாமையால் தொடர்ந்தும் போட்டிகளில் பங்கு பற்றி வந்தார். தற்போது இறுதி இரண்டு போட்டிகளுக்கும் ஓய்வு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

டெஸ்ட் தர வரிசையின் முதலிடத்தைத் தீர்மானிக்கவுள்ள மிக முக்கிய தொடராக தென்னாபிரிக்க- இங்கிலா



ந்து அணிகளுக்கான தொடர் இரண்டு வாரங்களில் ஆரம்பிக்கவுள்ள நிலையில் அத்தொடரில் கிரேம் ஸ்வான் முழுமையான உடற்தகுதியுடன் பங்கு பெறுவதை உறு திப்படுத்தும் விதமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4 ஆவது, 5 ஆவது போட்டிகளுக்கான இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் கிறஸ் வோக்ஸ் மற்றும் சுழற்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் ட்ரெட்வெல் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலிய- இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் இங்கிலாந்து அணி முதலிரண்டு போட்டிகளில் வெற்றிபெற்றதோடு 3 ஆவது போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டிருந்தது.









வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான 17 வயது பெண்களுக்கான மாகாண மட்ட வலைப்பந்தாட்டப் போட்டி அண்மையில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் முதலாம் இடத்தினை யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் இரண்டாம் இடத்தினை அராலி சரஸ்வதி வித்தியாலயமும், மூன்றாம் இடத்தினை கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டன. வெற்றியாளர்களுடன் வடமாகாண கல்வி விளையாட்டு பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் காணப்படுவதனை படங்களில் காணலாம்.

(படங்கள் :- மல்லாவிச் செய்தியாளர்)

# 5வது முறையாக விம்பிள்டன் சம்பியன் ஆனார் செரினா

விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகளின் இறுதி ஆட்டத்தில் 3ஆவது தரவரிசை வீராங்கனை ரட்வன்ஸ்காவை வீழ்த்தி 5ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றார் செரீனா வில்லியம்ஸ்.



முதல் செட்டில் ரட்வன்ஸ்காவின் சேர்வ்களை அபாரமாக உடைத்து 6:1 என்ற கணக்கில் வென்றார் செரீனா.

2ஆவது செட்டில் 4:2 என்ற கணக்கில் முன்னிலை பெற்றிருந்த செரீனாவின் சேர்வ்களை உடைத்து அபாரமாக விளையாடி 7:5 என்ற கணக்கில் 2ஆவது செட்டை வென்றார் ரட்வன்ஸ்கா.

3ஆவது செட்டில் ரட்வன்ஸ்காவின் 2 சேர்வ்களை உடைத்து 6:2 என்ற கணக்கில் வென்று சம்பியன் பட்டத்தை வென்றார் செரீனா.

2002, 2003, 2009, 2010ஆம் ஆண்டுகளில் சம்பியன் பட்டத்தை வென்றுள்ள செரீனா, தற்போதைய வெற்றியையும் சேர்த்து 5ஆவது முறையாக விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. தனது டென்னிஸ் வாழ்க்கையில் செரீனா வெல்லும் 14ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் இதுவாகும்.


உடல்நிலை பாதிப்பு காரணமாக ஒரு வருடத்துக்கும் அதிகமான காலம் தொழில்முறை டென்னிஸ் போட்டிகளிலிருந்து விலகியிருந்த செரீனா, அதன் பின்னர் வெல்லும் முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம் இதுவாகும்.

# சோங்கா-முர்ரே மோதலை பார்க்க ரூ.8 லட்சம் செலவுசெய்த ரசிகர்கள்

(லண்டன்)

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு 2-வது அரையிறுதியில் இங்கிலாந்தின் அன்டி முர்ரே, பிரான்ஸ் வீரர் ஜோ வில்பைரைடு சோங்காவுடன் நேற்று முன்தினம் மோதினார்.

விம்பிள்டன் போட்டிகளில் 3 முறை அரையிறுதியில் தோற்ற முர்ரே, இந்த முறையாவது இறுதிப் போட்டிக்கு முன்னேறி 74 ஆண்டுகால ஏக்கத்தை தீர்ப்பாரா? என்ற எதிர்பார்ப்புடன் இங்கிலாந்து இரசிகர்கள் ஆர்வத்துடன் திரண்டனர்.



இந்த போட்டியைப் பார்க்க ரிக்கெட் ஒன்று ரூ.3 லட்சம் வரை விற்பனையாகி புதிய சாதனையை படைத்துள்ளது. விம்பிள்டன் மையக் களத்துக்கான ரிக்கெட் ஒன்றின் விலை ரூ.20000 மட்டுமே.

இந்த ரிக்கெட்டை ஏற்கெனவே வாங்கியவர்கள், ஒன் லைனில் கொள்ளை லாபத்துக்கு கை மாற்றியிருக்கின்றார்கள்.

இங்கிலாந்தில் நடக்கும் இந்த போட்டியில், 1936 இல் பிரெட் பெர்ரி என்ற உள்ளூர் வீரர் சம்பியன் பட்டம் வென்றார். 1938 இல் ஆஸ்டின் என்ற வீரர் இறுதிப்போட்டி வரை முன்னேறினார்.

அதன் பிறகு இங்கிலாந்து வீரர்கள் யாருமே இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறவில்லை என்பதால்தான், சோங்கா அல்லது முர்ரேக்கு இவ்வளவு மதிப்பு.

# என்னைப் பற்றி டிராவிட்டுக்கு தெரியும்

## கங்குலி

ராகுல் டிராவிட் தலைமையில் இந்திய அணி பெற்ற வெற்றியை கொண்டாடாமல் சில வீரர்கள் அவருக்கு எதிராக செயற்பட்டனர் என்று இந்திய முன்னாள் பயிற்சியாளர் கிரேக் சேப்பல் எழுதியுள்ள புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது குற்றச்சாட்டு குறித்து அப்போதைய அணியில் இடம் வகித்த முன்னாள் அணித்தலைவர் சவுரவ் கங்குலி கூறுகையில், டிராவிட்டுக்கு நான் எதிரானவன் என்ற வகையில் சப்பலின் கருத்து அமைந்திருப்பதாக நான் கருதவில்லை.

அவரின் கருத்து, டிராவிட் மனதில் என்னைப் பற்றிய தவறான எண்ணத்தை ஏற்படுத்தும் என்று நினைக்கவில்லை.

அவர் எழுதிய புத்தகத்தை படித்து பார்த்தேன். புத்தகத்தில் அவர் விருப்பப்படி எதை வேண்டுமானாலும் எழுதலாம். எனவே இதற்கு மேல் அவரை பற்றி கருத்து எதுவும் கூற விரும்பவில்லை என்றார்.

# போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் குறைவடையும் நிலையில்

யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கிற்கான உதவிகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான உதவிகளுக்கான இணைப்புக் காரியாலயம் தெரிவித்துள்ளது.

உதவி வழங்கும் நாடுகள் மற்றும் நன்கொடையாளர்களின் உதவிகள் குறைவடைந்து செல்வதாகவும் அவ்வமைப்பு குறிப்பிட்டுள்ளது.

மிக அத்தியாவசியமான தேவைகளான உணவு, உறையுள், பாதுகாப்பு மற்றும் போசாக்கு போன்றன முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு மூன்றாண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் பெரும்பான்மையான இடம்பெயர் மக்கள் வெளியுதவிகளை பெரிதும் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

இந்நிலையில் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக 147 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாகவும், கடந்த ஜூன் மாதம் மாதம் வரையில் 25 மில்லியன் அமெரிக்க டொலர்களே கிடைக்கப் பெற்றுள்ளதாக அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

இடம்பெயர் மக்கள் தொடர்ச்சியாக உதவி வழங்கும் நிறுவனங்கள் உள்ளிட்ட வெளிச் சக்திகளின் ஒத்துழைப்பைப் பெரிதும் எதிர்பார்க்கின்ற நிலையில் நீர் விநியோகம், நிலக் கண்ணிவெடி அகற்றல், வீடமைப்பு போன்ற தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பெருமளவு நிதி தேவைப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலக உணவுத்திட்டம் வடக்கில் 300,000 பேருக்கு உதவிகளை வழங்கி வருவதாகவும், நிதிப் பற்றாக்குறை காரணமாக தொடர்ச்சியாக உதவிகளை வழங்குவதில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின பல உதவிகள் வழங்கும் முகவர் நிறுவனங்கள் உதவிகளை குறைத்து வருகின்ற நிலையில் நிதிப் பற்றாக்குறைக்கு மேலதிகமாக மேலும் பல சவால் களையும் உதவி வழங்கும் நிறுவனங்கள் எதிர்நோக்கி வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவற்றிற்கு மத்தியிலும் சர்வதேச தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்பு வடக்கு மக்களுக்கு பெரிதும் தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான உதவிகளுக்கான இணைப்புக் காரியாலயம் தெரிவித்துள்ளது. (ந-8,11)

# கிராமத்திட்ட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

புண்ணிய கிராமத்திட்ட ஒருநாள் நற்பண்பு செயலமர்வு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கச்சாய் கண்ணகி அம்மன் ஆலய மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் திருமதி மாலதிராகுலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் கச்சாய் கண்ணகி அம்மன் ஆலயத்துடன் இணைந்து இந்த புண்ணிய ஒருநாள் நற்பண்பு செயலமர்வை தென்மராட்சி பிரதேசத்தில் நடத்துகின்றது.

இந்த செயலமர்வில் பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் கலந்து கொள்ளவுள்ளார் என கச்சாய் கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ந-6)

## சிறுவர் துஷ்பிர...

இலங்கை சிறுவர்கள் தொடர்பில் வெளியிடும் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் இடம்பெற்ற ஊடக கலந்துரையாடலின் போதே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பட்டுள்ளார். (ந-8,11)

## இந்தியாவின் எந்த...

வடக்கில் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை ஐக்கிய நாடுகள் அமைப்பு யுத்தக் குற்றவாளிகள் என அறிவித்து அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ந-8,11)

## மற்றொரு படகு...

தெரிவிக்கப்படுகிறது. இந்தப் படகு வழியில் இடை மறிக்கப்பட்ட போதும் நேற்றுக் காலையில் அது கிறிஸ்மஸ் தீவை சென்றடைந்துள்ளது.

கடந்த காலங்களில் நீண்ட இடைவெளிகளின் பின்னதாக அவுஸ்திரேலியாவை நோக்கிப் பயணிக்கும் தஞ்சம் கோருபவர்களின் படகு தற்காலத்தில் தினம் ஒன்று என அதிகரித்துவிட்டது.

இதன் காரணமாக கிறிஸ்மஸ் தீவில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய கடற்பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக இந்தியா மற்றும் இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியா செல்வோரது எண்ணிக்கை அதிகரித்துள்ளது. (ந-8,11)

## எங்கள் நிலத்தில்...

அரசாங்கத்திற்கும் இராணுவத்திற்கும் எதிரான கோசங்களையும் அவர்கள் பதாகைகளில் எழுதி போராட்டத்தில் பயன்படுத்தினர். இதில் எங்கள் மக்களை வாழவிடு எங்கள் நிலத்திற்கு எங்களை திரும்பவிடு போன்றன பதாதைகளில் இடம்பெற்றிருந்தன. இதேவேளை போராட்டத்திற்கு எதிர்ப்புகள் வரும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இதனிடையே கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுமந்திரன், செல்வம் அடைக் கலநாதன், சிவசக்தி ஆனந்தன், வினோ, சரவணபவன், விநாயகமூர்த்தி போன்றவர்களும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், ஆனந்தசங்கரி போன்றவர்களும் கலந்து கொண்டனர்.

போராட்டத்தினிடையில் தமிழ்தேசியத்திற்காக தொடர்ந்து குரல் கொடுத்துவரும் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது எதிர்வரும் காலத்தில் மக்கள் போராட்டங்கள் பரந்தளவிலும் அழுத்தம் நிறைந்ததாகவும் இடம்பெறும் என குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், வாழ்வுரிமை மாநாட்டின் பின்னர் தமிழர் தாயகப் பகுதிகளிலிருந்து இராணுவம் முற்றாக வெளியேறும் நிலையும் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி வாழும் தமது ஆட்சியுரிமையினையும் நிலைநாட்டும் நிலையும் உருவாக்கப்படும் என முழக்கமிட்டனர்.

மேலும் வடக்கில் யாழ்ப்பாணம் திருமுறிகண்டி, வவுனியா, தெல்லிப்பளை போன்ற இடங்களில் தமிழ்க் கட்சிகள் நடத்தியிருந்த போராட்டங்களில் கலந்து கொண்ட அதிகளவு மக்கள் இந்தப் போராட்டத்தின் போதும் கலந்து கொண்டு தமது உரிமைக் குரலை எழுப்பியிருந்தனர். (ந-8)

## பிரிட்டிஷ் உயர்...

அத்தோடு குடாநாட்டின் பல பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளதோடு பல தரப்பட்டவர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் ஜோன் ரன்கின் கடந்த 2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி அம்பாந்தோட்டைக்கு விஜயம் செய்து, மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டரங்கு, புதிய சர்வதேச விமான நிலையம் போன்றனவற்றை நேரில் சென்று பார்வையிட்டதோடு ஹம்பாந்தோட்டை அரசாங்க அதிபரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

பின்னர் 2011 யூன்மாதம் 22 ஆம் திகதி இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு வருகை தந்த ரன்கின் வவுனியா, கிளிநொச்சி உள்ளிட்ட வன்னி மாவட்டங்களுக்குவிஜயம்மேற்கொண்டுஅங்குள்ளநிலைவரங்களை ஆய்வு செய்திருந்ததோடு இராணுவ உயரதி காரிகளையும் பொதுமக்களையும் சந்தித்து கலந்துரையாடினார்.

மூன்றாவது தடவையாக தென்பகுதியிலுள்ள பல மாவட்டங்களுக்கும்சென்று அங்குள்ளநிலைவரங்களை ஆராய்ந்ததோடு தலதாமாளிகைக்கும் சென்றிருந்தார். இந்நிலையில் தற்போது பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் ஜோன் ரன்கின் யாழ்.மாவட்டத்திற்கு முதல் தடவையாக வருகை தரவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-6)

## நிமலரூபனின்...

தெரிவித்தனர். தமது சொந்த பிரதேசமான வவுனியாவிலேயே தமது மகன் அடக்கம் செய்யப்பட வேண்டும் என அவர்கள் வலியுறுத்திய போதும், தேசிய பாதுகாப்பின் காரணமாக அவரது பூதவுடல் கொழும்பில் புதைக்கப்பட வேண்டும் என்று, அரசாங்கத் தரப்பினர் வாதிட்டுள்ளனர்.

அதன் பின்னர் இந்த பிரச்சினை நீதிமன்றத்திற்கு சென்ற போதும், நீதிமன்றம் அதிகாரிகளின் வாதத்தை ஏற்றுக் கொண்டு நிமலரூபனின் பூதவுடலை கொழும்பு - கடவத்தை மயானத்தில் புதைக்குமாறு உத்தரவிட்டது.

இந்நிலையில மிகப் பெரிய மனித உரிமை மீறல் இது என்று ஆசிய மனித உரிமைகள் ஆணையகம் குறிப்பிட்டுள்ளது. (ந-8,11)

## இன்னும் பல சவால்...

தியத்தலாவ இராணுவ முகாமில் நேற்று ஆரம்பமான இந்த விசேட பயிற்சி முகாம் இன்றைய தினமும் இடம்பெறவுள்ளது.

இங்கு தொடர்ந்து உரையாற்றி ஜனாதிபதி தேசிய பாதுகாப்பை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உறுதிப்படுத்தி பொருளாதார சவாலை வெற்றி கொள்வதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் எனவும் குறிப்பிட்டார். (ந-8,11)

## தேர்தலில் அளித்த...

முன்வைக்கத் தவறியுள்ளதாகவும் பிளேக் குறிப்பிட்டுள்ளார்.

இனப்பிரச்சினை தொடர்பான அதிகளவு குற்றச்சாட்டுக்களை தமிழீழ விடுதலைப் புலிகள் மீது சுமத்தப்பட வேண்டும் என்ற நோக்கில் செயற்பட்ட அரசாங்கம் தீர்வு காண்பதில் முனைப்புக்காட்டத் தவறியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழர் விவகாரங்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் வாக்குறுதிகள் பல இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை என சுட்டிக் காட்டியுள்ளார். உதாரணமாக பாடசாலைகளில் இரண்டு மொழிக் கல்வியை அமுல்படுத்தும் திட்டம் அமுல்படுத்தப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல்வாதி என்ற ரீதியில் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு சராசரியான புள்ளிகளையே வழங்க முடியும் என பிளேக் சுட்டிக்காட்டியுள்ளார். 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி இந்த குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது தமிழர்களும் புத்திஜீவிகளும் கொழும்பு செல்வந்தப் பிரபுக்களும் அதிக விருப்பம் கொண்டிராத போதிலும் பெரும்பான்மையான சிங்கள மக்கள் மரியாதை கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தென் பகுதி மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ கூடுதல் சிரத்தை காட்டி வருவதாக அப்போதைய அமெரிக்கத் தூதுவர் பிளேக் இராஜாங்கத்திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ள குறிப்பில் சுட்டிக்காட்டியுள்ளதாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது. (8-11)

# தமிழர்கள் பெற்ற

இது தொடர்பில் அவ் ஊடகத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வன்னியில் இடம்பெற்ற போர் முடிபுக்கு வந்த பின்னர் இலங்கை அரசு புனர்வாழ்வு என்ற பெயரில் அந்த மக்களை மீண்டும் அடக்க முயற்சித்துள்ளது. இதனால் போரில் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் அவர்களுக்கு கிடைத்த சமாதானம் என்பது வலியுடன் கூடிய ஏமாற்றத்தையே அளித்துள்ளது.

அவர்களது உண்மையான பிரச்சினை என்ன? அதற்காக உரிய தீர்வை எவ்வாறு வழங்க வேண்டும் என்பதை சற்றும் சிந்திக்காமல் அபிவிருத்தி என்ற ஒரு சொல்லில் இலங்கை அரசு பெரும் பணத்தையும் காலத்தையும் இலங்கையின் வடக்கே செலவளித்துக் கொண்டிருக்கின்றது. உண்மையைச் சொல்லப் போனால் இன்னும் அந்த மக்களின் மனங்களை இந்த அரசால் வெல்ல முடியவில்லை என்றே கூறலாம்.

இன்னும் வடக்கு மக்கள் இராணுவத்தினரைக் கண்டால் பயப்பீதியுடனேயே பயணிக்கின்றனர். இதற்கு இராணுவத்தினரின் போருக்குப் பின்னரான எல்லை மீறிய செயற்பாடுகளே காரணமாகும்.

தமது தேவாலயத்தில் ஒரு மெழுகுதிரியைக் கூட கொழுத்துவதற்கு தாம் அனுமதிக்கப்படுவதில்லை எனவும் இவ்வாறு மெழுகுதிரி ஏற்றப்பட்டால் இலங்கை இராணுவம் சந்தேகம் கொள்வதாகவும் அங்கு இருக்கும் தமிழ் ஆசிரியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இன்று யுத்தம் முடிபடைந்து மூன்று ஆண்டுகள் கடந்த பின்னரும் கூட இந்து ஆலயங்கள் மற்றும் பாடசாலைகளில் இடம்பெறும் நிகழ்வுகளில் இராணுவத்தினரின் பிரசன்னம் அதிகமாகவே காணப்படுகின்றது.

இலங்கையின் வடக்கே பொருளாதாரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் அதாவது விவசாயம் செய்தல்,மரக்கறி விற்றல், விடுதிகளை நடத்தல், உணவகங்களை வைத்திருத்தல் மற்றும் சிகை அலங்கரிப்பு நிலையங்களை கூட இராணுவத்தினர் நடத்தி வருகின்றனர்.

இதனால் இராணுவ விஸ்தரிப்பின் அடக்குமுறையின் கீழ் தாம் வாழ்வதாக அங்கு வாழும் தமிழர்கள் உணர்கிறார்கள் இதுதான் உண்மையும் கூட.

மேலும் தமிழர் பிரதேச அபிவிருத்தித் திட்டங்களில் தமிழ்ப் புத்திஜீவிகளின் கருத்துக்கள் ஏற்கப்படுவதில்லை. மாறாக அவை மறுக்கப்பட்டு பெரும்பான்மை தரப்புக்களால் எடுக்கப்படும் தீர்மானமாக மாற்றப்படுகின்றது. இதனால் பல அபிவிருத்தி திட்டங்கள் தமிழ் மக்களிற்கு சிறிதும் பொருந்தாதனவான உள்ளன.

இப் பிரச்சினைகளில் உள்ள உண்மைக் குறைபாட்டை நிவர்த்தி செய்யாது சர்வதேசத்தின் கேள்விகளுக்காக பொய்யான அபிவிருத்தியை மேலும் வளர்த்து கொண்டு செல்வது உண்மையான வெற்றியை ஒருபோதும் தராது.

எனவே இலங்கை அரசு முதலில் தமிழ் மக்களின் மனங்களை வெல்வதற்கான உண்மையான செயல்முறையாக வடக்கில் அதிகமாக காணப்படும் இராணுவப் பிரசன்னத்தை குறைத்து கொண்டு செல்வது தான் அதன் தொடக்கப்படி எனவும் அவ் ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ந-8)

யாழ்ப்பாணம் மற்றும் நெல்லியடியில் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்!!!
Diploma in Mobile Phone Repairing (Hardware & Software)
சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான சுயதொழில் வாய்ப்பு பயிற்சி நெறி!!
வகுப்பு ஆரம்பம் :- வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு
உடன் பதிவுகளை மேற்கொள்ளவும் !!!
மேலதிக விபரங்களுக்கு :-
UNI - ICT Campus
No :- 83, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P :- 021 321 6433 / 0777 110 862


தென்னிந்திய இசை நிகழ்ச்சிகளை உங்கள் ஆலயங்களிலோ அல்லது மங்கலகரமான விழாக்களிலோ நடாத்த விரும்புகிறீர்களா?
பிரபல தென்னிந்திய பாடகர், பாடகிகள் பிரபல நடிகர், நடிகைகள், விஜய் TV சுப்பர் சிங்கர்ஸ் கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளையும், பக்தி, கர்நாடக இசைக் கச்சேரிகளை உங்கள் பிரதேசங்களில் நடத்த விரும்புவோர் தொடர்புகளுக்கு:
சிலோன் ஆர்ட் கிறியேஷன்ஸ்
(இவன்ற் மனேஜ்மென்ற்)
0772316565
(8546)

வியப்பான வியாபார விருத்திக்கு வின்றிச் ஐஸ்கிறீம் இயந்திரம்
50,000/- மேல் மாத வருமானம்
❋ சோயா வெனிலா சொக்லட் சுவைகள்
❋ நவீன தொழில் நுட்பம்
❋ இலவச பயிற்சி
❋ விற்பனையின் பின் சேவை
விலை ரூ.99,000/- இல் இருந்து
ஒரு வருட உத்தரவாதம்
புத்தம் புதியது



WINRICH INTERNATIONAL (PVT) LTD
(Member of pluss int.)
No.18,Ground floor, Lucky plaza, st.Anthony's Mawatha Kollupitiya, Colombo 03, Srilanka
தமிழில் தகவல் பெற (யோகேஸ்)
Hot line:- 077 391 8870 , 077 106 6902

மாபெரும் விசேட விலைக்கழிவு
Jet D Express Courier Service
விரைவு பாதுகாப்பு உத்தரவாதம்
உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடைய
Germany Over 10kg - 800/=
France Over 10kg - 850/=
UK Over 5kg - 1000/=
UK Over 10kg - 750/=
Germany 1kg -900/=
UK 1kg -500/=
Swiss 1kg -500/= * 25kg மேற்பட்ட பொருட்களுக்கு 450/= அறவிடப்படும்
France 1kg -500/=
Canada 1kg -600/=
மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு விசேட கட்டணச்சலுகையுடன் ஏனைய நாடுகளுக்கும் வழங்கப்படும்
Note : * கடலுணவு வகைகள் எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும் வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
இல 27, முதலாம் மாடி, நவீன சந்தை, (தனம்ரெக்ஸ் மேல்) யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 221 9150, 0772187 301
No:77E, Manning Place, Wellawatta, Colombo 06,
T.P:- 0112363873
0776509909





தேவை
'ரிக்சர் செய்யக் கூடியவர்களும் பழக விரும்புபவர்களும் தேவை.
தொடர்பு:
0776042858
(C-442)

Vacancy
யாழ்., நெல்லியடி கிளைகளுக்கு
★Receptionist
★ Typist
★ Office Staff (நெல்லியடி கிளைக்கு)
திங்கட்கிழமை நேரடியாக வரவும்.
திருமுருகன் கொம்நெற்
259, K.K.S Road, Jaffna.
T.P.:021 222 7835
(C-441)

உலகம் முழுவதும் 29 நாடுகளின் பல்கலைகழக வலைப்பின்னலைக் கொண்டுள்ள
INTI INTERNATIONAL UNIVERSITY
LAUREATE INTERNATIONAL UNIVERSITIES
வழங்கும்
UK, Australia, Canada, America
பல்கலைக்கழக கற்கைநெறி அனுமதிகள்



முற்பதிவுகளுக்கு 021 300 80 60
UNIVERSITY OF BRADFORD
THE UNIVERSITY OF WOLLONGONG AUSTRALIA
BlueMountains
University of Hertfordshire
வெளிநாட்டுப் பல்கலைக்கழகக் கல்வியில் நாட்டமிருந்தும் புதிய விதிமுறைகள், கட்டுப்பாடுகளால் தடுமாறுவோருக்கு
முற்றிலும் உத்தரவாதமான புதிய வழிமுறைகள்
பெருந்தொகைப் பணச் செலவு
IELTS
வங்கிப்பணம்
தூதரக நேர்முகத்தேர்வு
இல்லை
ஏற்கனவே அனுமதி பெற்று ஓகஸ்டில் செல்லவுள்ள மாணவர்களுடன்,
இணைந்து பயணிக்க முந்துங்கள்
MEDIA
சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டல் பிரிவு
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 8060 நேரடி: 0773 616 798

02-07.2012 - 10.07.2012 வரை
விஷேட விலைக் கழிவுடன்
LANKATILES
HUIDA
GROHE
American Standard



முதல் தர லங்கா ரைல்ஸ்,
உயர் தர இறக்குமதி செய்யப்பட்ட
நவீன ரக குளியலறை சாதனங்கள்
மற்றும் இணைப்புக்கள் இன்னும் பல...
நாராயணா
கட்டடப் பொருட்கள் வர்த்தகர்
115, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
021 567 8157
021 222 5390

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.